2017 மே 16
செவ்வாய்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஷஃபான் பிறை 19 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 073

NAVAMANI DAILY
நவமணி දිනපතා
QD / 154 / NEWS / 2017

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்





04» அரசியல் தீர்மானங்களை அச்சமின்றி எடுப்பேன்



09» இன நல்லிணக்கத்திற்கு சவாலாகும் வியாபார வர்த்தகப் போட்டிகள்

டெஸ்ட் வெற்றியுடன் மிஸ்பா, யூனிஸ் ஓய்வு 12»

## எம்.பி. பதவியில் கீதா நீடிக்கலாம்




■ அ.அருண் பிரசாந்த்

இரட்டைப் பிரஜாவுரிமை இருக்கின்ற காரணத்தினால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்குமாறு கீதாகுமாரசிங்கவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றினால் விடுக்கப்பட்ட தீர்ப்பானது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பில் உயர்நீதிமன்றில் கீதாவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரையிலேயே இத்தீர்ப்பு நேற்றைய தினம் இடைநிறுத்தப்பட்டது.

அதற்கிணங்க, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாவட்ட உறுப்பினரான கீதா குமாரசிங்கவுக்கு பாராளுமன்ற உறுப்பினராகத் தொடரக்கூடிய சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது.

11 »»»»

# மே தின சனத்திரளைக் காட்டி நல்லாட்சியை கவிழ்க்க முடியாது



## ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்

■ அ.அருண் பிரசாந்த்

மே தினத்தன்று காலி முகத்திடலுக்கு வருகை தந்த மக்கள் கூட்டத்தினரையெல்லாம் வைத்துக் கொண்டு எமது அரசை ஒருபோதும் கவிழ்த்துவிட முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அத்தோடு மதப் பின்னணி, சமூக முறைமை, இன விகிதாசாரம், கலாசார விழுமியங்கள், மக்களின் பிரச்சினைகள் போன்றது தான் தேர்தலின்போது அதிக வாக்குகள் கிடைக்க காரணமாக இருக்கின்றனவே ஒழிய, கூட்டத்துக்கு வருகை தந்த மக்களின் எண்ணிக்கையால் தேர்தலின் பிரதிபலனை கணித்துவிட முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மகாவலி பிரதேச வாசிகளுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கிவைக்கும் நிகழ்வானது நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் வருமாறு,

எமது அரசை கடந்த சில நாட்களாகவே சில தரப்பினர் மிகவும் கீழ் மட்டத்தில் விமர்சித்து வந்தனர். மே தினத்தன்று காலி முகத்திடலுக்கு வருகை தந்திருந்த மக்களின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டே எமது அரசை கவிழ்த்து புதிய அரசொன்றை ஸ்தாபித்துவிட முடியும் என்று அவர் நினைத்துவிட்டனர். இந்தியப் பிரதமரின் ஹட்டன் விஜயத்தின்போதும் தான் இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர். அதுவும் வெறும் ஒரு மாவட்டத்திலிருந்து தான் அவ்வளவு மக்கள் வந்திருந்தனர். ஏன், ஜனாதிபதித் தேர்தல் நேரத்தின்போதும் எனது கூட்டங்களை விட யாருடைய கூட்டத்துக்கு அதிகமாக மக்கள் சென்றார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

11 »»»»

## அஸ்மினுக்கு பதிலாக பிறிதொரு முஸ்லிமை நியமிக்க முடியாது

### யாழ். உதவி தேர்தல் ஆணையாளர்

வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினை நீக்கிவிட்டு அவ்விடத்திற்கு புதிய ஒரு முஸ்லிம் உறுப்பினரை நியமிக்க உத்தேசித்துள்ளதாக ஊடக அறிக்கை மூலம் அறிவித்திருந்தது. இது தொடர்பில் அய்யூப் அஸ்மின் பதவி விலகக்கூடாது என்று வடக்கின் பல்வேறு சமூக அமைப்புகளும், அரசியல் பிரமுகர்களும் கருத்து

11 »»»»

## வேலை நிறுத்தங்களால் சைட்டமிற்கு தீர்வில்லை

### பிரதி அமைச்சர் ஹெரான்

■ அ.அருண் பிரசாந்த்

வேலை நிறுத்தப் போராட்டங்களை மேற்கொண்டு சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி விவகாரத்துக்கு ஒரு போதும் தீர்வினைக் காண





அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் ஸ்தாபகர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசியல் அமைப்பு சவால் பற்றிய கருத்தரங்கு நேற்று மாலை தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல உரையாற்றுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க சம்மேளனத் தலைவர் கலாநிதி பீ.எம். பாரூக், நவமணி ஆசிரியர் என்.எம். அமீன் உட்பட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் - ஏ.எஸ்.எம். ஜாவித்)

## இலங்கை இந்தியாவின் மாநிலம் மோடி உரையில் உறுதி

### உதய கம்பன்பில கருத்து



■ அ.அருண் பிரசாந்த்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆற்றிய உரையிலேயே இலங்கையானது இந்தியாவின் ஒரு மாநிலமாக மாறப்போகிறது என்பது உறுதியாகியுள்ளது என்று ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினரும் பிவிதுரு ஹெல உறுமயக் கட்சித் தலைவருமான உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

அத்தோடு, ஒருங்கிணைந்த எதிரணியான தாம் மே தினத்தின்போது காலி முகத்திடலுக்கு பல்லாயிரக்கணக்கான மக்களைக்

11 »»»»

## சின்னவில்பட்டி முஸ்லிம் கிராமத்தில் பொதுபலசேனா,ராவணா அட்டகாசம்

### 5 மாட்டுப் பண்ணைகளுக்கு சேதம்

### முஸ்லிம்களை வெளியேறுமாறும் எச்சரிக்கை



■ ஆதில் அலி சப்ரி

பொலன்னறுவை தம்பாளை, சின்னவில்பட்டி பகுதியில் அத்துமீரிய பொதுபலசேனா மற்றும் ராவணா பலய அமைப்பினர் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 5 மாட்டுப் பண்ணைகளை தாக்கி சேதப்படுத்தியுள்ளதாகவும், முஸ்லிம்கள் வெளியேற வேண்டுமென்று அச்சுறுத்தல் விடுத்ததாகவும் பிரதேச விவசாய சங்க தலைவர் நூர்தீன் தாஹிர் தெரிவித்தார்.

கடந்த ஞாயிறன்று பிற்பகல் 1.10 அளவில் பொதுபல சேனா மற்றும் ராவணா பலய அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலகொடஅத்தே ஞானசார

11 »»»»

## 'அல்லாஹ்'வை கடுமையாக தூற்றிய ஞானசார தேரர்

### பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு

■ ஆதில் அலி சப்ரி

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் முஸ்லிம்களின் இறைவன் அல்லாஹ்வை தூற்றி மேற்கொண்ட உரைக்கு எதிராக சிவில் சமூக செயற்பாட்டாளர் அன்வர் மனதுங்க பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று பொலன்னறுவை தம்பாளை, சின்னவில்பட்டி பகுதியில் பௌத்த புராதன சின்னங்கள் அழிக்கப்படுவதாக கூறிக்கொண்டு களவிஜயமொன்றை மேற்கொண்டிருந்த அவர் இறுதியாக உரையாற்றும்போது இவ்வாறு தூற்றியுள்ளார்.

11 »»»»

# மு.கா.வுக்கு அதிகாரம் கிடைத்ததன் பின் கிழக்கு மாகாணத்தில் அதிக அபிவிருத்திகள்

## மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறுக்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசினால் ஆரம்பித்து வைக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் முழுமைப்படுத் தப்படுவதில்லை என்ற ஒரு கருத்து மாற்றமடைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையில் நாளுக்கு நாள் தொடர்ச்சி யாக பல்வேறு வேலைத் திட்டங்களை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கின்ற ஒரு நடைமுறை தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறுக் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் 2016ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் நெல்சிப் வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஓட்டமாவடி மீன் சந்தை கட்டிடம் மற்றும் ஓட்டமாவடி பஸ் தரிப்பு நிலையம் என்பனவற்றை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் செயலாளர் ஜே. சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறுக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாணத்தினுடைய ஆட்சியினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொறுப்பேற்று வெறுமனே இரண்டு வருடங்களும் இரண்டு மாதங்களும் பூர்த்தியான நிலையில் பத்து வருடங்களில் செய்யப்படக்கூடிய அபிவிருத்திற்கு நிகரான அபிவிருத்திகளை நாங்கள் கிழக்கு மாகாணத்தில் தற்போது செய்திருக்கின்றோம்.

குறிப்பாக எமது அபிவிருத்திப் பயணத்தில் கல்குடா பிரதேசம் என்றுமில்லாதவாறு பாரிய அபிவிருத்திகளை தற்போது கண்டு வருகின்றது. மிகவும் குன்றும் குழியுமாக காணப்பட்ட இந்த இடத்தில் மிகவும் குறுகிய காலப்பகுதியில் சிறந்த முறையில் பஸ் தரிப்பு நிலையம் ஒன்றினை அமைத்து இன்று மக்கள் பாவனைக்காக கையளித்திருக்கின்றோம்.

மேலும் கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரம் போன்ற அனைத்துவிதமான அபிவிருத்திகளும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கரஸினூடாக மிகவும் நேர்த்தியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு தொடர்ச்சியாக கிழக்கு மாகாணம் பூராக மேலும் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க வுள்ளோம்.

கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது எமது முஸ்லிம் பிரதேசங்கள் ஒற்றுமையாக செயற்பட்டதன் மூலம் கிடைக்கப் பெற்ற மாகாண சபை உறுப்பினர்களினூடாக இந்த மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் வளப்படுத்தப்பட்டு அதனூடாக இந்த மாகாணம் பாரிய அபிவிருத்திகளைக் கண்டு வருகின்றது.

எனவே மக்கள் எங்களுக்கு வழங்கிய அதிகாரங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தி களை மேற்கொள்வது மாத்திரமல்லாமல் இந்த நாட்டில் எமது சமூகத்தினுடைய உரிமை மற்றும் சுயாதீனத்தன்மை என்பனவற்றை பாதுகாப்பதற்காகவும் போராடிக்கொண்டிருக் கின்றோம் என்றார்.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் பொறியியலாளர் நசீர் அஹமட் அவர்களும் கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறுக் அவர்களும், ஏனைய அதிதிகளாக கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை தவிசாளர் கே.பி.எஸ். ஹமீட், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே. சித்திரவேல், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ். எச்.எம். இஸ்மாயில், இலங்கை போக்குவரத்து சபையின் வாழைச்சேனை சாலை முகாமையாளர் எம்.ஐ.எம். அலிப், கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம். அஹமட் லெப்பை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் முகைதீன் அப்துல் காதர் அவர்களின் புதல்வர் முகைதீன், கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை செயலாளர் ஜே. சர்வேஸ்வரன், கோறளைப்பற்று பிரதேச சபை செயலாளர் எஸ்.எம். சிஹாப்தீன் மற்றும் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபை செயலாளர் எஸ். இந்திரகுமார், கல்குடாத் தொகுதி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.எம். நிபாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சாய்ந்தமருது அல்-கமறூனுக்கு மல்டிமீடியா புரெஜெக்டர் தொகுதி



**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

சாய்ந்தமருது அல்-கமறூன் வித்தியாலய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர் பீட உறுப்பினரும் கட்சியின் அம்பாறை மாவட்ட பொருளாளரும் யஹியாகான் பவுண்டேசன் தலைவருமான ஏ.சி.யஹியாகான் மல்டிமீடியா புரஜெக்டர் தொகுதியொன்றை அன்பளிப்பு செய்துள்ளார்.

இது தொடர்பான நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஐ.நிபாயிஸ் தலைமையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் ஏ.சி.யஹியாகான் பிரதம அதிதி யாக கலந்து கொண்டு குறித்த இயந்திரத் தொகுதியை கையளித்தார்.

நிகழ்வில் அவர் உரையாற்றுகையில், தான் ஆரம்ப கல்வி கற்ற இப்பாடசா லைக்கு உதவுவதில் பெருமிதமடைகின் றேன். இப்பாடசாலையின் குறைபாடுகள் பற்றி அதிபர் மூலமாக அறிந்து கொண் டேன். எதிர்காலத்தில் விளையாட்டுத் துறை பிரதியமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸு டன் இணைந்து இப்பாடசாலையினை முன்னேற்றுவதற்கு முயற்சிகள் மேற் கொள்வேன்.

முன்னர் இப்பாடசாலையில் முக்கிய தேவையாகவிருந்த திறந்த மேடை ஒன்றினை மிகவும் சவாலுக்கு மத்தியில் அமைத்துக் கொடுத்தேன். அதேபோன்று எதிர்காலத்திலும் என்னால் முடியுமான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க உறுதி பூண்டுள்ளேன் என குறிப்பிட்டார்.

'இப்பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களில் அதிகமானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்கள். இவர்கள் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். ஆகவே இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் இதன் அபிவிருத்தியில் அக்கறை எடுக்க வேண்டும் என அதிபர் எம்.ஐ.நிபாயிஸ் வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்வின்போது சாய்ந்தமருது கல்விக் கோட்டத்தில் ஆரம்பக் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பது சம்பந்தமான எதிர்கால திட்டம் அடங்கிய மகஜர் ஒன்றும் பிரதம அதிதியிடம் கையளிக்கப்பட்டது. இதில் ஆசிரியர் ஆலோசகர் எஸ்.சஹ்ருன், செயற்திட்ட உத்தியோகத்தர் ஏ.எல்.ஏ.ராசி க் உட்பட பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்றில் மார்க்கச் சொற்பொழிவு





**(றிசாத் ஏ.காதர்)**

றாபிதத்து அஹ்லுஸ்ஸுன்னா அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் றமழானை முன்னிட்டு மாபெரும் மார்க்க சொற்பொழிவு நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று கடற்கரை திறந்த வெளியரங்கில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று தீனா பெண்கள் அறபுக் கல்லூரியின் பணிப்பாளர் அஷ்ஷேஹ் அஜுர்(ஷஹ்வி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் றாபித த்து அஹ்லுஸ்ஸுன்னா அமைப்பின் தலைவரும், கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான டாக்டர் ரவூத்தீன்(ஷரயீ), உண்மை உதய ஆசிரியர் அஷ்ஷேக் இஸ்மாயில்(ஸலபி) மற்றும் மருதமுனை தாறுல் ஹுதா பெண்கள் அறபுக்கல்லூரியின் பணிப் பாளர் கலாநிதி அஷ்ஷேக் முபாறக் (மதனி) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மேற்படி மார்க்க சொற்பொழிவு நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை புஹாரி வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்கள் பாதிப்பு

**(கந்தளாய் எப்.முபாரக்)**

திருகோணமலை வான்எல புஹாரி மஹாவித்தியாலயத்தில் நீண்ட நாட்க ளாக ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவ தாக பெற்றோர்கள் கவலை தெரிவிக் கின்றனர். கணிதம், விஞ்ஞானம், தமிழ், உளவளத்துணை போன்ற பாடங்களுக்கே மிக நீண்ட நாட்களாக ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பிரச்சினை தொடர்பாக கடந்த பல நாட்களாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கொண்டு சென்றும் இது வரை அவ்விடயத்தில் கரிசனை காட்டாமல் இருக்கின்றார்கள் எனவும் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் தங்கள் பிள்ளைகளின் கல்வி நிலை பாதிப்படைவதாகவும் தெரிவிக்கின்றனர். சுமார் 438 மாணவர்கள் கல்வி பயில்கின்ற இப்பாடசாலையில் உயர்தரப் பிரிவும் காணப்படுகின்றது. குறிப்பாக முக்கியமான பாடங்களுக்கே ஆசிரி யர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் இதனால் பிள்ளைகளின் சாதாரண தரப் பெறுபேறுகளிலும் உயர்தர பரீட்சை பெறுபேறுகளிலும் மோசமான நிலை ஏற்படலாம் எனவும் பெற்றோர்கள் அச்சம் கொள்கின்றனர் . எனவே இவ்விடயம் தொடர்பாக ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்க துரித நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட தரப்புகளை கேட்டு நிற்கின்றனர்.

இவ்விடயத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் அக்கறை காட்டி இவ்விடயத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் நலன் கருதி உரிய தீர்வினை பெற்றுத்தருமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தீக்காயங்களுடன் பெண் வைத்தியசாலையில் அனுமதி

**(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

மட்டக்களப்பு, ஏறாவூர் - மிச்நகர் கிராமத்திலுள்ள வீடொன்றில் இருந்து தீக்காயங்களுக்குள்ளான பெண் ஒருவர் முன்னதாக ஏறாவூர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஐந்து பிள்ளைகளின் தாயான 40 வயதுடைய குடும்பப் பெண்ணொருவரே இந்த ஆபத்தில் சிக்கியுள்ளதாகத் தெரிவித்த ஏறாவூர் பொலிஸார் இச்சம்பவம் தற்கொலை முயற்சியா அல்லது கொலை முயற்சியா என்பது பற்றி தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

# வாசகர் கடிதம்

## அக்கரைப்பற்று பிஸ்கால் வீதியை திருத்த நடவடிக்கை எடுப்பார்களா?

**(அக்கரைப்பற்று விசேட நிருபர்)**

வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான அக்கரைப்பற்று மாநகரசபைக்குட்பட்ட பிஸ்கால் வீதியானது உடைந்து கிடப்பதனால் வாகனங்கள் மற்றும் பொது மக்கள் செல்ல முடியாமல் கவனிப்பாரற்றுக் கிடப்பதனை படத்தில் காணலாம். மேலும் இது மிக அண்மைக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீதி என்பது குறிப்பிடத்தக்கது.



## பல் வைத்திய அதிகாரி இன்மையால் மன்னார் பெரியமடு நோயாளர்கள் அவதி

**(பாலாவி விசேட நிருபர்)**

மன்னார் பெரியமடு வைத்தியசாலை யில் நீண்ட காலமாக பல் வைத்திய அதிகாரி இன்மையால் பல நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டுக்கு முன் இவ் வைத்தியசாலையில் ஒரு மருத்துவ வைத்திய அதிகாரியும் ஒரு மருந்து கலவையாளரும் கடமை புரிந்துவந்தனர். தற்போது இவ்வைத்தியசாலை நவீன அமைப்பில் புதுப்பிக்கப்பட்டு மருத்துவ வைத்திய அதிகாரியும் மருந்து கலவையாளரும் 10 க்கு மேற்பட்ட பணியாளர்களும் 24 மணி நேர அம்புலன்ஸ் வண்டி சேவை யில் ஈடுபட்டுட வருகிறது. அத்துடன் கர்ப்பிணிகளுக்கான பரிசோதனையும் நடைபெற்று வருகிறது.

இத்தனை அமைப்புகள் கொண்ட இவ்வைத்தியசாலையில் பல் வைத்திய அதிகாரி இல்லாத காரணத்தினால் மன்னார் தள வைத்தியசாலைக்குச் செ ன்று பெரும் கஷ்டத்தின் மத்தியில் வரிசையில் காத்துநின்று பல் கழற்றி விட்டு காட்டு யானையின் தொல்லைக்கு அச்சம் கொண்டு மாலை நேரம் வீடு வந்து சேருகின்றனர்.

எனவே இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவிடயத்தில் கவனம் செலுத்தி பல் வைத்திய அதிகாரியை நியமிக்கும் படி இப்பிரதேசவாசி கள் பல் நோயாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## தேசிய அடையாள அட்டை சம்பந்தமாக மட்டு. காரியாலயத்திற்கு தொடர்பு கொள்பவர்களுக்கு அவமதிப்பு

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் கிழக்கு மாகாணத்துக்குரிய விண்ணப்பங்கள் யாவும் மட்டக்களப்பு காரியாலயத்திற்குச் சென்று அங்கிருந்து கொழும்பு காரியாலயத்திற்குச் செல்லும் வழமையொன்று உள்ளது.

மேலும் இது சம்மந்தமாக (0652229449) என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்தால் அழைப்பினை மேற்கொள்பவரின் அழைப்பிற்கு பதிலளிப்பது மிக அரிது பதிலளிக்கும் பட்சத்தில் கடந்த வருடம் அனுப்பியிருந்தவருக்குகூட இந்த மாத கடைசியில் வரும் இந்த மாத கடைசியில் வரும் என சொல்லிவிட்டு தொலை பேசியை வைத்துவிடுவார்கள் அவர்களின் விபரங்களை சொல்வ தற்குக்கூட அவகாசம் கொடுப்பதில்லை இவ்வாறான மக்கள் சே வைப்பணியாளர்களை பணியிலிருந்து நீக்க வேண்டுமென மக்கள் ஆவேசப்படுகின்றனர்.

இதற்கு ஆட்பதிவு பிராந்திய ஆணையாளர் உள்நாட்டு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பொது நிர்வாக அமைச்சர் ஆகியோர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**பிரதி செவ்வாய்க்கிழமை நாட்களிலும் வாசகர் கடிதம் பிரசுரமாகும். உங்கள் பிரச்சினைகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்பவும்.**
**வாசகர் கடிதம்**
**நவமணி**
**156, ஆஸ்பத்திரி வீதி,**
**தெஹிவளை.**

# அட்டாளைச்சேனை பாடசாலையில் பாராளுமன்ற தேர்தல்





**(அட்டாளைச்சேனை எம்.ஏ.றமீஸ்)**

கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக் கமைவாக அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட மாணவர் பாராளுமன்றத் தேர்தல் நேற்று (15) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் ஏ.எல். கமறுதீன் தலைமையில் பாராளுமன்றத் தேர்தலுக்கமைவான சட்ட திட்டங்க ளுக்கேற்ப நடைபெற்ற இத்தேர்தலின் வாக்களிப்பு காலை 7.30 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை இடம்பெற்றது. பாடசாலையில் உள்ள சுமார் இரண்டாயிரம் மாணவர்களிடையே 180 மாணவர்கள் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

120 பாடசாலை மாணவர் பாராளு மன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வகையில் நடைபெற்ற இத்தேர்தலின் போது மாணவர்கள் மிகுந்த உற்சாகத் துடன் வாக்களித்ததைக் காண முடிந்தது.

மாணவர்கள் மத்தியில் வாக்களிப்பு முறை பற்றியும் ஜனநாயக அடிப்படையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது பற்றியும் அமைந்த இத்தேர்த லின்போது தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற மாதிரியை ஒத்ததாக அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற அமர்வில் எதிர்வரும் திங்கட்கிழமை கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன மாநாட்டின் மூலம் அனைத்து நாடுகளுக்கும் நன்மை


## மாநாட்டில் பிரதமர் ரணில் உரை











அதிக வருமானமுள்ள பொருளாதாரம் மற்றும் துரித பொருளாதார அபிவிருத்தி ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து சர்வதேச வர்த்தக வளர்ச்சியை புதிய பிரவேசத்திற்குள் நுழைய ஒரே கரையோரம் ஒரே பாதை மாநாட்டின் மூலம் அனைத்து நாடுகளும், அனைத்து மாகாணங்களும் பல நன்மைகளை பெறமுடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சீனா, பீஜிங் நகரில் நேற்றையதினம் நடைபெற்ற ஒரே கரையோரம் ஒரே பாதை எனும் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிராந்திய பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பு மிக்க அறக்கட்டளையாக அமைவது இந்திய பெருங்கடலில் சுதந்திரமான கடற்பயணமாகும். இந்த முயற்சி வெற்றியளிப்பது இந்திய பெருங்கடலின் பேண்தகு அமைதி மற்றும் ஸ்தீரதன்மையினால். அதனால், அமைதியான மற்றும் இராணுவ தொடர்புகள் இல்லாத ஊக்குவித்தல் மற்றும் கட்டுப்பாடுகள் இல்லாத பலதரப்பு வர்த்தக நடவடிக்கைகள் வணிகரீதியில் செயற்படுத்தி செல்வது சிறந்ததாக அமைகின்றது.

இலங்கை அரசு அனைத்து நாடுகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தவே முயற்சி செய்து வருகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிக்காட்டலின் கீழ் தேசிய அரசாங்கத்தின் கீழ் இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளின் ஒன்றிணைவால் நாட்டின் அனைத்து மக்களும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சௌபாக்கியம் பெற்றுக்கொள்ள இம்மாநாடு நன்மையளிக்கின்றது.

இலங்கையில் பிரதான மூன்று துறைமுகங்கள் உள்ளன. கொழும்பு, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மற்றும் இரண்டு விமானநிலையங்கள் உள்ளன, கொழும்பு மற்றும் மத்தல ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்த முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டது சீனா ஜனாதிபதியினால், ஆனாலும் அந்த உரிமைகள் அனைத்தும் எமக்கே உரியது. அதனால் நாங்கள் அனைவரும் இம் முயற்சியின் பங்காளர்கள் என்றே கூறுவேன் எனத் தெரிவித்தார்.

## சுவிஸ் மாநாட்டில் அமைச்சர் ராஜித



சுவிச்சர்லாந்தில் ஜெனிவா நகரில் நடைபெறவுள்ள உலக சுகாதார அமைப்பின் 70 ஆவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன விஜயம் செய்யவுள்ளார்.

குறித்த மாநாடு எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின் போது அமர்வில் சுகாதார அமைச்சர் விசேட உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளதோடு, பொதுநலவாய மாநாட்டில் சுகாதார அமைச்சர்களின் கூட்டத்திலும் கலந்துகொள்ளவுள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய சுகாதார அமைச்சர்கள் மாநாட்டின் போது முன்வைக்கப்பட்ட கொழும்பு பிரகடனம் இம்முறை மாநாட்டில் முன்வைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அனைத்து பெண்கள் அனைத்து பிள்ளைகள் என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெறும் இம்மாநாட்டில் கர்ப்பகாலத்தில் சிறுநீரக நோய்க்கு முகம் கொடுக்கும் பெண்கள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறவுள்ளது.

## டெங்கு ஒழிப்பு செயலணிக்கு ஜனாதிபதி அவசர அழைப்பு

டெங்கு நோய் வேகமாக பரவுவது தொடர்பாகவும் அந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாட டெங்கு ஒழிப்பு செயலணியுடனான ஒன்று கூடல் இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

2017 ஆம் ஆண்டு இதுவரையில் (மே 15) நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 44 ஆயிரத்து 623 பேர் வரை அதிகரித்துள்ளதுடன், 115 பேர் உயிரிழந்துள்ளனர்.

2014 ஆம் ஆண்டு 47 ஆயிரத்து 246 டெங்கு நோயாளர்களுள் 97 பேர் உயிரிழந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு 29 ஆயிரத்து 777 நோயாளிகளும் 60 மரணங்களுமாகக் குறைப்பதற்கு சுகாதார மற்றும் நோய் தடுப்பு பிரிவுக்கு முடியுமாக இருந்தது.

மீண்டும் 2016 ஆம் ஆண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 55 ஆயிரத்து 150 வரை அதிகரித்துள்ளதுடன், 90 மரணங்கள் பதிவாகியுள்ளன.

மேலும் நோயாளர்கள் மற்றும் நுளம்புக்குடம்பிகள் தொடர்பான தரவுகளுக்கேற்ப கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் இடர் பிரதேசங்களாக அடையாளங் காணப்பட்டுள்ளன.

இந்த ஆபத்தான நிலைமையைக் கவனத்திற்கொண்டு டெங்கு பரவுவதை உச்ச அளவில் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய உடனடித் தீர்வுகள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப் படவுள்ளது.

## பஷில் வழக்கு ஒத்திவைப்பு

திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான நிதியை மோசடி செய்த சம்பவம் குறித்து முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ உள்ளிட்ட சிலருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முறைப்பாடு குறித்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் உரிய முறையில் பிரதிவாதிகளுக்கு கிடைக்கப் பெறவில்லை என, இதன்போது பிரதிவாதி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி குறிப்பிட்டார்.



குறித்த வாக்குமூலத்தை பெற்றுக் கொடுப்பதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வாக்குறுதி அளித்தார்.

இதற்கமைய, வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி வரை ஒத்திவைக்க, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.ஹெய்யந்துடுவ உத்தரவு பிறப்பித்தார்.

## களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகரை இடமாற்றுக

### அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்

களுத்துறையில் சிறைச்சாலை பஸ் வண்டிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கி முறையான விசாரணையொன்றை நடாத்துமாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

அதனடிப்படையில், கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி களுத்துறையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட மூன்று பேரடங்கிய குழுவினரால் முன்வைக்கப்பட்ட விடயங்கள், சமயங் கொலை சம்பவ சந்தேகநபர் மீது சிறைச்சாலையில் தாக்குதல் நடாத்தியமை, களுத்துறை சிறைச்சாலை சமையலறைக்கு விநியோகிக்கப்பட்ட கோவாவினுள் கையடக்கத் தொலைபேசியொன்றும், புகையிலையும் கண்டுப்பிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது. இதேநேரம், இச்சம்பவங்கள் தொடர்பில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குற்றவாளிகளாகக் காணப்படுவாராயின் தண்டனையும் பெற்றுகொடுக்கப்படும் என குறிப்பிட்டார்.

## கொழும்பு - மாத்தறை வீதி இன்று மூடல்

காலி பஸ்தரிப்பு சுற்றுவட்டத்திலிருந்து இன்று காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரையில் காலி சமுத்திரா மாவத்தை வரையிலும், மீன்விற்பனை நிலைய சந்திக்கருகாமையில் கொழும்பு மாத்தறை பிரதான வீதி மூடப்படுமென்று பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.

தென்மாகாணத்தில் படையினர் தினவைபவம் இடம்பெறுவது காரணமாக வீதி இவ்வாறு மூடப்படுவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

## முதியோர் இல்லங்களில் 10 ஆயிரம் முதியவர்கள்

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட முதியவர்கள் முதியோர் இல்லங்களில் தங்கியுள்ளதாகவும், இவர்கள் சுமார் 306 முதியோர் இல்லங்களில் உள்ளதாகவும் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு செயலகம் தெரிவித்தது.

இதில் 6 முதியோர் இல்லங்கள் அரசாங்கத்தினால் பராமரிக்கப்படுவதுடன், ஏனைய 300 முதியோர் இல்லங்களும் மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் பிள்ளைகளே இல்லத்தில் கொண்டு வந்து சேர்த்த பெற்றோர்களின் எண்ணிக்கையே அதிகளவில் காணப்படுகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

பிள்ளைகள் கவனிக்காமை மற்றும் பிள்ளைகளுக்கு பாரமாக இருக்கக் கூடாது என்ற எண்ணத்திலும் சில பெற்றோர் இவ்வாறு முதியோர் இல்லங்களை நாடுகின்றதாக கூறப்படுகிறது.

இதேவேளை, பிள்ளைகள் தங்களை உரிய முறையில் பராமரிக்கத் தவறியுள்ளதாகத் தெரிவித்து 57 பெற்றோர் முதியோர் செயலகத்திற்கு முறைப்பாடு செய்துள்ளனர் என செயலகத்தின் பணிப்பாளர் சுமித்த சிங்கப்புலி தெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 60 வயதையும் விட கூடியவர்களின் எண்ணிக்கை 25 இலட்சம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு குப்பைகள் முத்துராஜவெலவில்

கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளை முத்துராஜவெல உத்தேச கொம்பொஸ்ட் திட்டத்திற்கு கொண்டு செல்ல தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று முதல் கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளை முத்துராஜவெல பகுதிக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை காணி மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

சேகரிக்கப்படும் குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு அங்கு அனுப்பி வைப்பதற்கான முகாமைத்துவ செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான செலவுகளுக்கு தேவையான நிதியை பெற்றுக் கொண்டு கழிவகற்றல் முகாமைத்துவ செயற்பாடுகளை ஆரம்பிக்க தயாராகவுள்ளதாகவும் இலங்கை காணி சீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் சுட்டிக் காட்டியது.

## நல்லாட்சி அரசால் பொருளாதார ரீதியில் இலங்கைக்கு நிலையான தன்மை

### அமெரிக்க காங்கிரஸ் பணியக தலைவர்

நல்லாட்சி அரசின் கீழ் கடந்து சென்ற இரண்டு வருடங்களில் இலங்கை பொருளாதார ரீதியில் நிலையான தன்மையில் உள்ளதாக அமெரிக்காவின் காங்கிரஸ் பணியகத்தின் தலைவர் பில் ஜொன்சன் தெரிவித்தார்.

இரண்டு பிரதானகட்சிகளும் ஒன்றிணைந்து நல்லாட்சி அரசை அமைப்பது சிறந்ததொரு வாய்ப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை நேற்றையதினம் நிதி அமைச்சில் சந்தித்து கலந்துரையாடிய போதே பில் ஜோன்சன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை வந்து வடக்கிற்கு விஜயம் செய்த அவர் வடக்கு பிரதேசங்களில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுத்துள்ளமை சிறந்தாகும் என்றும், இன்னும் வடக்கு மக்கள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் தான் நம்புவதாகவும் நிதியமைச்சரிடம் தெரிவித்திருந்தார்.

இதன் போது நிதி அமைச்சர், நல்லாட்சி அரசினால் நாட்டிலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் வழிகாட்டலில் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் வெற்றிகள் கிட்டியுள்ளது எனவும் அவரிடம் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கேஷாப் கலந்து கொண்டிருந்தார்.



காலம் சென்ற முன்னாள் மூதூர் முதல்வரும் தகவல் ஒலிபரப்பு பிரதி அமைச்சருமான மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீதைப்பற்றி மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் எழுதிய மஜீது மாகாவியம் எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) மூதூர் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. இந்நூல் வெளியீட்டு விழாவில் அப்துல் மஜீதின் புதல்வரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தற்போதைய கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான நஜீப் அப்துல் மஜீத், முன்னாள் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.நாகேஸ்வரன், கவிஞர்கள்,பொதுமக்களெனப் பலரும் கலந்து கொண்டனர்.
(திருமலை எம்.டி.எம். பாரீஸ் ,கிண்ணியா ஹஸ்றின் எம் இஸ்மத்)

நவமணி
NAVAMANI DAILY
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
16TH MAY 2017 - TUESDAY

# பாராளுமன்ற முஸ்லிம் ஒன்றியம் யாரால் மீண்டும் சாத்தியப்படும்?

மரணத்தின் விளிம்பை நோக்கி நகரும் முஸ்லிம் சமூகத்தை அரசியல் ரீதியாக தூக்கி நிறுத்துவது இன்று செய்யப்படவேண்டிய கட்டாயமான பணியென முஸ்லிம் ஊடகவியலாளர் ஒருவர் இலங்கை பாராளு மன்றத்தின் மூத்த முஸ்லிம் அரசியல்வாதியான அப்துல் ஹமீத் முஹமத் பௌசிக்கு முகநூலின் ஊடாக விடுத்துள்ள அழைப்பொன்று முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் பேசப்படும் ஒரு விவகாரமாக மாறியுள்ளது.

அமைச்சர் பௌசியை விளித்தே இந்த முகநூல் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அமைச்சர் பௌசி கடந்த வியாழனன்று மரணமான மூத்த ஊடகவியலாளர் எம்.ஏ.நிலாமின் மகனது ஜனாஸாவை பெற்றுகொடுப்பதற்கு கொழும்பு தேசிய வைத்தியசாலை சவச்சாலைக்கு வந்திருந்ததை மையமாக வைத்தே இளம் ஊடகவியலாளர் ஜெம்சித் அஸீஸ் முகநூலில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இன்றைய காலத்தை பொறுத்தவரையில் முஸ்லிம் சமூகம் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி சிந்திக்கும் போது மூத்த முஸ்லிம் அரசியல்வாதிக்கு விடுத்திருக்கும் இந்த அழைப்பு சாலப்பொருத்தமானது.

அமைச்சர் பௌசி இன, மத பேதம் பாராது மரணவீடுகளுக்கு சென்று ஆறுதல் சொல்வதை ஒரு பழக்கமாகக் கொண்டுள்ளார். அமைச்சர் பௌசியின் நாளாந்த நிகழ்ச்சியில் கொழும்பையும், கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் இடம்பெறும் எந்தவொரு மரணத்திலும் கலந்துகொள்வது ஒரு முக்கிய அம்சமாகும்.

மரணித்தவரின் இறுதிக் கடமைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் போல இன்னும் சிலவற்றுக்கு நீங்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என இந்த முகநூல் குறிப்பில் கேட்கப்பட்டுள்ளது.

தற்போது பாராளுமன்றில் முஸ்லிம்களின் பழுத்த அனுபவமுள்ள ஓர் அரசியல்வாதி. இலங்கை அரசியலில் உங்களுக்கென்று தனியானதொரு அத்தியாயம் இருக்கின்றது என்று அந்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிந்திருந்து பகைமை பாராட்டும் முஸ்லிம் அரசியல் கட்சி தலைவர்களை ஒன்றிணைக்கும் பணியை செய்ய வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இன்று 21 முஸ்லிம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நாட்டின் நான்கு பிரதான அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அதில் இரண்டு கட்சிகள் முஸ்லிம் அரசியல் கட்சிகளாகும். முஸ்லிம்களின் விடயங்களிலேயே இவர்கள் மத்தியில் நிலவும் கருத்து முரண்பாடு முஸ்லிம் சமூகத்தை மிகவும் பின்னடையச் செய்துள்ளது.

நல்லாட்சி அரசில் முஸ்லிம்களுடைய தேவைகள் சரியாக கவனிக்கப்படுவதில்லை என்ற கருத்து நாளுக்கு நாள் மேலோங்கி வருகின்றது. இந்த நிலைமைக்கு காரணம் இந்த அரசினை பதவிக்கு கொண்டு வர பங்களிப்பு செய்த முஸ்லிம்களின் பிரதிநிதிகள் ஒருமித்து குரல்கொடுக்காமை ஆகும். முஸ்லிம் சமூகத்துடைய தேவைகள் குறித்து சரியான அழுத்தம் கொடுக்கப்படாததனால் அவை கவனிப்பாரற்று கிடக்கின்றன.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒன்றியமொன்று சில காலத்துக்கு முன் இயங்கியதாக கூறப்பட்டது. இந்த பாராளுமன்றத்தில் அப்படியான ஓர் ஒன்றியத்தை உருவாக்குவதற்கான சில முயற்சிகளும் எடுக்கப்பட்டன. ஆனால், அவை ஏதோ சில காரணங்களால் நிறைவேறாது இருக்கின்றன. இந்த நாட்டில் சில பிரதான முஸ்லிம் கட்சிகளும் ஒன்றுகொன்று முரண்பட்டு செயற்படுவதன் காரணமாக அல்லது ஒன்றுபட்டு செயற்படாததன் காரணமாக சமூகத்தில் பல விடயங்கள் நிறைவேற்றப்படாது உள்ளது. நாளுக்கு நாள் சமூகம் தோல்வியையே எதிர்கொண்டு வருகின்றது. இந்த பின்னணியை குறிப்பிட்ட ஊடகவியலாளர் விடுத்துள்ள வேண்டுகோளை கவனத்தில் கொண்டு அமைச்சர் பௌசி இந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்றுபடுத்துவதற்கு முன்வரவேண்டும். அமைச்சர் பௌசி போன்ற சிரேஷ்ட அனுபவமிகு, எப்போதும் இறைவனுக்கு பயந்து செயற்படுகின்ற ஒருவர் துணிந்தால் இக்காரியத்தை செய்ய முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

# அரசியல் தீர்மானங்களை அச்சமின்றி எடுப்பேன்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன



"அமைச்சரவை மாற்றம் வேலைநிறுத்தத்தை மட்டுப்படுத்த சரத் பொன்சேகாவை நியமித்தல் காலி முகத்திடல் மே தினத்திற்கு சென்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா? இவ்வாண்டில் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்படுமா போன்ற அரசியல் ரீதியான பரபரப்பான விடயங்கள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வார இறுதியில் வெளியான சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியின் முக்கிய அம்சங்கள் இங்கே தொகுத்து தரப்படுகின்றன."

**கே: வெசாக் போயாவுக்கு முன் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என அண்மையில் அறிக்கைகள் வெளியாகின. வெசாக் போயா கழிந்தும் அமைச்சரவை மாற்றம் நடைபெறுவதாக தெரிவதில்லை. ஜனாதிபதி அவர்களே உண்மையிலேயே அமைச்சரவை மாற்றம் இடம்பெறுமா?**

ப: தெரியாத போதும் அது மிக விரைவில் நடைபெறும். அதற்காக யாரும் குழப்பமடைய தேவையில்லை. அது நிச்சயமாக நடைபெறும்.

**கே: அது இன்னும் எத்தனை நாட்களில் நடக்கும்?**

ப: அதுதான் நான் குழப்பமடைய வேண்டாம் என்று கேட்கின்றேன். இன்னும் சந்திரன் அஸ்தமிக்கும் இடத்திற்கு செல்லவில்லைதான். வெசாக் சந்திரன் இன்னும் உதித்துக்கொண்டுதானே இருக்கின்றது.

**கே: அமைச்சரவை மாற்றத்திற்கு ஐ.தே.க விருப்பம் இல்லாமையினால் அமைச்சரவை மாற்றம் நாளுக்கு நாள் ஒத்திபோடப்படுவதாக சிலர் கூறுகிறார்கள்.**

ப: அது தொடர்பாக ஊடகங்களில் வெளிவரும் விடயங்கள் எதுவும் உண்மையல்ல. நானும் பிரதமரும் இருதரப்பாக கட்சியாக இருப்பவர்களும் இதற்கு இணங்கியிருக்கிறார்கள். எவரும் எதிர்க்கவில்லை. அமைச்சரவை மாற்றம் எல்லோரதும் பொது இணக்கப்பாடாக உள்ளது. அதேபோன்று அரசாங்கத்தை அதிகாரத்திற்கு கொண்டுவந்த பல்வேறு அமைப்புகள் மற்றும் தரப்பினர் பொது வேண்டுகோளாக இருப்பது அரசினதும், நாட்டினதும் நன்மைக்காக அமைச்சரவை மாற்றப்பட வேண்டும் என்பதாகும். எனவே இது பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

அமைச்சரவை மாற்றம் என்பது அரசாங்கத்திற்கு உள்ள ஒரு சாதாரண விடயமாகும். இது முதலாவது மாற்றமும் அல்ல மற்றது இது புதினப்படக்கூடிய விடயமும் அல்ல. எமது நாட்டில் 1947இல் இருந்து சகல அரசாங்கங்களும் அடிக்கடி அமைச்சரவை மாற்றங்களை செய்திருக்கின்றன. இது வியப்படையக் கூடிய விடயமல்ல. சாதாரணமாக இடம்பெறும் ஒன்றாகும். எனவே அமைச்சரவை மாற்றம் இடம்பெறும்.

**கே: அரசின் அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்ட கருத்துக்களை தெரிவிக்கின்றார்கள். ராஜித சேனாரத்ன ஒன்றை கூறுகிறார். மஹிந்த அமரவீரவும், ஜோன் செனவிரத்னவும் இன்னொன்றை கூறுகிறார்கள். ஏன் அமைச்சர்களுக்கு ஒரு நிலைப்பாட்டில் இருந்து கருத்துக்களை கூற முடியாது?**

ப: ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களை கூற வேண்டாம் என நான் அமைச்சரவையில் ஆலோசனை கூறியிருக்கின்றேன். மற்ற விடயம் இரு கட்சிகள் ஒன்று சேர்ந்து வேலை செய்யும் போது முரண்படுகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அதனால் தான் அவ்வாறான பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அதேபோன்று இவ்வாறான கருத்து முரண்பாடுகள் இதற்கு முன்னைய அரசாங்கத்திலும் இருந்திருக்கின்றன. கடந்த அரசாங்கத்தில் பொருளாதார கொலையாளி பற்றி குறிப்பிட்டது ஞாபகம் இருக்கின்றது தானே. எல்லா அரசாங்கங்களிலும் இந்த நிலைமை இருக்கின்றது. சிலர் இந்த அரசில் மட்டும் நடப்பது போன்று பேசுகிறார்கள். இரு கட்சிகள் ஒன்றுசேர்ந்து செயற்படும்போது இவ்வாறான கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

**கே: வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டங்கள் என்பவற்றை அடக்குவதற்கு சரத் பொன்சேகாவை நியமிக்க போகிறார்கள். அவர் தலைமையில் புறம்பான ஓர் அணி உருவாக போகிறது என பரபரப்பாக கடந்த காலங்களில் பேசப்பட்டன. அரசாங்கம் அவ்வாறான ஒன்றுக்கு தயாரா?**

ப: அது முற்றும் பொய்யானது. அவ்வாறான அடக்கு முறை பற்றி நாம் பேசியதே இல்லை. அவ்வாறு ஓர் அணி உருவாக்கப்பட மாட்டாது. நாம் சாதாரண ஜனநாயக அரசு என்ற வகையில் வேலைநிறுத்தங்களையும் ஆர்பாட்டங்களையும் எதிர்கொள்வோம். அதை எதிர்கொள்வதற்கு மக்களுடைய ஆதரவை பெற்றுக்கொள்வோம். மற்றது நாட்டினுடைய சட்டங்கள் அடிப்படையாகும். இப்போது குப்பை கூளம் தொடர்பான பிரச்சினை எழுந்தபோது சில பிரதேசங்களுக்கு குப்பைகளை போக்குவரத்து செய்தபோது ஆர்ப்பாட்டங்கள் எதிர்ப்புகள் வந்தன. அச்சந்தர்ப்பத்தில் எமக்கிருக்கும் அரசியல் அமைப்பு சட்டத்தினூடாக உள்ள அதிகாரங்களை நாம் வர்த்தமானியில் பிரசுரிப்போம். அவற்றை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்போம். அவை அடக்குமுறை அல்ல. அவை சாதாரண நாட்டில் இடம்பெறும் விடயங்கள். மற்றது வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது ஒரு சிறு பிரிவினரே. அதனால் நாட்டு மக்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது.

ஜனநாயக அரசாங்கம் என்ற வகையில் வேலைநிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தும் எந்த தொழிற்சங்கத்துடனும் எங்களுக்கு கலந்துரையாட முடியும். எனவே, எந்தவொரு தொழிற்சங்கத்துக்கும் எங்களோடு கலந்துரையாடலாம். ஆனால், அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு வேலைநிறுத்தம் செய்தால் நாங்கள் அதை எதிர்கொள்வதற்கு ஒத்துழைப்பு பெறுவோம். உள்ள சட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துவோம். அவை யாவும் சட்டரீதியான மற்றும் ஜனநாயக ரீதியாகத்தான் செய்வோம். அவ்வாறு இல்லாமல் அரச விரோத சீர்குலைப்போருக்கு நாட்டின் பொது மக்களும் அன்றாட செயற்பாடுகளை சீர்குலைக்கும் வகையில் செயற்படுத்த இடமளிக்க முடியாது. அது தொடர்பாக அரசு என்ற வகையில் கடுமையான ஒரு நிலைப்பாட்டில் இருக்கிறோம். ஆனால், எந்தவொரு விடயத்தையும் பொன்சேகாவுக்கு ஒப்படைத்து வேறு அணிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கவில்லை. அது பிழையானது. நான் அதை முற்றாக நிராகரிக்கிறேன். அது இந்த அரசுக்கு எதிராக கருத்து சொல்ல செய்யும் சில செயற்பாடுகளாகும்.

**கே: சரத் பொன்சேகாவை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத்ததாக அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன கூறியிருந்தார். அமைச்சர்களான மஹிந்த அமரவீரவும், ஜோன் செனவிரத்னவும் அவ்வாறான தீர்மானமொன்றை எடுக்கவில்லை என தெரிவித்தார்கள். அப்போது மக்களுக்கிடையே பிரச்சினையொன்று ஏற்பட்டதா இந்த இரு தரப்பினர்களில் யார் உண்மையை சொல்கிறார்கள் என்று?**

## நாடு பற்றி எனது நிகழ்ச்சி நிரலை நான் இன்னும் சொல்லவில்லை

ப: இப்போதுள்ள நல்ல வேலை என்னவென்றால், குறிப்பிடப்படும் எல்லோரும் அமைச்சர்கள் என்ற வகையில் தம் பொறுப்புக்களை பார்த்துக்கொண்டிருந்தால் போதும் பொருத்தமற்ற அநாவசியமான விடயங்களை சும்மா பேசி வாய்களை தவறவிட்டு மக்களுக்கு தவறான கருத்துக்களை தெரிவிக்காமல் இருக்கவேண்டும். எல்லோரும் அமைச்சரவையில் கூட்டு பொறுப்புடன் செயற்படவேண்டும்

**கே: அமைச்சர் ராஜித சேனாரத்னவை அமைச்சரவை பேச்சாளர் பதவியிலிருந்து நீக்கவேண்டுமென ஸ்ரீல.சு.க அமைச்சர் தீர்மானம் எடுக்கிறார்கள், அவர்கள் உங்களை சந்தித்து கோரிக்கை விடுத்திருக்கிறார்கள் அதற்கிடையில் ஸ்ரீல.சு.கவில் இருந்த இணை அமைச்சரவை பேச்சாளர் ஒருவரை அமைச்சரவை தீர்மானிக்கின்றதா. உருவாகி இருக்கின்ற பிரச்சினையை இதன்மூலம் தீர்க்க முடியும் என நீங்கள் கருதுகின்றீர்களா?**

ப: ராஜித சேனாரத்னவை அமைச்சரவை செயலாளர் பதவியிலிருந்த நீக்கவேண்டுமென ஸ்ரீல.சு.க. அமைச்சர்கள் என்னிடம் கோரிக்கை விடுக்கவில்லை. ஸ்ரீல.சு.க. அமைச்சர்களுடைய கலந்துரையாடல் ஒன்றில் அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்து பற்றி கலந்துரையாடி இருக்கிறார்கள். அவற்றை திருத்தி கூட்டு பொறுப்புடன் செயற்படுவது பற்றி கலந்துரையாடி இருக்கிறார்கள். ஸ்ரீல.சு.க. சார்பில் அமைச்சரவை பேச்சாளர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஊடக அமைச்சராக கயந்த கருணாதிலக்க இருக்கிறார். இணை ஊடக அமைச்சராக அமைச்சர் ராஜித இருக்கிறார். இப்போது நாம் ஸ்ரீ.ல.சு.கவில் இருந்த ஓர் இணை அமைச்சரவை பேச்சாளரை நியமிக்கவுள்ளோம். இப்போது மூன்று பேரும் சேர்ந்து ஒன்றாக அமர்ந்து அமைச்சரவை கூட்டம் முடிந்த பின் ஒரு கருத்தை வெளியிடுகிறார்கள். அது தான் இப்போது உள்ள விடயம். மூன்று பேரை நியமிக்க தீர்மானித்துள்ளோம். அத்தோடு, கடந்த அமைச்சரவை கூட்டத்தில் நானும் பிரதமருடன் கலந்துரையாடி அந்த மூவரும் ஒருமித்த கருத்தை முன்வைக்கவேண்டும் என கேட்டுக்கொண்டோம். அப்போது மூவருக்கும் அந்த இடத்தில் பொதுவான நிலைப்பாட்டை சொல்லமுடியும்.

**கே: புதிய அரசியல் யாப்பு பற்றி பேசப்படுகின்றது? நல்லாட்சி அரசில் வரும் முதலாவது தேர்தல் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு என்று அமைச்சர் ராஜித சொல்லியிருந்தார்**

ப: பொதுசன வாக்கெடுப்பு பற்றி நாம் தீர்மானம் எடுத்தே இல்லை.

**கே: முதலில் வருவது மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி தேர்தல் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தார். இதில் எது முதலில் வரும்?**

ப: எந்த தேர்தல் முதலில் வரும் என்று என்னால் இப்போது கூறமுடியாது. இந்த ஆண்டு தேர்தலை நடத்த வேண்டிய ஆண்டா? ஆனாலும், இருக்கின்ற அரசியல் சாசன நிலையின் படி அரசாங்கம் என்ற வகையில் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே இது தீர்மானிக்கப்படும். எனவே, எந்த தேர்தல் முந்தி வரும் என்று என்னால் இப்போது கூறமுடியாது.

**கே: அப்படி சொல்வது புதிய அரசியல் யாப்புக்கு அரசாங்கம் தயார் என்பதா?**

ப: ஆம், புதிய அரசியல் யாப்பு பற்றி அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அந்த சட்டமூலம் அமைச்சரவைக்கு வரவேண்டும். அவ்வாறு வந்ததும் அதுபற்றி நாம் கலந்துரையாடுவோம். இதன் நல்லது கெட்டது பற்றி நாம் கலந்துரையாடுவோம். எனவே, அமைச்சரவைக்கு குறைபாடுகள் என்ன இருக்கின்றன என்பது பற்றி கலந்துடியாடுவோம். எனவே அமைச்சரவைக்கு வந்ததும் கலந்துரையாடி பாராளுமன்றுக்கு சமர்பிப்போம். அரசியல் யாப்பு பற்றி பல்வேறு பொய்களும், மோசடியான பிரச்சாரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு பிரதான பத்திரிகையில் புதிய யாப்பு வந்தால் பௌத்த சமயத்துக்கு உள்ள இடம் இல்லாமல் போகும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அது முற்றும் பொய்யாகும். புத்த சமயம் தொடர்பாக 72 ஆவது அரசியல் யாப்பின் சரத்துக்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்பதை உறுதியாக தெரிவிக்கின்றேன்.

**கே: செயல் அதிகாரமிகு ஜனாதிபதி முறையை ஒழித்தல் மற்றும் தேர்தல் முறையில் திருத்தங்களை கொண்டு வருவது புதிய யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதா?**

ப: ஆம், நாட்டு மக்களது கோரிக்கை தான் புதிய தேர்தல் முறை. தொகுதி முறையிலான தேர்தல் முறையொன்று தேவை என்பது மக்களது வேண்டுகோள். புதிய அரசியல் யாப்பின் கீழ் தேர்தல் முறைக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. செயலதிகாரமிகு ஜனாதிபதி முறை தொடர்பாக நான் ஆரம்பத்திலேயே இருந்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறேன். இந்த செயலதிகாரமிகு ஜனாதிபதிமுறையை ஒழித்து பாராளுமன்றத்தை பலப்படுத்த வேண்டுமென்ற நிலைப்பாட்டில் நான் இருக்கிறேன்.

**கே: உள்ளூராட்சி தேர்தல் பற்றி இரு வருடங்களாக பேசப்படுகின்றது. அரசு ஏன் குட்டித் தேர்தலுக்கு போகப் பயப்படுகின்றது?**

ப: தேர்தலுக்கு நான் பயப்படவில்லை. மிக விரைவில் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு ஆலோசனை வழங்கி இருக்கிறேன். ஆனால், இது அரசாங்கத்தினால் தாமதப்படுத்துவதாக சொல்லப்படும் குற்றச்சாட்டாக இருந்தாலும், அரசாங்கத்தால் தாமதப்படுத்தவில்லை. தேர்தல் முறை தொடர்பாக முன்பு செய்திருந்த தவறான தொகுதி எல்லைகள் பிரிப்பதினால் தான் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாம் ஆட்சிக்கு வந்த இந்த தொகுதி எல்லை தொடர்பான திருத்தங்களை கொண்டு வர இரு வருடங்கள் எடுத்தன. இப்போது இதன் ஒழுங்கு விதிகள் திருத்தப்படவேண்டியுள்ளன. அதனை விரைவுபடுத்துமாறு அமைச்சரவை பைசர் முஸ்தபாவை கேட்டுள்ளது. தேர்தல் விரைவில் நடாத்தப்படவேண்டுமென பலத்த நிலைப்பாட்டில் நானும் இருக்கின்றேன்.

**கே: அண்மையில் நடைபெற்ற மே தின ஊர்வலம் பற்றி கட்சி, அமைப்புகள் பேசிய ஸ்ரீல. சு.கவின் மேதினம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

ப: ஸ்ரீல.சு.க போன்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மே தினம் கண்டியில் நடைபெற்றது. மிக வெற்றிகரமாக இந்த மேதின விழாவை நாம் நடத்தினோம். நான் கட்சியின் தலைவராகிய பின் 2015 இல் ஹைட்பார்கில் மேதின கூட்டத்தை நடத்திய போது 10, 15 ஆயிரம் பேர் வந்திருந்தார்கள். 2016 இல் காலியில் மேதினத்தை நடத்திய போது பெருந்தொகையானோர் வந்திருந்தனர். மைதானம் கூட போதாமல் இருந்தது. வந்த அநேகமானோரால் வீதியில் நெருக்கம் ஏற்பட்டது. 2017 இல் மேதினத்தை கண்டியில் நடத்த தீர்மானித்தோம். கண்டி நகருக்கு வரும் சகல வீதிகளிலும் கிலோமீற்றர் 5,6க்கு அதிகமாக கூடுதலான மக்கள் ஊர்வலத்தில் வந்தார்கள். மிக பெரிய அளவில் சிலர் வெற்றி எனக்கூறும் காலி முகத்திடல் கூட்டத்தில் ஊர்வலம் இருக்கவில்லை. கூட்டம் மட்டும் தான் இருந்தது. எங்களது அப்படியல்ல. கண்டி நகருக்கு உட்பிரவேசிக்கும் நான்கு வீதிகளிலும் ஊர்வலங்கள் வந்தன. அதனால், ஸ்ரீல.சு.க, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் கண்டி நகரில் வருகை தந்த 6,7 கிலோமீற்றர் நீளமாக இருந்த ஊர்வலங்களில் வருகை தந்த மக்களை அவ்வாறனதொரு மைதானத்தில் போட்டிருந்தால் நாங்கள் எவருக்கும் இரண்டாவதாக இருந்திருக்க மாட்டோம். அது தான் உண்மை நிலைமை. மே தின வரலாற்றை பற்றிய தெரிந்தவர்கள் ஊர்வலத்துக்கும் கூட்டத்துக்கும் வேறுபாட்டை அறிவார்கள், ஊர்வலத்தில் வருவோர் கூட்டங்களுக்கு வரமாட்டார்கள். அது ஒரு சாதாரண நிலையாகும். மற்றவிடயம், காலிமுகத்திடலுக்கு சனம் வந்ததென கூறி அடுத்த தினத்தில் அரசாங்கத்தை வீழ்த்த எண்ணுவதாக இருந்தால் அது கானல் நீராகும். அது அவர்களே அவர்களை ஏமாற்றிகொள்வதாகும். 2015 ஜனவரி 8 ஆம் திகதி தேர்தலின் போது என்னோடு போட்டியிட்ட அபேட்சகர்களின் கூட்டங்களுக்கு பெரும் மக்கள் கூட்டம் வந்தது. 35, 40 வருட கால இலங்கை அரசியலில் கூட்டம் ஊர்வலம் பற்றி தனிப்பட்ட வகையில் அறிந்தவன் என்ற வகையில், கூட்டத்துக்கு மக்கள் திரண்டு வந்ததனால் மட்டும் வாக்குப்பெட்டி நிறைந்திடும் என யாரும் எண்ணவேண்டாம். எங்களுடைய நாட்டில் இருக்கும் அரசியல் சிக்கல் நிலைமை நாட்டின் உள்ளக நிலைமை அரசியல் கட்சிகள் உள்ள முறை நாட்டின் பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளும் போது மைதானம் ஒன்றிற்கு சனம் நிறைந்தவுடன் அடுத்த நாள் அரசை வீழ்த்த முடியும் என்று யாராவது எதிர்பார்ப்பது அரசியல் கானல் நீராகும். இவ்வாறான கூட்டங்கள் எத்தனையோ நாங்கள் கண்டிருக்கிறோம். நாடு தொடர்பான எனது எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரலை நான் இன்னும் சொல்லவில்லை. நான் எதிர்காலத்தில் எவ்வித அச்சமுமின்றி அரசியல் தீர்மானங்களை எடுக்கபோகிறேன். எவருக்கும் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க உரிமை இருக்கின்றது.

**கே: கெட்டம்பே கூட்டத்துக்கு வருமாறு ஸ்ரீல.சு.க பாராளுமன்ற மாகாணசபை உறுப்பினர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்து மேதினத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தது. காலி முகத்திடலுக்கு போவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா?**

ப: அது மத்தியக்குழு கூடிதான் தீர்மானம் எடுக்கவேண்டும். அடுத்தவாரம் மத்திய குழு கூடும்.

**கே: அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கி, திருமலை எண்ணெய் தாங்கியை இந்தியாவுக்கு வழங்கி இந்த நாட்டை சீன மற்றும் இந்திய கொலனியாக மாற்ற போவதாக அரசுக்கு குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

ப: இதனை கேட்கவேண்டியது போர்ட்சிட்டியை அக்காலத்தில் சீனாவுக்கு கையளித்தோரிடம். போர்ட்சிட்டியை சீனாவுக்கு வழங்கும் போது வாயை மூடிக்கொண்டிருந்தவர்கள் இப்போது இதை கேட்கிறார்கள் அரசாங்கம் என்ற வகையில் நாட்டை முன்னேற்ற வெளிநாட்டு முதலீட்டு தேவை, ஆனால் அந்த வெளிநாட்டு முதலீட்டை எடுக்கும் போது நாட்டின சுதந்திரம், இறைமை, தேசிய பாதுகாப்பு பொருளாதாரம், நாட்டின் கலாசாரத்துக்கு பாதிப்பு இல்லாமல் அரசியல் யாப்புக்கு இணங்க நாங்கள் செயற்பட வேண்டும். எனவே இந்தியா, திருமலை என்பதல்ல இங்குள்ள பிரச்சினை எனது தீர்மானம் அடிப்படையில் நாட்டை முன்னேற்ற வெளிநாட்டு முதலீடு தேவை நாட்டின் கடன் சுமையை எல்லோரும் அறிவார்கள். அதிலிருந்து நாம் மீளவேண்டும். எமது வெளிநாட்டு வருமானம் மற்றும் ஏற்றுமதி அதிகரிக்க வேண்டும். இறக்குமதிச் செலவு குறையவேண்டும். இந்த நிலைமையை கருத்தில் கொண்டு எமக்கு முதலீடு தேவைப்படுகின்றது. எனினும் அந்த முதலீடுகளின் போது நாட்டின் ஒரு பகுதியை எழுதிக்கொடுக்கவோ, விற்பனை செய்வதற்கோ முடியுமாக இல்லை.

நன்றி லங்காதீப

# செயற்படாத முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர்கள் நீக்கப்படுவார்கள்

## தவிசாளர் மஜீத் அறிவிப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகளின் செயற்படாத அமைப்பாளர்கள் நீக்கப்பட்டு, அவ்விடங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள் என அக்கட்சியின் தவிசாளரும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீட் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் சாய்ந்தமருது-16 ஆம் பிரிவுக் கிளையின் புனரமைப்பு கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கட்சியின் சாய்ந்தமருது பிரதேச அமைப்பாளர் எம்.ஐ.எம். பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாய்ந்தமருது பிரதேசத்தில் கட்சிக் கிளைகள் யாவும் அவசரமாக புனரமைக்கப்பட்டு, மத்திய குழு பலப்படுத்தப்பட்டு வேண்டும். சில கிளைகளின் அமைப்பாளர்கள் எவ்வித செயற்பாடுமின்றி இருப்பதாக அறிகின்றோம். அவர்களுக்கு இன்னும் சிறிது காலம் அவகாசம் வழங்கப்பட்டு, அதிலும் அவர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க தவறினால், அவர்களை நீக்கி விட்டு புதிய அமைப்பாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த முக்கியமான காலகட்டத்தில் எமது கட்சியின் சாய்ந்தமருது மத்திய குழுவானது அவசரமாக பலப்படுத்தப்பட்டு, ஊரின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு முன்வரக வேண்டியுள்ளது. எமது கட்சி இன்று மத்தியிலும் மாகாணத்திலும் அதிகாரத்தை கொண்டிருக்கிறது. இவற்றின் ஊடாக இப்பிரதேசத்தில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். எமது கட்சிக்கு பெருவாரியாக வாக்களித்து வருகின்ற இந்த ஊர் மக்கள் எம்மிடம் நிறைய எதிர்பார்க்கின்றனர். அவர்களது நம்பிக்கையை நாம் வீணடித்து விட முடியாது.

இப்பிரதேசத்தில் கட்சி எதிர்கொள்கின்ற சவால்களை முறியடிப்பதற்கும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கும் கட்சியின் மத்திய குழுவினரும் போராளிகளும் ஒற்றுமைப்பட்டு, பலமான சக்தியாக மாற வேண்டும். நமக்குள் இருக்கின்ற தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் அனைத்தும் களையப்பட்டு ஒருமித்து செயற்படும்போதே நாம் எமது இலக்கை அடைய முடியும் என்று குறிப்பிட்டார்.

# சிறாஜ் நகர் முஸ்லிம் வித்தியாலய மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(திருகோணமலை அப்துல்சலாம் யாசீம்)

கிண்ணியா கல்வி வலயத்திற்குற்பட்ட சிறாஜ் நகர் முஸ்லிம் மஹா வித்தியாலய மாணவர்கள் தங்களின் கல்வியைத்தொடர்வதற்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி நேற்று (15) பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

539 மாணவர்கள் இப்பாடசாலையில் கற்று வருவதாகவும் 36 ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற போதிலும் 16 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மிகுதி 20 பேரை நியமித்து தருமாறும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கெகிராவை பிரதேசத்திற்கு ராவுத்தர் நெய்னா முஹம்மதின் வேண்டுகோளில் குடிநீர் வசதி

(நாச்சியாதீவு பர்வீன்)

கெக்கிராவை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாமினியாவ, ரம்பாவ, ஹிஜ்ராபுரம், திக்கவெவ ஆகிய பிரதேசங்களில் வாழ்கின்ற பொதுமக்களின் மிக நீண்ட நாள் பிரச்சினையாக இருந்த சுத்தமான குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு கிட்டியுள்ளது.

கெக்கிராவை தேர்தல் தொகுதியின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கபீர் ஆசிரியர் முன்னாள் வடமத்திய மாகாண சபை உறுப்பினரும் அநுராதபுர மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் ஏ.சி ராவுத்தர் நெய்னா முஹம்மதிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து அவர் இதனை நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கவனத்திற்கு நேரடியாக கொண்டு வந்தார்.

அநுராதபுர மக்கள் குடிநீருக்காக படுகின்ற அவஸ்தைகளையும் சுத்தமான குடிநீருக்கான தேவையையும் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு ராவுத்தர் நெய்னா முஹம்மத் தெளிவு படுத்தினார்.

இந்த குடிநீர் திட்டத்தின் மூலம் இப்பிரதேசம் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ளும். இத்திட்டத்திற்காக 25 மில்லியன் ரூபாய் நீர் வழங்கல் அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிகாரமிக்க அரசியல் தலைமை இடைவெளியே புத்தளத்தின் சூழல் பாதிப்புகளுக்கு காரணம்

## கற்பிட்டியில் அமைச்சர் றிஷாத்





புத்தளம் மாவட்டத்தில் பலவந்தமாக வெளியாரினால் திணிக்கப்பட்டிருக்கும் சூழலியல் ரீதியான செயற்கைப் பாதிப்புகளுக்கு புத்தளத்தின் அதிகாரமிக்க அரசியல் தலைமையின் நீண்ட இடைவெளியே பிரதான காரணமென்று என்று அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மக்கள் காங்கிரசின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை கற்பிட்டியில் அங்குரார்ப்பணம் செய்து வைத்த பின்னர் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது,

கடந்த கால சிறுபிள்ளைத்தனமான செயற்பாடுகளினாலேயே புத்தளம் மாவட்ட பாராளுமன்றக் கனவு சிதைந்து சின்னாபின்னமாகியது. தேர்தல் காலங்களில் மட்டும் தங்களது தேவைகளுக்காக வருபவர்களுக்கு வாக்களிப்பதன் மூலம் எந்தப்பயனும் கிடைக்கப்போவதில்லை. இந்தத்தவறுகள் மென்மேலும் தொடருமேயானால் சமூகத்தின் இருப்புக்கு ஆபத்தே ஏற்படும். தொடர்ந்தேர்ச்சியான இந்தப் பிழைகளை இன்னும் நாம் தொடர்வதற்கு அனுமதிக்கவும் கூடாது. அதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் கூடாது.

புத்தளத்தின் தலைமை புத்தளத்தில் பிறந்த ஒரு நேர்மையானவரிடமும் உளத்தூய்மையாக செயற்படுபவரிடமும் இறையச்சமுள்ள ஒருவரிடமும் ஒப்படைக்கப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அவ்வாறான ஒரு தூய பணிக்கு எமது கட்சியின் வளத்தையும் தலைமையின் பலத்தையும் அர்ப்பணித்து செயற்படுவோம்.

புத்தளத்து நேரடி அரசியலில் நான் ஒரு போதும் ஈடுபடப்போவதில்லை எந்தவொரு தேர்தலிலும் புத்தளத்தை மையமாகக்கொண்டு நான் இறங்கப்போவதில்லை. என்பதை மிகவும் தெளிவாகவும் அழுத்தமாகவும் பகிரங்கமாக பல தடவைகள் கூறி இருக்கின்றேன். எனினும் எங்கள் பணிகளை வேற்றுக்கண்ணோட்டத்திலும் தப்பான எண்ணத்திலும் நோக்குபவர்களே தேர்தலில் இந்த மாவட்டத்தில் நான் குதிக்கப்போவதாக புரளிகளை கிளப்பி வருகின்றனர். கடந்த காலங்களில் புத்தளம் மாட்டம் இழந்தவைகளை ஈடுசெய்ய நாம் முழு மூச்சுடன் உழைப்போம்.

கற்பிட்டி பிரதேசத்தை முறையாகத்திட்டமிட்டு அபிவிருத்தி செய்ய எண்ணியுள்ளோம். வடக்கு முஸ்லிம்களின் வாழ்விலே கற்பிட்டி என்றுமே மறக்க முடியாத மறைக்க முடியாத ஒன்றாக தடம்பதித்துவிட்டது.

கற்பிபட்டி அல்-அக்ஸா தேசிய பாடசாலையில் கேட்போர் கூடத்துடனான 3மாடிக்கட்டிடமொன்றுக்கு விரைவில் அடிக்கல் நாட்டுவோம். காபட் பாதைகளுக்கான அடிக்கற்களை இன்று நாட்டினோம். மீனவர்களின் நலன்களுக்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளோம். யுவதிகளின் சுயதொழில் வாய்ப்புக்கென தையல் பயிற்சி நிலையமொன்றையும் திறந்து வைத்துள்ளோம். இத்தனைக்கும் மேலாக அந்தப் பிரதேசத்தின் கற்றுலாத்துறையை மேம்படுத்தி இங்கு வாழும் மக்கள் அதன் மூலம் பயன்பெற திட்டங்களை மேற்கொள்வோம் என்றும் அமைச்சர் கூறினார்.







இலங்கை இராணுவ தலைமையகத்தின் வழிகாட்டலுடனும், இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவின் முழுமையான கண்காணிப்பின் கீழ் இராணுவ வீரர்களின் பங்களிப்புடன் இவ்வருடமும் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வெசாக் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.இதன்போது வெசாக் அலங்காரப் பந்தல்கள், அன்னதான நிகழ்வுகள் மற்றும் வெசாக் பக்தி பாடல்கள் போன்றவற்றை இலங்கை இராணுவம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஐ.நாவின் வெசாக் தின கொண்டாட்டங்களுக்கும் இலங்கை இராணுவம் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கியது.



கொழும்பில் உள்ள ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தினால் இம்முறை சர்வதேச வெசாக் தினத்தினை முன்னிட்டு பம்பலப்பிட்டியில் உள்ள விசா அலுவலகத்தில் வைத்து ஆயிரக்கணக்கானோருக்கு மரவள்ளிக்கிழங்கு அவியல் மற்றும் உணவு வகைகள் கொண்ட அன்னதானம் பரிமாறப்பட்டது. இந் நிகழ்வினை ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின கொழும்பு அலுவலகத்தின் செயலாளர் ஓசாமா அப்துல்லாஹ் அல் அலியும் முன்னாள் மேயர் அசாத் சாலியும் இணைந்து மக்களுக்கு பகிர்ந்தளித்தனர்.

(அஸ்ரப் ஏ சமத்)

## தொழுகை நேரங்கள்

16.05.2017

| சுபஹ் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|
| 4.34 | 12.08 | 3.30 | 6.20 | 7.34 |

கிழக்குமாகாணம் 4 நிமிடங்கள் கழித்து கணிப்பிடவும்


## விலைமனு அறிவித்தல்
**Lanka Mineral Sands Limited**
(கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு)

### பெறுமதிமிக்க கனரக கனிம மணல்களை விற்பனை செய்தல்
**கேள்வி இல: LMS/MKT/TDR/17/04**

இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் சார்பாக, அமைச்சின் கேள்விமனு சபை தலைவர், பின்வரும் கனரக கனிம மணல் பொருட்களை வாங்குவதற்கு ஆர்வமுள்ள, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புக்களிடமிருந்து கேள்விமனுக்களைக் கோருகிறார். வாங்குவதற்கு சாத்தியமுள்ளோர், அனைத்து கொள்ளளவுக்கும் கேள்விமனு வழங்க வேண்டும்.

| | பொருள் | விற்கப்படும் அளவு | மனு பத்திரம் | கேள்வி மனு மூடப்படும், திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|---|---|
| 1 | DRY ILMENITE (PRODUCT IS CERTIFIED TO THE SPECIFICATION PROVIDED) | 3,500 MT (மொத்தமாக விநியோகிக்கப்படுகிறது) | 9,975,000.00 இலங்கை ரூபா அல்லது 66,500.00 அமெ. டொலர் | 07.06.2017 பிற்பகல் 02 மணி |

மனுதாரருக்கான அழைப்பிதழ், விற்பனை நோக்கம், மனுதாரருக்கான அறிவுறுத்தல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், பரிந்துரைக்கப்படும் கேள்விமனு படிவம் மற்றும் பொருளின் விபரங்கள், இலக்கம் 341/21, சரணமாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளன. அத்தோடு,ஆர்வமுள்ள தரப்புக்கள் இலகுவாக அணுகுவதற்காக www.lankamineralsands.com என்ற இணையத்தளத்திலும் இடப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள தரப்புக்கள் கேள்விமனுவின் விபரங்களை அறிந்து கொள்வதற்கு, இணையத்தளத்தை தரிசிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு சந்தைப்படுத்தல் முகாமையாளரை பின்வரும் இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும், +94 11 2883951-2, +94 11 2883965 அல்லது சந்தைப்படுத்தல் பிரிவை தொடர்பு கொள்ளுங்கள் +94 11 2883954, தொலைநகல் +94 112882066, மின்னஞ்சல்: ilmenite@slt.lk

**தவிசாளர்**
**அமைச்சின் கேள்விமனு சபை**
**இலங்கை கனிம மணல்கள் நிறுவனம்**
**341/21, சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை**



## விலைமனு அறிவித்தல்
**Lanka Mineral Sands Limited**
(கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு)

### பெறுமதிமிகு கனரக கனிம மணல்களை விற்பனை செய்தல்
**கேள்வி இல: LMS/MKT/TDR/17/05**

இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் சார்பாக, அமைச்சின் கேள்விமனு சபையின் தலைவர், பின்வரும் கனரக கனிம மணல் பொருட்களை வாங்குவதற்கு ஆர்வமுள்ள, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புக்களிடமிருந்து கேள்விமனுக்களை கோருகிறார். வாங்குவதற்கு சாத்தியமுள்ளோர், அனைத்து கொள்ளளவுக்கும் கேள்விமனு வழங்க வேண்டும்.

| | பொருட்கள் | விற்கப்படும் அளவு | மனு பத்திரம் | கேள்வி மனு மூடப்படும், திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|---|---|
| 1 | ZIRCON (PRODUCT IS CERTIFIED TO THE SPECIFICATIONS PROVIDED) | 290 MT (40 கிலோ பொதிகளாக பொதி செய்யப்பட்டுள்ளன) | 3,697,500.00 இலங்கை ரூபா அல்லது 24,650.00 அமெ. டொலர் | 13.06.2017 பிற்பகல் 02 மணி |
| 3 | HIGH TITANIUM ILMENITE (PRODUCT IS CERTIFIED TO THE SPECIFICATIONS PROVIDED BY LMSL) | 1250 MT (தொகையாக விநியோகிக்கப்படும்) | 3,750,000.00 இலங்கை ரூபா அல்லது 25,000.00 அமெ. டொலர் | |

மனுதாரருக்கான அழைப்பிதழ், விற்பனை நோக்கம், மனுதாரருக்கான அறிவுறுத்தல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், பரிந்துரைக்கப்படும் கேள்விமனுப் படிவம் மற்றும் பொருளின் விபரங்கள், இலக்கம் 341/21, சரணமாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளன. அத்தோடு, ஆர்வமுள்ள தரப்புக்கள் இலகுவாக அணுகுவதற்காக www.lankamineralsands.com என்ற இணையத்தளத்திலும் இடப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள தரப்புக்கள் கேள்விமனுவின் விபரங்களை அறிந்து கொள்வதற்கு, இணையத்தளத்தை தரிசிக்கலாம்.

மேலதிக விளக்கங்களுக்காக தயவுசெய்து சந்தைப்படுத்தும் முகாமையாளரை +94 11 2883951-2, +94 11 2883965 அல்லது சந்தைப்படுத்தும் பிரிவுடன் +94 11 2883954, தொலைநகல் +94 112882066, மின்னஞ்சல்: ilmenite@slt.lk உடன் தொடர்புகொள்ளவும்

**தவிசாளர்**
**அமைச்சின் கேள்விமனு சபை**
**இலங்கை கனிய மணல்கள் நிறுவனம்**
**341/21, சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை**

# கலைவாதி கலீல் ஜலதரங்கம்

கலை - இலக்கியம் - விமர்சனம்

## குறையை நிறையாகக் கொள்!

(எம்.எஸ்.எம். ஸாஹிர்)

ஓர் ஏழை விவசாயி, தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.



தண்ணீர் கொண்டு வர இரண்டு வாளிகளை வைத்திருந்தான். அந்த வாளிகளை ஒரு நீளமான தடியின் இரண்டு முனைகளிலும் தொங்க விட்டு, தடியைத் தோளில் சுமந்து செல்வான்.

இரண்டு வாளிகளில் ஒன்றில் ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது, ஓட்டையுள்ள வாளியில் பாதியளவு தண்ணீரே இருக்கும்.

ஓட்டையில்லாத வாளிக்குத் தன் திறனால் பெருமையாகவிருந்தது. ஓட்டையுள்ள வாளியைப் பார்த்து எப்போதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும்.

இப்படியே சில காலங்கள் கழிந்து விட்டன. கேலி பொறுக்க முடியாத வாளி அதன் எஜமானைப் பார்த்து '' ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் மன வருத்தமடைகிறேன். தினமும் என் குறையால், வருகின்ற வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்களுடைய வேலைப்பளு மிகவும் அதிகரிக்கின்றது. என்னுடைய குறையை தயவுசெய்து சரி செய்யுங்களேன்'' என்றது.

அதற்கு எஜமான் "வாளியே! நீ கவனித்தாயா? நாம் வருகின்ற பாதையில், உன்பக்கம் இருக்கின்ற அழகான பூஞ்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னாடியே தெரியும். அதனால் தான் வழிநெடுகிலும் பூஞ்செடி விதைகளை விதைத்து வைத்தேன். அவை தினமும் நீ சிந்திய தண்ணீரால், செடிகள் பெரிதாக வளர்ந்து, தினமும் அழகான பூக்களை தருவிக்கின்றன. அவற்றை வைத்து நான் பூக்களால் வீட்டை அலங்கரிக்கின்றேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்ட வாளி, தன்னை கேவலமாக உணர்வதை நிறுத்தி, அடுத்தவர் பேச்சுக்கு காதுகொடுக்காது, தன் வேலையை செய்யத்தொடங்கியது.

சிந்தனைவழிச் செயற்பாடே வெற்றி தரும்... சிந்திப்பீர்! செயல்படுவீர்!

புதிய பாணியிலான உங்களது தரமான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆக்கங்கள் சுருக்கமாகவும் இறுக்கமாகவும் அமைதல் வேண்டும். எமது ஈ-மெயில் முகவரிக்கு அனுப்புங்கள்.
kalaiwathykaleel@gmail.com

## உள்ளம் கவர்ந்த இல்லம்

சிறுகச், சிறுக சிக்கனமாய், பக்குவமாய்
பார்த்துப் பார்த்து கட்டிய
வசந்த மாளிகை!

எமக்கென்று
ஒரு வாழ்விடம்...

படிக்கட்டு முதல்
சமையல் கட்டு வரை
திலக்குறிப்பு நிரப்பும் ஞாபகங்கள்...
உறக்கம் வரும் முன்னே
உள்ளம் நித்தம் நினைத்திடும்
அந்த வசந்தகால நினைவுகளை...

நடு இரவில் தனிமையில் - நான்
அமர்ந்து படித்த சுவர் ஓரம்...
பசி வயிற்றைக் கிள்ளிய போதும்
'சுப்பரா' விரிப்பில் ஒருவருக்கு ஒருவர்
காத்திருந்து உணவு உண்ணும் - காலை

தலையணைக்கு சண்டைவிட்டு
முகத்தை திருப்பிக் கொண்டு
தூங்கிய கட்டில் அறை...
பாடசாலைவிட்டு வீடு திரும்பியதும்
கண்கள் தேடிய சமையலறை...
குளிப்பதற்கு போட்டி போட்டு
தகராறு பண்ண வைத்த குளியலறை...

இவை அனைத்தையும்
ஏனோ தேடுகிறது...
என் இதயவறை!

அங்கிருந்து வெளியேற
துடித்த பல உள்ளங்களில்
ஒன்று...
இதையாயினும்
இப்பொழுது புரிந்துகொண்டேன்
'இக்கரைக்கு அக்கரை பச்சை!'

கடல் தாண்டி குளம் சேர்ந்த
மீனாய்...
உணர்கிறேன்
தூய்மையான நீருண்டு...
உறவாட சக மீன்கள் இல்லை!
முடிவில்லா தேடலானதே!

மு.ஸ.பா. ஸம்ருத்
தீர்கொழும்பு

## பாரபட்சம் வேண்டாம்...

முன்னால் சென்றவர்களை
பின்னால் தள்ளிவிட்டு
பின்னால் சென்றவர்களுக்கு
முன்னால் விருந்துபசாரமும்
பிரியாவிடை வைபவமும்
குடும்பம் சகிதமாய்
குதூகலம் செய்து
ஆசிரியத்தை அசிங்கமாக்கும்
அதிபராக மாறக்கூடாது...!

ஒரு கவளச் சோற்றுக்காக
யாசகம் கேட்கும்
யாசகர்களல்ல நாங்கள்...!

எங்கள் கற்பித்தலை
ஏளனமாய்
எண்ணிவிடக் கூடாது...!
எதிர்பார்ப்புக்களுடன்
எதையும் செய்ததில்லை!
எல்லோரும் சமமானவர்கள்
எனும் கோட்பாட்டை
எடுத்தியம்பவே
எழுதுகிறேன் கவிதையொன்று...!

பக்கச் சார்பும்
பாரபட்சமும்
மக்களிடத்தே என்றோ
நிரூபணமாகிவிட்டது...!
ஆயினும்
நிதர்சனமாய்
தலைமைத்துவம்
தவறிழைப்பதை
தட்டிக் கேட்கிறேன்!

முகஸ்துதியாய்...
முகாரிபாடும்
விட்டில்களாய்
மாறலாகாது...!
மனிதாபிமானத்துடன்
மற்றவர்களை
மதிக்கும் மாண்பு
மனசுக்குள்
மகுடம் சூட வேண்டும்.

உங்கள்
பரிசுகளும், விருந்துபசாரமும்
எங்களை
ஆராதிக்கப் போவதில்லை
ஆளுக்கொரு
சட்டமியற்றும்
அதிபர்களின்
முகத்திரையைக் கிழிக்கவே
முத்திரை பதிக்கிறேன்!

- கிண்ணியா
ஜெனீரா ஹைருல் அமான்

## ஒரு நண்பனின் பிள்ளைக்காய்...

அருமந்த புத்திரனை
இழந்து தவிக்கின்ற
அருமை நண்பா நிலாம்
உன்- அவஸ்தையும் வேதனையும்
அடியேனுக்குப் புரிகிறது

இருக்கின்ற
இரண்டொரு பிள்ளைகளில்
ஒன்றை இழந்தால் - அது
எத்தகைய கொடுமையென்று
பெற்றவர்க்குத்தான் தெரியும்
எனக்கும் தெரிகிறது

இந்த இளம் வயதில் - புத்திரனை
இழப்பதென்பது
இமயமலை சரிந்து
விழுந்தாற்போல்...
ஆயினும் - நீ
உறுதியாய் எழுந்து நின்றாய்
அந்த ஓர்மையை
மெச்சுகிறேன்!

உள்ளத்தின் வலி
முகத்தில் மறைக்கப்பட்டாலும்
கண்கள் காட்டிக் கொடுத்தன!
கலங்காதே நண்பா...
எழுந்து நடனே
எனதருமைத் தோழனே...

எமது நட்பு...
அரை நூற்றாண்டை
நெருங்குகிறது...
மண்ணாறில் மலர்ந்த நட்பு
அப்பழுக்கின்றி
இன்னும் தொடர்கின்றதெனில்
இதய சுத்தியென்பதன்
இலக்கணம் இஃதே!

அடிக்கடி சுகவீனம் எனினும்
இறுதி ஐந்தாறு தினங்களில்
அரச மருத்துவமனையில்
மகன் மயக்கநிலையில்...
நீயோ நடைப்பிணமாய்...

நண்பா... உன்
இல்லாளும் பிள்ளைகளும், உறவினரும்
எத்தகைய வேதனையில்
வெந்து தணிந்திருப்பர்
என எண்ணால்
உரை முடிகிறது!

கடந்த வாரம்
உன் தலைமையில்
நடந்த விழாவுக்காய்
கல்லொழுவை வந்திருந்தேன்!
வெள்ளிக்கிழமை
உன் பிள்ளையின்
நல்லடக்கத்திற்காய்
மீண்டும் வந்தேன்!
என்ன கொடுமையடா இது!

இணைபிரியா நண்பா
என்னருமை நிலாமே...
இழப்பு பெரியதுதான்!
இறைநாட்டம் அப்படி
என்ன செய்வது...
எழுந்து நில்...
துணிந்து செல்...!

- கலைவாதி கலீல்



## கவனம்! மிகக் கவனம்!!

மாறு வேடம் பூண்ட
மனித உருவொன்று!
அதற்குள் இருப்பது
காமக் கண்ணிரண்டு!!

குயவனா - அது
இல்லை கயவனா
அல்லது சாணக்கியனா
சிங்கமா இல்லை
சிறுத்தையா அல்லது
பசுத்தோல் போர்த்திய
வேங்கையா?

புரிந்து கொள்ள கஷ்டம் தான்!
முகத்திரையை கிழித்திடுவேன்
எழுத்தாயுதம் என் கையில்
கவனம்! மிகக் கவனம்!!

எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா
அதிபர்
முஸ்லிம் பாலிகா
வித்தியாலயம்
கஹட்டோவிட்ட

## தரிசனம்

### எத்தனை காலம் தான்...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்த மலையக வைத்தியசாலையின் பெயர்ப்பலகையில் 'ஆகார வைத்தியசாலை' என்று எழுதப்பட்டுள்ளதாம் ஆதார வைத்தியசாலை (Base Hospital) என்பதுதான் ஆகாரம் (உணவு) என்று திரிபடைந்துள்ளது.

இந்திய நிதியுதவியில் கட்டப்பட்டுள்ள இந்த வைத்தியசாலை, சாப்பாட்டுக்(குரிய) வைத்தியசாலை என்ற பொருள் தருகிறது. இந்த டிக்கோயா கிளண்டன் வைத்தியசாலை, தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியிலேயே அமைக்கப்பட்டுள்ளது. அதிலே இப்படித் தமிழ்க் கொலையென்றால்... மன்னிக்க முடியுமா?
சிங்களக் கொலையை மன்னிப்பார்களா? ஆங்கிலக் கொலையை மன்னிப்பார்களா? தமிழ்க் கொலைகளை மட்டும் மன்னித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள் ஏமாளிகளா?

நான் அடிக்கடி சுட்டிக் காட்டும் விடயம் இதுதான்.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் நடைபெறும் தமிழ்க் கொலைகளைப் பற்றி அடிக்கடி பேசும் போது, தரிப்பு பத்திகளில் எழுதி வருகிறேன். மேடைகளிலும் சுட்டிக்காட்டி வருகிறேன். ஆயினும் பலன் பூஜ்யமே!

தெருக்களில் பொருத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகைகள், விளம்பரத்தட்டுக்களில் காணப்படும் தமிழ்ப்பிழைகளைப் பற்றி ஒரு தனி நூலே எழுதலாம். இப்பிழைகளை விடுபவர்கள் அல்லது செய்பவர்கள் ஏனைய மொழிசார்ந்தோர் எனில் கூட மன்னிக்கலாம். மாறாக இத்தகையோர் தமிழர்களாக, தமிழ் பேசுபவர்களாக இருப்பதுதான் மிகுந்த மன வருத்தத்தை அளிக்கிறது. வானொலி, தொலைக்காட்சி தமிழ் அறிவிப்பாளர்களுக்கு ன, ண, ந கர பேதங்கள், ல, ள, ழ, கர பேதங்கள் ர, ற, கர பேதங்கள் தெரிவதில்லை. இது என் காதால் கேட்ட (வெறுப்படைந்த) உண்மை! உண்மையோ உண்மை! கடந்த வார இலத்திரனியல் ஊடகமொன்றை (பிரபல தொலைக்காட்சி) கண்டும் கேட்டும் கொண்டிருந்தேன். அறிவிப்பாளருடன் நேயரொருவர் தொடர்பு கொள்கிறார்.

அறிவிப்பாளர்: உங்கள் பெயரென்ன?

நேயர்: கலைச் செல்வி

அறிவிப்பாளர்: அப்படியா! களைச் செல்வி... அழகான பெயர். களைச் செல்வி நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் களைச் செல்வி?

அட ஆண்டவா?

## கறுத்த கோடுகள் ஒரு கணிப்பு





மேமன் சமூகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ஏ.எஸ்.எம். நவாஸின் சிறுகதைத் தொகுதியொன்று அண்மையில் வெளியானது. தொகுதியின் மகுடம் 'கறுத்த கோடுகள்'.

அழகிய முகப்போவியத்துடன் வெளிவந்துள்ள இத்தொகுதியில், தினகரன், மித்திரன், மல்லிகை, இனிய நந்தவனம், இருக்கிறம் ஆகிய பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளியான சிறிய, பெரிய சிறுகதைகள் பதினான்கு இடம்பெற்றுள்ளன.

பிரபல எழுத்தாளர் அன்னலட்சுமி இராஜதுரை தனது முன்னுரையில், ''நவாஸின் சிறுகதைகளை ஒட்டு மொத்தமாக நோக்கும் போது கொழும்பு நகரைப் பிரதான பகைப்புலமாகக் கொண்ட மிகச் சாதாரண மக்களின் வாழ்க்கைப் போராட்டங்கள் மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் அன்பு, பரிவு, பாசம் பொங்க சித்தரிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். இரு சிறுகதைகள் பிராணிகள் மீது ஜீவகாருண்யத்தைப் புலப்படுத்துவதாக அமைந்திருக்கின்றன'' என்று கூறியுள்ளார்.

தனதுரையின் போது நூலாசிரியர், ஏ.எஸ்.எம். நவாஸ், சில சுவையான விடயங்களைக் கூறி வைத்துள்ளார். ஏழு வயதுப்பையன். பிஞ்சுவயதில் என் கையில் புத்தகம், பாடப்புத்தகமல்ல... பெரிய நாவல்.'பெற்ற மனம்' மு. வரதராசன் எழுதியது. மூழ்கி நிற்கிறேன் முழு நாவலிலும். அகரம் படிக்கின்ற வயதில் அப்படியொரு ஆர்வம்... இதுவே என் வாசிப்புக்கு அடித்தளமிட்ட நாவல். தமிழில் திக்கியோ திணறியோ வாசிக்கின்றேன்.

என் வாசிப்பு அநுபவம் இவ்வாறுதான் ஆரம்பமானது. யாழ்ப்பாணம் எம். ஓ. லேனில் பெரிய வீடு. மின்சாரம் இல்லை. குப்பி விளக்கு, மங்கலான வெளிச்சம். அதன் மண்ணெண்ணை வாசம். அந்த வாசத்தோடு வாசித்தலைப் பழகினேன். பின்னர் மின்சார வசதி. அப்போது என் கையில் தவழ்ந்த நாவல். வடுவூர் துரைசாமி ஐயங்காரின் நாவல். இன்னும் சில மர்ம நாவல்கள். சில சித்திரக் கதைகள் அம்புலிமாமா... ஆறாம் வகுப்பு படித்த காலம் கைகளில் தாங்கினேன்... 'பேசும் பொற் சித்திரமே'.

நம் நாட்டு எழுத்தாளர் ஜி.நேசனின் குஜராத் மோகினி, நார்தேவி. லஷ்மியின் நாவல்கள், பிடி சாமியின் கதைகள், கண்ணதாசனின் 'சிவப்புக்கல் மூக்குத்தி', 'விளக்கு மட்டுமா சிவப்பு' ஜெயகாந்தன், சுஜாதாவின் எழுத்துக்களும் பிடித்துப் போயின. பின்னாலில்... மகாபாரதம், இராமயணம், விக்கிரமாதித்தன் போன்ற புராண இதிகாசங்கள் எனது தந்தையார் எனக்குப் புகட்டிய கதைகள்... பழந்தமிழ் இலக்கியங்களில் பரவசமானேன்.

இத்தனைக்கும் என் தந்தை மேமன் சத்தார் (அப்துல் சத்தார்) தமிழ் மொழி சாராத மேமன் சமூகத்தைச் சார்ந்தவர். குஜராத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் எனது பாட்டனாரான அப்துல்லாஹ் இப்றாஹீமின் குடும்பமும் ஒன்று. எனது தந்தை சிறு குழந்தையாக இருக்கும் போதே சிலோனுக்கு வந்தவர் ஹிந்தி, உருது, குஜராத்தி என எழுதவும் பேசவும் தெரிந்தவர் எனது தந்தை. எனது வாப்பும்மா ஆயிஷா, அசல் குஜராத்தியாவார். மேமன் பெண்மணி. எனது தந்தைக்கு இம்மூன்று பாஷைகளையும் அவர்தான் கற்றுக் கொடுத்தார். எனினும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பக்கல்வியைத் தமிழில் தான் என் தந்தை கற்றார். தாய் இலங்கை முஸ்லிமாவார். என் தமிழ் வாசிப்பு தாய் மொழியாகவே எனக்குக் கிடைக்கப் பெற்றது. இவ்வாறு பல சுவையான விடயங்களை நூலாசிரியர் கூறியுள்ளார்.

ஏலவே நான்கு நூல்களை வெளியிட்டிருக்கும் நவாஸின் இந்நூல் எல்லோரும் படிக்க ஏற்றதாகும்.

நூலின் பெறுமதி 200 ரூபா மட்டுமே

- சர்தார்

## பலாலியில் பஞ்ச பாண்டவர்கள்; மேலும் சில தகவல்கள்...



கடந்த வார 'ஜலதரங்க'த்தில் பலாலியின் பஞ்ச பாண்டவர்கள் ஐவர் பற்றிக் கூறப்பட்டிருந்ததல்லவா! அவர்களைப் பற்றி மேலும் பல சுவையான தகவல்கள்

சிரேஷ்ட மூத்த, வயதான எழுத்தாளர்களான இவ்வைவரும் இலங்கையின் எண்டிசையையும் சேர்ந்தவர்கள் என்று கடந்தவாரம் குறிப்பிடப்பட்டிருந்தது. திக்குவல்லை, அநுராதபுரம், புத்தளம், கிழக்கு - மூதூர், வடக்கு- மன்னாரைச் சேர்ந்த இவ்வைவரும் அதிபர்களாக, கல்விப்பணிப்பாளர்களாக இருந்து தான் ஓய்வு பெற்றார்கள். அநுராதபுர அன்பு ஜவஹர்ஷா மிகச் சிறந்த அதிபராகப் பணியாற்றியவர். அகில இலங்கை அதிபர் சங்கத்தின் உப தலைவராகவும் செயலாளராகவும் பணியாற்றியவர். திக்வல்லைக்கமாலும், மூதூர் முகைதீனும், ஜவாத் மரைக்காரும் அதிபர் தரத்தில் இருந்து கல்விப்பணிப்பாளராகி ஓய்வு பெற்றவர்கள். கலைவாதி கலீல் இலங்கை கல்வி நிர்வாகசேவை அதிகாரி தரத்தில் ஆசிரியர் கலாசாலை உப அதிபராக, தேசிய கல்வியல் கல்லூரியின் விரிவுரையாளராக - உப பீடாதிபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

ஒட்டு மொத்தமாக, எழுத்தாளர்களான இவர்கள் ஐவரும் இலங்கைக் கல்விச் சேவையிலும் அதியுயர் பதவிகளைப் பெற்றவர்கள் என்பதற்காகவே இந்த தகவலைக் கூறிவைக்கின்றேன். அதிலும் கமால், ஜவாத் மரைக்கார், அன்பு ஜவஹர்ஷா இம்மூவரும் சிங்கள மொழி பெயர்ப்புத் துறையிலும் பாண்டித்தியம் பெற்றவர்கள். என்பதும் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

சம கால சகபாடிகளாக இவ்வைவரும் இலக்கிய முதுசங்கள் எனலாம்.

- விஜி

# இனநல்லிணக்கத்திற்கு சவாலாகும் வியாபார வர்த்தகப் போட்டிகள்

ஏ.ஸீ.எம் அஸ்ஹர்
(ஓய்வு பெற்ற அதிபர்)
கொடேகொட, ஹெம்மாதகம.

இலங்கை முஸ்லிம்கள் இந்நாட்டில் குடியேறி ஆயிரம் வருடங்களை கடந்து விட்டதாக வரலாற்றுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. நீண்ட வரலாற்றைக் கொண்ட இந்நாட்டின் முஸ்லிம்கள் அவ்வப்போது பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த சிலரின் சீண்டல்களுக்கும், அத்துமீறல்களுக்கும் உட்பட்டு வந்துள்ளனர். அவை இனக்கலவரமாக உருவெடுத்து பல உயிர்களையும் சொத்திழப்பையும் ஏற்படுத்தியுள்ளன. வியாபாரிகளான அரபு நாட்டு முஸ்லிம்கள் இந்நாட்டிக்கு வந்து சிங்கள மன்னர்களின் அன்பையும், அபிமானத்தையும் பெற்றிருந்தது மட்டுமின்றி வியாபார நடவடிக்கைகளில் வரிச் சலுகைகளையும் பெற்று வியாபார சமூகமாக வாழ்ந்து வந்துள்ளனர். போர்த்துக்கேயர் வருகையின் போது சிங்களவர்களுடன் தோளோடு தோள் நின்று நாட்டுக்காக பல தியாகங்களைப் புரிந்துள்ளனர்.

மலைநாட்டை ஆட்சி செய்த ஸ்ரீ விக்ரம இராஜசிங்கனின் காலத்தில் ஏகாதிபத்திய படைத்தாக்குதலில் இருந்து தன்னைப் பாதுகாப்பதற்காக தன்னுயிரை ஈந்த முஸ்லிம் பெண்ணின் நினைவாக மஹியங்கனையில் உள்ள பங்கரகம்மன என்ற கிராமத்தை பரிசாக வழங்கி நன்றி பாராட்டிய வரலாறு பெரும்பான்மை சமூகத்தில் ஏனோ பேசப்படுவதில்லை.

ஏறாவூரைச் சேர்ந்த உமர் லெப்பை பணிக்கர் தன்னிடமிருந்த யானையைக் கண்டி எசல பெரஹராவுக்காக இலவசமாக வழங்கினார். அதனை நினைவுகூரும் வகையில் ஆயிரம் ரூபா நோட்டில் அவருடைய படம் பொறிக்கப்பட்டு இன்றுவரை நினைவு கூரப்பட்டு வருகிறது.

மாவனல்லை நகருக்கு அண்மையில் அமைந்துள்ள உத்துவன்கந்த என்ற இடத்தில் வாழ்ந்த பிரபல கொள்ளைக்காரன் சரதியல் என்பவனைக் கைது செய்வதற்காக சென்று அவனது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிர் நீத்த முஹம்மத் சுபான் ஒரு முஸ்லிம் ஆவார். இலங்கை பொலிஸ் வரலாற்றில் முதன் முதலாக கடமையின் போது உயிரிழந்ததற்காக வருடாவருடம் பொலிஸ் தினம் அனுஷ்டிக்கப்பட்டு அவர் நினைவு கூரப்படுகிறார். இந்த நாட்டு முஸ்லிம்கள் வியாபாரிகளாக இந்தத் தீவில் காலடி எடுத்து வைத்து நாட்டின் மூலை முடுக்கெங்கும் பெரும்பான்மை சமூகத்துடன் இரண்டறக் கலந்து பல நூற்றாண்டுகள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

நகர்புறங்களிலும் கிராமப் புறங்களிலும் வியாபார நிலையங்களை உருவாக்கியும், விவசாய உற்பத்தியை மேற்கொண்டும், பொருளாதாரத்துக்கு பெரும் துணை செய்தவர்கள் முஸ்லிம்கள் தான். இலங்கைப் பொருளாதாரம் வீழ்ச்சிகண்டு, நிதி நெருக்கடிகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் பெருந்தொகை அந்நியச் செலாவணியை அரசுக்கு அள்ளி வழங்கி நாட்டின் பொருளாதார மீட்சிக்கு முஸ்லிம் தனவந்தர்கள் உதவிக்கரம் நீட்டிய வரலாறுகள் பல உள்ளன.

பெரும்பான்மை சமூகத்தினர் பலர் தமது நம்பிக்கைக்குரிய நண்பர்களாகவும், கௌரவத்துக்குரிய மேன்மக்களாகவும் முஸ்லிம்களை ஏற்றுக் கொள்கின்றனர். தாம் உழைக்கும் பணத்தைப் பாதுகாத்து வைக்கும்படி முஸ்லிம்களிடமே ஒப்படைத்திருக்கின்ற பல சந்தர்ப்பங்களை நாம் பார்த்திருக்கிறோம்.

முதலாளி, மஹத்தியா, துரை என்று கிராமப் புறங்களில் மட்டுமின்றி நகர்ப்புறங்களிலும் மரியாதை கொடுத்து முஸ்லிம்களை அழைத்து வந்தனர். நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இனக் கலவரங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் சமயத் தலைவர்கள், பிக்குமார்கள் முன்வந்து அவற்றைத் தடுத்து சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக உழைத்தனர். அதுமட்டுமன்றி முஸ்லிம்களின் பக்கம் நின்று குரல் கொடுக்கக் கூடியவர்களாகவும், முஸ்லிம்களுக்காக தம் இனத்தினரை எதிர்த்து பேசக்கூடியவர்களாகவும் முஸ்லிம்களுக்காக தமது இனத்தாருடன் வாதிடக்கூடிய மக்கள் பலர் இருப்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதே வேளை முஸ்லிம்கள் என்றால் வெறுப்புடன் பார்க்கக்கூடிய, கீழ்த்தரமாகப் பேசக்கூடிய, குரோத மனப்பான்மையுள்ள சிறு தொகையினர் இல்லாமலும் இல்லை. எந்த ஒரு சிறு சம்பவத்தையும் பெரிதுபடுத்தி அதனை வைத்து பேரழிவுகளை உருவாக்க முயற்சிப்பதும், அமைதியையும், சமாதானத்தையும் விரும்பும் நல்ல மக்கள் மத்தியில் விஷமக் கருத்துக்களை பரப்பி குரோதத்தை வளர்க்க முயற்சிப்பதற்குமான பல்வேறு சந்தர்ப்பங்களை நாம் பார்க்கிறோம். இப்படியான துவேஷக் குழுக்கள் வரலாற்றில் பல கலவரங்களையும் பேரிழப்புக்களையும் ஏற்படுத்தக்காரணமாக இருந்துள்ளன. கட்சி, குல, மத வேறுபாடுகளை மறந்து அந்த சந்தர்ப்பங்களில் அவர்கள் ஒன்றுபடுகின்றனர். முன்னைய காலங்களில் முஸ்லிம்களுக்குகிருந்த வரவேற்பும், கௌரவமும் பல்வேறு காரணங்களினால் வலுவிழந்து சென்றுள்ளன.

முஸ்லிம்கள் பெரும்பாலான நகரங்களில் தமது வர்த்தக மேலாதிக்கத்தைக் கொண்டிருப்பது துணிவியாபாரம், கட்டடப் பொருள்கள் வியாபாரம் போன்றவற்றிலே முன்னணி வகிக்கின்றமையையும் உள்நாட்டு உற்பத்திகளான தேயிலை,இரப்பர்,தென்னை போன்றவற்றைக் கொள்வனவு செய்து முதலீட்டுகின்ற காரணிகள் உற்பத்திப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது வெளிநாடுகளிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து விநியோகம் செய்வது மட்டுமன்றி வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களை பெற்று நல்ல நிலையில் முஸ்லிம்கள் வாழ்வாதாரங்களை கொண்டிருப்பது போன்ற காரணிகள் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் ஆற்றாமை ஏற்பட்டிருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது. இந்நாட்டில் முஸ்லிம்களின் கல்வி,பொருளாதார விடயங்களிலே கண்டுள்ள துரித வளர்ச்சியானது பெரும்பான்மை சமூகத்தினரிடையே பல சந்தேககங்களை ஏற்படுத்தியுள்ளதை அறியலாம். முஸ்லிம்கள் தங்களது திறமையால் பெரும்பான்மை சமூகத்தின் வியாபார நடவடிக்கைகளுக்குப் பெரும் சவாலாக இருக்கின்றனர். எமக்கு வர வேண்டிய இலாபங்களை இவர்கள் ஈட்டிக் கொள்கின்றனர். எங்கள் வியாபார நிலையங்கள் வீழ்ச்சியடைவதற்கு முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் தான் காரணம் என்ற ஒரு கருத்து அவர்களின் இனவாத செயற்பாடுகளுக்கு காரணமாக அமைந்துள்ளதை அவர்களது செயற்பாடுகள் மூலம் அறிந்து கொள்ள முடியும்.



நகரங்களிலே வியாபார முயற்சிகளை மேற்கொண்டு வரும் வர்த்தகர்கள் தனது விற்பனையை அதிகரித்துக் கொள்வதிலே பெரும் ஆர்வமாய் இருப்பர். அவ்வாறான நிலையில் இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகளில் எவர் முன்னுக்கு வந்தாலும் அவர்களை இந்த வியாபாரிகள் ஊக்குவிக்கவே செய்வர். முஸ்லிம்களின் வியாபாரங்களை பாதுகாக்க வேண்டும் என்ற தேவை எந்த பெரும்பான்மை வியாபாரிகளுக்கும் இருக்கப் போவதில்லை.

அரசியல் வாதிகள் தனது வாக்குப் பெட்டியை நிரப்பிக் கொள்ள இனவாதத்தை,பிரதேசவாதத்தை நாடுவது போல, வியாபாரிகள் தமது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள இனவாதத்தை நாடுகின்ற ஒரு நிலை இன்று ஏற்பட்டுள்ளது.இன்று பெரும்பான்மை சமூகத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக பல்வேறு முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. என்பதை சமூக வலைத்தளங்களின் மூலம் அறிகின்றோம். அரச அதிகாரிகள் மட்டத்திலே பல நடவடிக்கைகள் பகிரங்கமாக இடம் பெற்று வருகின்றன. துறைமுகங்களிலே, விமான நிலையங்களிலே, ஒரே பொருளுக்கு பெரும்பான்மைக்கு ஒரு விதமாகவும், சிறுபான்மையினருக்கு வேறுவிதமாகவும் கட்டணங்கள் விதிக்கப்படுவதும், வியாபார நிலையங்களை பரிசோதிக்க வரும் அதிகாரிகளின் மனிதாபிமானம் காட்டப்படாத உத்தரவுகளினால் வியாபாரங்களை மூடிவிடும் நிலையும் ஏற்பட்ட சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. புதிய வியாபார முயற்சிகளை மேற்கொள்ள விரும்புவோரிடம் நடைமுறைச் சாத்தியமற்ற நிபந்தனைகளை விதித்து அந்த முயற்சியை கைவிட செய்கின்றனர். இவ்வாறான திட்டமிடப்பட்ட அல்லது சில சமயம் திட்டமிடப்படாத பல குரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இது இவ்வாறிருக்க எமது சில முஸ்லிம் சகோதரர்களின் நடவடிக்கைகள் பற்றியும் நாம் பராமுகமாக இருக்க முடியாது. அதிகமான முஸ்லிம்கள் நல்ல முறையில் இறைவனுக்கு அஞ்சி வியாபாரம் செய்து வருகின்ற போதும் சில வியாபாரிகள் ஏமாற்று, பொய், நாணயமின்மை,தந்திரம், மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் போன்ற காரணிகளால் முழு முஸ்லிம் சமூகமும் அவப்பெயரைச் சுமப்பதுடன் இனவாதிகளின் இனத்துவேஷ செயற்பாடுகளுக்கும் அது காரணமாக அமைகிறது.

முஸ்லிம்கள் சில வியாபார நிலையங்களை நிறுவுவதற்கு சில நகரங்களில் திட்டமிடப்பட்ட அடிப்படையில் தடைகளை ஏற்படுத்துகின்றனர். பாதை மறியல் போராட்டங்கள் மதகுருமார்களின் ஊர்வலங்கள் போன்ற முயற்சிகள் மூலம் தடைகள் ஏற்படுத்துகின்றனர்.அதன் காரணமாக கைவிடப்பட்ட சம்பவங்கள் சில நகரங்களில் நிகழ்ந்துள்ளன.

எமது வியாபார நடவடிக்கைகள் பின்னடைந்து செல்வதற்கு மேலும் பல காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றமையையும் நாம் புறக்கணித்து விட முடியாது.

பொருட்களை விற்பனை செய்கின்ற பொழுது சிலர் உண்மையை மறைத்து ஏமாற்றி விற்பனை செய்தல், அளவு நிறுவைகளில் மோசடி செய்தல் விற்ற பொருட்களில் குறைபாடுகள் இருந்து திருப்பி எடுத்து வந்த அவற்றை ஏற்றுக் கொள்ள மறுப்பது, சந்தை நிலைமையை கருத்திற் கொள்ளாது பொருட்களை கூடிய விலைக்கு விற்றல், உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்யும் பொழுது அளவு நிறுவையில் குறைத்தல், பெரிய இலாபத்தை ஈட்டுவதற்காக அவர்களது உற்பத்திப் பொருட்களை குறைந்த விலைக்கு வாங்குதல், வியாபார ரீதியாக ஒப்பந்தங்கள் செய்து விட்டு ஒப்பந்தங்களை நிறைவேற்றாது விட்டுவிடுதல், நல்ல பொருட்களுடன் மோசமான பொருட்களை கலத்தல், பெற்ற கடனை திருப்பி ஒப்படைக்காமை போன்ற காரணிகளால் முஸ்லிம் சமூகத்தை சந்தேகக் கண்கொண்டு நோக்குகின்றனர். இவர்கள் ஏமாற்றுபவர்கள், இவர்கள் பொய் சொல்லக் கூடியவர்கள், இவர்கள் மோசடி செய்யக் கூடியவர்கள் என்ற பிழையான மதிப்பீட்டிற்கு முஸ்லிம் சமூகம் உள்ளாகிறது. இவ்வாறான பின்னணியிலே முஸ்லிம்களின் வியாபார வர்த்தக நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதில் பின்னடைவு காணப்படுகிறது.

முஸ்லிம்கள் வாழ்விடங்களை கொண்டிராத பல நகரங்களிலே பெருமபான்மையினரின் வியாபார நடவடிக்கைகளை மட்டுமே எதிர்பார்த்தவர்களாக உள்ள வியாபார நிலையங்கள் பல நகரங்களில் உள்ளன. சூழவுள்ள முஸ்லிம் மக்கள் குடியிருப்புக்களை கொண்ட, பெரும்பான்மையினர் வாழும் நகரங்களில் உள்ள வியாபார நிலையங்களும் உள்ளன. இவ்வாறன நிலையில் ஓர் இனத்தவர் இன்னொரு இனத்தவரின் வியாபாரங்களை புறக்கணிக்கும் நிலை உருவாகும் ஏனெனில் அது பெரும் சமூகப் பாதிப்புகளை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இன்று சமூக வலைத்தளங்களில் பல்வேறு விஷம பிரசாரங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. முஸ்லிம்களின் வியாபார உற்பத்திப் பொருட்கள் பல சிங்கள மொழிப் பெயர்களிலே சந்தைக்குவிடப்படுகின்றன என்றும் அவற்றைப் பெரும்பான்மையினர் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் பெரும்பான்மை தீவிர செயற்பாட்டாளர்களின் கண்டனங்களுக்கும், கேளிக்கும் அவை உள்ளாகியுள்ளன. வியாபாரத்தை பெருக்கிக் கொள்ளும் ஒரு தந்திர முயற்சியாக இது நோக்கப்படுகிறது. இது பற்றி சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டிய காலம் உதயமாகி விட்டது.

உண்மையில் இலங்கையிலே இனவாதம் என்பதைவிட சிறுபான்மையினரின் வியாபார வளர்ச்சி வியாபாரத்தில் உள்ள தேர்ச்சி, மனிதாபிமானத் தொடர்பாடல் முறைகள் சிறிய இலாபத்துடன் தரமான பொருட்களை விற்பனை செய்தல், வியாபாரத்தில் நம்பிக்கை, நாணயம் உள்ளவர்கள் என்ற நற்பெயர் போன்ற காரணங்கள் அவர்களின் வியாபார வளர்ச்சிக்கு காரணமாகிருக்கின்றன. அதன் காரணமாக பெரும்பான்மை மக்களின் உள்ளங்களிலே நல்லெண்ணம் காணப்படுகிறது. அவ்வாறான மக்கள் அதிகமானவர்கள் இன்றும் முஸ்லிம் கடைகளிலேயே கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்கின்றனர் இதுவே பெருபான்மை மக்களின் ஆற்றாமைக்கு காரணமாக அமைந்துள்ளன.

குறிப்பாக முன்னைய காலங்களிலே அதிகமான சிறு முஸ்லிம் வியாபாரிகள் பல மைல் தூரம் நடையாகச் சென்று விவசாய உற்பத்தி பொருட்களை நியாய விலைக்கு வாங்குதல் ஆடு, மாடு போன்ற கால்நடை வியாபாரங்கள், மற்றும் துணி வியாபாரம், மிட்டாய்,மின்சாரப் பொருட்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் இவற்றை பெரும்பான்மை மக்களின் கிராமங்களுக்குச் சென்று செய்து வந்தனர். ஆனால் இவ்வியாபார முயற்சிகள் தற்போது வெகுவாகக் குறைந்து கொண்டு செல்கின்றன. இனவாதம் முஸ்லிம்களின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

---




## முன்னாள் சபாநாயகரும் தென்னிலங்கையின் முதல் ஆளுநருமான தேசமான்ய பாக்கீர் மாக்கார்



இலங்கைத் தீவில் முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றத் தலங்களுள் ஒன்றாகிய வரலாற்றுப்புகழ்மிக்க பேருவளையின் மருத்துவத்துறைசார்ந்த புகழ்பூத்ததொரு குடும்பத்தில் 1917.05.12இல் ஹக்கீம் அலியா மரைக்கார் முஹம்மத். நாஹிலா உம்மா தம்பதியினரின் புதல்வராக எம். ஏ. பாக்கீர் மாக்கார் பிறந்தார்.

ஆரம்பக்கல்வியை பேருவளையில் பெற்றுக் கொண்ட பாக்கீர் மாகார், தனது தந்தையின் வைத்திய நிலையம் கொழும்பு ஹல்ஸ்டோப்பில் அமைந்திருந்ததால் கொழும்புக்கு வந்து செண். செபஸ்ரியன் கல்லூரியில் இடைநிலை கல்விகற்று பின்னர் மருதானை ஸாஹிராவில் இணைந்து கல்வியைத் தொடர்ந்தார். கலாநிதி டீ.பி. ஜாயாவின் தலைமையில் இயங்கிய ஸாஹிராக் கல்லூரி பாக்கீர் மாக்காரின் பிரகாசமான பிற்கால வாழ்க்கைக்கு வித்திட்டு வழிகாட்டியது என்றால் அது மிகையாகாது.

ஸாஹிராவில் கற்று ஸாஹிராவில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் கல்லூரிப்பாடநெறி மேற்பார்வையாளராக கடமையாற்றிய இவர், இலங்கை முஸ்லிம்களின் எதிர்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளது என்பதை எடுத்துக்காட்டி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் முஸ்லிம்கள் கற்க வேண்டுமென ஆணித்தரமாக எடுத்துக் கூறினார்.

பாக்கீர் மாக்கார் தனது இனத்தின் மீது மட்டுமன்றி, நாட்டின் மீதும் அதிக பற்றுக் கொண்டவர். இரண்டாம் உலகயுத்த காலத்தில் பிரித்தானியாவின் குடியேற்றமாக இருந்த அன்றைய இலங்கை அரசு நாட்டைப்பாதுகாக்க பாதுகாப்புப் படையொன்றை நிறுவியது. அப்போது சட்டக்கல்லூரி மாணவனாக இருந்த பாக்கீர் மாக்கார், தனது சட்டப்படிப்பை முடக்கிவிட்டு தேசத்தைக் காக்கும் படையில் இணைந்து பயிற்சி பெறுவதற்கு இந்தியாவிலுள்ள ஹைதராபாத் இராணுவத்தளத்திற்குச் சென்று பயிற்சி பெற்று திரும்பிவந்து சுதந்திரப் போராளி டீ.பி. ஜாயாவோடு இணைந்து நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டார்.

1960இல் நடந்த பொதுத்தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளராக பேருவளைத் தொகுதியில் போட்டியிட்டுப் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். 1965, 1977 பொதுத் தேர்தல்களிலும் ஐ.தே.க. வில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றார். 1977 பாராளுமன்றத்தில் உதவி சபாநாயகராகப் பணியாற்றினார். 1978இல் அனைத்துப் பாராளுமன்றக் கட்சிகளாலும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்ற சபாநாயகராகப் பணிபுரிந்த பாக்கீர் மாகார், 1978 இன் புதிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த காலப்பகுதியில் சிறப்பாகக் கடமையாற்றியதுடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, சட்டம் இயற்றும் பாராளுமன்றம், நீதித்துறை போன்ற துறைகள் ஒன்றுடன் ஒன்று முரண்படாத வகையில் கருமமாற்ற வழிகாட்டினார்.

1983-1988 காலப்பகுதியில் மந்திரிசபை உறுப்பினராக இருந்து அன்றைய ஐ.தே.க.வின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களுக்கு உறுதுணையாக நின்று கடமையாற்றினார். இவரது திறமை, ஆளுமை, மும்மொழிப்புலமை, அனுபவங்களைக் கருத்திற்கொண்டு 1998இல் தென் மாகாணசபை ஆளுனராக நியமிக்கப்பட்டார்.

இறைபக்திமிக்க பாக்கீர் மாக்கார் அநீதிகளை எடுத்துக்காட்டி உணர்வுபூர்வமாகச் செயற்படுபவர். 1978இல் சூறாவளியால் பாதிக்கப்பட்ட கிழக்கிழங்கை மக்களுக்கு முன்னின்று உதவினார். 1983இல் கொடுமைப்படுத்தப்பட்ட தமிழ்ச்சகோதரர்களுக்கு தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தஞ்சமளித்தார். இலங்கை இனரீதியாகப் பிரிக்கப்படக்கூடாது என்பது இவரது அரசியல் சித்தாந்தமாகும்.

சிறந்த சட்டத்தரணியான பாக்கீர் மாகார், களுத்துறை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். உலகப்பாராளுமன்ற குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்று சிறப்புரைகள் ஆற்றி நாட்டுக்குப் பெருமை சேர்த்தார். 1978இல் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜயவர்தனவும் பிரதமர் ஆர். பிரேமதாசவும் இளவரசி டயானாவின் திருமணத்திற்குச் சென்ற போது நாட்டின் பதில் ஜனாதிபதியாக பாக்கீர் மாக்காரை நியமித்துச் சென்றமை வரலாற்றுப் பதிவாகும். இச்சந்தர்ப்பத்தில் இவர், 17 நாட்கள் பதில் ஜனாதிபதியாக கடமையாற்றினார்.

பட்டம், பதவிகளைப் பெற்ற போதும் ஆரம்பத்தில் எந்நிலையில் வாழ்ந்தாரோ அதே நிலையில் பிற்காலத்திலும் வாழ்ந்தார். சாதாரண மக்களுடனான உறவை ஒருபோதும் துண்டித்துக் கொள்ளவில்லை. அரசியலோடு தனது பணிகளை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் பொதுப்பணிகளுக்காகவும் நேரத்தை ஒதுக்கிக் கொண்டார். 'டோன்', 'உதயம்' போன்ற ஆங்கில, தமிழ் இதழ்களை பல சிரமங்களுக்கு மத்தியில் அறிமுகம் செய்து முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துச் செல்ல வழிகாட்டினார். ஈராக் நாட்டின் உதவியோடு ஏறாவூரில் சதாம்ஹுஸைன் கிராமத்தை அமைத்துக் கொடுத்தார். காத்தான்குடி கர்பலா கிராமமும் பாக்கீர் மாக்காரின் முயற்சியால் முன்னெடுக்கப்பட்டதாகும். இந்தோனேஷிய ஹஜ்விமானம் கிம்புலாப்பிட்டியில் வீழ்ந்து நொறுங்கிய போது அங்கு விரைந்து இரவு - பகலாகப் பணியாற்றினார். 1985இல் கந்தளாய்க்குளக்கட்டு உடைப்பெடுத்த போது அங்கு சென்று நிவாரணப்பணிகளை மேற்கொண்டார்.

தனது சொந்த வாழ்வின் இவ்வாமிய வழியில் வாழ்ந்த பாக்கீர் மாக்கார், பாராளுமன்றத்திலும் கூட தல்பியை கையிலேந்திய வாறு முஸ்லிம்களின் உரிமைகள் பறிக்கப்படும் போதெல்லாம் குரல் கொடுத்தார். பாராளுமன்றத்தில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கென தொழுகையறை ஒன்றை ஒதுக்கிக் கொண்டதோடு, ஜும்ஆ நாட்களில் பாராளுமன்ற விவாதங்கள் நீடிப்பதை நிறுத்துமாறு அன்றைய பிரதமர் ஆர். பிரேமதாஸவை எதிர்த்து முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாத்தார். முஸ்லிம்களின் கல்விப் பீடங்களில் ஒன்றாகிய கபூரிய்யாவின் காணியில் ஒரு பகுதியை சுவீகரிக்க முயன்ற போது சுவீகாரம் தொடர்ந்தால் தனது சபாநாயகர் பதவியைத் துறப்பதாக அறிவித்து கபூரிய்யாக் காணியைப் பாதுகாக்க முயற்சித்தார்.

சிங்கள மக்களின் ஆதரவைப்பெற்று மூன்று தசாப்தங்கள் பேருவளைத் தொகுதியில் பணிபுரிந்து சிங்கள - முஸ்லிம் உறவுக்குப் பாலமமைத்தார். பழைய பாராளுமன்றத்தின் கடைசி சபாநாயகரும், புதிய பாராளுமன்றத்தின் முதல் சபாநாயகருமான பாக்கீர் மாகார், மாணவத் தலைவனாக, நல்லாசானாக, சட்டவல்லுனராக, பிரதிசபாநாயகராக, சபாநாயகராக, அமைச்சராக, மாகாண ஆளுநராக, சிறந்த குடும்பத்தலைவனாக, சிறந்த தந்தையாக என்றெல்லாம் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு வாழ்ந்த அன்னாரது 80 ஆண்டுகால வாழ்க்கை இன்றைய இளம் அரசியல் தலைமுறைகளுக்கு ஒரு சிறந்த பாடமாகும்.

''நான் ஒரு முஸ்லிம் என்பது பற்றி பெருமைப்படுகிறேன். அதேநேரம் நான் ஓர் இலங்கைப் பிரஜை என்பது பற்றி மிகப் பெருமித மடைகிறேன்'' என மார் தட்டிப்பேசிய மகான் பாக்கீர் மாக்கார், 1997 செப்டம்பர் 10இல் இவ்வுலக வாழ்க்கையைப் பிரிந்தார். எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரது சேவைகளை ஏற்று ஜென்னத்துல் பிர்தௌஸை வழங்குவானாக!

பார்பாரினுக்கும், முழுநாட்டுக்கும் பெருமை சேர்த்த தேசமான்ய பாக்கீர் மாக்காரின் புதல்வர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், தந்தையின் பணிகளைத் தொடர்ந்து ஆரவாரமில்லாமல் அமைதியாகப் பணி புரிவது தந்தைக்கு ஆற்றும் நன்றிக்கடனாகவும் தந்தையின் கப்ருக்கு ஒளியாகவும் இருக்க பிரார்த்திப்போம்!

# நாட்டின் ஏழு இலட்சம் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்தாவிடின் பாரிய விளைவுகள்

## மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார்



(வத்துகாமம் நிருபர்)

நாட்டில் சுமார் ஏழு இலட்சம் கட்டாக்காலி தெருநாய்கள் காணப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்தா விட்டால் உயிர்ச்சேதம் பாரிய பணவிரயம் என்பவற்றை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையின்மாதாந்தக் கூட்டம் அதன் தலைவர் எல்.டி.நிமலசிறி தலைமையில் பல்லேகலை மாகாண சபை மண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஒருவரை தெருநாய் ஒன்று கடித்தால் அவருக்கு ஆறு ஊசிகள் வரை போடப்பட வேண்டும். ஓர் ஊசியின் விலை ஆறாயிரம் ரூபாவாகும். ஒருவருக்கு முப்பதாராயிரம் ரூபா வீதம் செலவிடப்பட வேண்டியுள்ளது. அதே நேரம் மாதம் இரண்டாயிரம் பேர் விசர் நாய்கடிக்கு ஆளாவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. அப்படியாயின் ஒரு மாதத்திற்கு மட்டும் இப்படி 36000 வீதம் 2000 பேருக்கு 72 000 000 (72 கோடி ரூபா) செலவாகிறது. அந்த அடிப்படையில் பண விரயம் உயிர்ச்சேதம் என்பவற்றை சந்திக்க வேண்டியுள்ளது.

2006ம் ஆண்டின் பின்பே நாய்களைக் கொல்வதற்கு ஜீவகாருண்ய அடிப்படையில் தடை விதிக்கப்பட்டது. கம்பளையில் ஒரு சிறுவனை 40ற்கும் மேற்பட்ட இடங்களில் ஒரு நாய் கடித்துக்குதறிய சம்பவம் இடம் பெற்றுள்ளது. எனவே இது விடயமாக ஆக்கபூர்வ நடவடிக்கைகள் தேவை.

இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், மறுக்கக்கட்டி மக்களின் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் நோக்க வேண்டும். அவர்கள் எமது மாகாணத்திற்கு உரியவர்களாக இல்லாத போதும் அப்பிரச்சினை தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில் சிங்கள வர்களுக்கு ஆதரவு தெரிவித்தார்கள் என்ற ஒருகாரணத்திற்காக அவர்கள் 4 மணிநேர இடைவேளையில் வெளியேற்றப்பட்டார்கள். 20 வருடங்கள் தங்கள் காணி பூமியை அவர்கள் சென்று பார்க்கக் கூட இல்லை. இதன் காரணமாக 20 வருடங்களில் பெரிய காடாக அவர்களது வசிப்பிடங்கள் மாறின. ஆவர்கள் அரசின் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்தை பிடிக்கவில்லை. தமது சொந்தக் காணிகளையே துப்பரவு செய்தனர். அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களின் தொல்லை போன்றே இன்று உள்ளூராட்சி சபைக ளுக்கு குப்பை பிரச்சினையும் பாரிய தொரு பிரச்சினையாக உள்ளது. எனவே மாகாண சபை என்ற வகையில் கட்டாக்காலி நாய்களது தொல்லைக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# ஐக்கிய மாணவ முன்னணி அமைப்பின் நிகழ்வு

(கிண்ணியா நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சி திருமலை மாவட்ட ஐக்கிய மாணவ முன்னணி அமைப்பின் நிகழ்வு ஒன்று அதன் தலைவர் நௌபர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கிண்ணியா நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு தேசிய முன்னணியின் தேசிய தலைவரும், நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சருமான வசந்த சேனநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு திருமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் முன்னணித் தலைவர் நௌபருக்கான நியமன கடிதம், இளைஞர்களுக்கு அங்கத்துவத்துவம் மற்றும் ரீ சேட் ஆகியவற்றை இதன் போது அமைச்சர் வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூபின் செயலாளர் சதாத் கரீம்,திருமலை மாவட்ட மாணவ முன்னணியின் செயலாளர் முதித.சட்டத்தரணி இசுரு,ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அல்கிம்மா அனுசரணையில் மத்திய முகாமில் இலவச குடிநீர்





(எம்.முஹம்மட் ஜபீர் - சவளக்கடை)

மத்தியமுகாம் பிரதேசத்தில் அல்-கிம்மா நிறுவனத்தின் அனுசரணையில் வறிய குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்புக்கான நிதி வழங்கும் நிகழ்வு சாளம்பைக்கேணி-04 அல்-அஷ்ரனி மகளிர் சங்க தலைவி வை.நஸ்லியா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், முன்னாள் கல்முனை மாநகர பிரதி முதல்வருமான ஏ.எல்.அப்துல் மஜீட், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாவிதன்வெளி பிரதேச அமைப்பாளர் ஏ.சீ.நஸார், அமீர் அலி விளையாட்டுக் கழக தலைவரும், அல்-அமானா சமூக சேவைகள் அமைப்பின் தலைவருமான எம்.வீ.நபாஸ், அல்-கிம்மா நிறுவனத்தின் நாவிதன்வெளி பிரதேச இணைப்பாளர் மௌலவி எஸ்.எம்.சலீம், ஹைரியா ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் எம்.அலியார், நூரானியா ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஏ.சீ.அன்வர், ஆசிரியர் எஸ்.கில்வான், மகளிர் சங்க உறுப்பினர்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

## காணாமல்போன பெண் சடலமாக மீட்பு

(கலகெதர நிருபர்)

கெகிராவ, சூரியகம பிரதேசத்தின் தம்புலுஓய நீரோடையில் குளிக்கச் சென்ற பெண் ஒருவர் காணாமல் போய் 18 மணித்தியாலத்திற்கு பின்னர் கடந்த 13 ஆம் திகதி சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கெகிராவ பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு மரணமடைந்தவர் ஹொரான பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான எல்.சிறியலதா என்பவராவார்.

தனது மகன் திருமணம் செய்துள்ள சூரியவெவ பிரதேசத்துக்கு வந்த இப்பெண் இம்மாதம் 12 ஆம் திகதி தம்புலு ஓயாவில் குளிக்கச் சென்றுள்ளார். குளித்த பின்னர் நீரோடைக்கு அருகில் உடைகளை மாற்றிக் கொண்டிருக்கும் போது கால் இடறி நீரோடையில் வீழ்ந்து நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் கெகிராவ பொலிசாரினதும், கிராமவாசிகளதும் தேடுதல் நடவடிக்கையில் இப்பெண் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இம்மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெகிராவ பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

## பட்டமளிப்பு விழா நாளை

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

கல்முனை ஜாமிஆ மன்பயில் ஹிதாயா அரபுக் கல்லூரியின் 11ஆவது மௌலவி ஆலிம் பட்டமளிப்பு விழா மற்றும் 12ஆவது தலைப்பாகை சூட்டும் விழா மற்றும் ஜவாதுல் ஜாமிஆ எச்.எம்.பீ. முஹைதீன் ஹாஜியார் மண்டப திறப்பு விழா ஆகிய நிகழ்வுகள் நாளை (17) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கல்முனை ஜாமிஆ மன்பயில் ஹிதாயா அரபுக் கல்லூரியின் கலாபீட கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

கல்முனை ஜாமிஆ மன்பயில் ஹிதாயா அரபுக் கல்லூரியின் கலாபீட அதிபர் மௌலவி பீ.எம். முஹம்மது அலி (அன்வாரி பாகில் மனாஹிரி - இந்தியா) தலைமையிலும் கலாபீட ஆளுநர்சபைத்தலைவர் எஸ். எல். மீராசாஹிப் முன்னிலையிலும் இடம் பெறும் இவ்விழாவில், கலாபீட மாணவர்கள், பெற்றோர்கள், ஊர்ப்பிர முகர்கள், புத்திஜீவிகள், உலமாக்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவிருக் கின்றனர்.

## கிழக்கு மாகாண படை வீரர் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ ஹலீம் கிண்ணியா)

கிழக்கு மாகாண படை வீரர் நிகழ்வானது இன்று (16) காலை 09.00 மணிக்கு திருகோணமலை பிடர்டிக் கோட்டை வளாகத்தில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.இப் படை வீரர் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னான்டோ உட்பட சிவில் பாதுகாப்பு படையினர்.முப்படை உயர்அதிகாரிகள் பொலிஸ் உயரதிகாரிகள் என பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# ஊடகவியலாளர் காதருக்கு விருது வழங்கி கௌரவிப்பு



மருதமுனையைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.எம்.எம்.ஏ.காதர் ஊடகத் துறைக்கு ஆற்றிவரும் சேவையை கௌரவித்து மருதமுனை ஹியுமன் லிங்க் விஷேட தேவையுடையோருக்கான வளப்படுதல் நிலையத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மருதமுனை ஹியுமன் லிங்க் விஷேட தேவையுடையோருக்கான வளப்படுத்தல் நிலையத்தின் 10 வருட நிறைவு நினைவுப் பெருவிழா அண்மையில் மருதமுனை கலாச்சார மத்திய நிலைய மண்டபத்தில் ஹியுமன் லிங்க் பணிப்பாளர் ஏ.எல்.கமறுத்தீன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.சி.அன்சார் இவருக்கான விருதை வழங்கி கௌரவித்தார். இந்த நிகழ்வில் விஷேட அதிதியாகக் கலந்து கொண்ட கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல் விஷேட நினைவு மலரை வழங்கி கௌரவித்தார்.

நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீரின் பிரத்தியேகச் செயலாளர் யூ.எம். வாஹித்,மக்கள் தொடர்பு அதிகாரி எம்.ஐ.நயீம்,ஹியுமன் லிங்க் ஸ்தாபகரும்,தலைவருமான கே.எம். றொஷான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார தொண்டர்களை சந்தித்தார் மஸ்தான்

கடந்த யுத்த காலத்தில் சுகாதார தொண்டர்களாக பணியாற்றியும் தமக்கான நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாததன் காரணமாக தமக்கான நிரந்தர நியமனம் கிடைக்கும் வரை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியின் பிரதான அலுவலகத்திற்கு முன்பாக தொடர் ஈடுபட்டுள்ளவர்களை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இனத்தலைவருமான கே.காதர் மஸ்தான் நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களால் வட மாகாணத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 820 தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனத்தை பெற்றுத்தர உதவுமாறு கேட்டுக்கொண்டனர்.

அத்துடன் கடந்த யுத்த காலத்தில் பல வருடங்களாக பணியாற்றிய தமக்கு நியமனங்கள் வழங்கப்படாமல் பின்னர் பலருக்கு அரசியல் ரீதியாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்போதைய அரசாங்கத்தின் சுற்றறிக்கையின் அடிப்படையில் தாம் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

மேலும் வடக்கில் இறுதியாக இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் தாம் கலந்துகொண்டு பணியாற்றியதாகவும் குறித்த வேலைத்திட்டம் முடிந்த பின்னர் தாமும் கை விடப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து மஸ்தான் எம்.பி கருத்து தெரிவிக்கையில்,

உண்மையிலேயே யுத்த காலத்தில் வைத்திய, சுகாதார துறைகளில் பணியாற்றியவர்கள் போற்றப்படக்கூடியவர்கள் கடந்த ஆட்சியில் தாம் விரும்பியவர்களுக்கு அரசியல்வாதிகளால் வேலைவாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டாலும் இந்த நால்லாட்சியில் தகுதி உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

எனினும் இந்த தொண்டர்கள் யுத்த காலத்தில் சேவை யாற்றியவர்கள். ஒரு சிலர் 15 வருடங்கள் சேவையாற்றி இருக்கின்றனர் எனவே இவ்வாறானவர்களுக்கு தகைமை அடிப்படையில் சேவை அடிப்படையிலாவது அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். இந்த விடயம் தொடர்பில் அவரிடம் நேரடியாகவே கலந்துரையாடி இந்த தொண்டர்களின் நிலையினை உணர்த்தி அவர்களுக்கான வேலை வாய்ப்பினை பெற்றுக்கொடுக்க முயற்சிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.















அக்கரைப்பற்று ஈ. டீ. எஸ் சர்வதேச பாடசாலை நடாத்திய அபகஸ் முதலாம் நிலைக்கான பரீட்சையும், பெற்றோர்களுக்கான ஒன்றுகூடலும் அண்மையில் அட்டாளைச்சேனை, தைக்கா நகர் ஒஸ்றா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது ஈ.டீ.எஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எம்.மனாஸ், தவிசாளர் வை.பி.இக்பால், ஆசிரியர் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான பணிப்பாளர் எம்.எஸ்.எம்.பிஸ்ரின் ஆகியோர் உரையாற்றுவதனையும், மாணவர்கள் பரீட்சை எழுதுவதனையும், கலந்து கொண்ட பெற்றோர்களையும் படங்களில் காணலாம். (திகாமடுல்ல நிருபர்)

# நிதியமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய வரிகள்

அ.அருண் பிரசாந்த்

நாட்டில் தற்போது நிலவிவரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் விதத்தில் வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் வினைத்திறனை ஊக்குவிப்பதற்காகவும் புதிய வரி சிராய்வு யோசனையொன்றை நிதியமைச்சு தற்போது வெளியிட்டுள்ளது.

இதில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள், பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி, உள்நாட்டு தகவல் தொழில்நுட்பக் கைத்தொழில், வீட்டுத்தளபாடங்கள், ஊழியர் நம்பிக்கை நிதியம், கல்வி, சுற்றுலா, மீன்பிடி மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் உள்ளிட்டவற்றுக்கு வரிச்சலுகை வழங்கவும் மது, புகையிலை, பந்தயம் மற்றும் சூதாட்டத்துக்கு உயர் வரியை விதிக்கவும் அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பிலான யோசனை எதிர்வரும் சில நாட்களுள் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்துக்கு உள்ளெடுக்கப்படும் எனவும் நிதியமைச்சர் ரவிகருணாநாயக்கவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பிலான முழுமையான விபரங்கள் பின்வருமாறு,

### புதிய வருமான வரி கட்டமைப்பு

### 01) வரி விகித கட்டமைப்பு

#### அ) நிறுவன வரி

நிறுவன வரி விகிதமானது 03 அடுக்குகளைக் கொண்டு கட்டமைப்பிற்கு இலகுபடுத்தப்பட்டுள்ளதோடு, சலுகை வரி விகிதமானது நியம விகிதத்தின் 50% ஆகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

| விகித வகுப்பு | தொடர்புற்ற துறைகள் | விகிதம் |
|---|---|---|
| சலுகை விகிதம் | • சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்<br>• பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி<br>• உள்நாட்டு தகவல் தொழில்நுட்ப கைத்தொழில்<br>• வீட்டுத்தளபாட உற்பத்தி<br>• கல்வி, சுற்றுலா, மீன்பிடி மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்<br>• புதுப்பிக்கத்தக்க சக்தி<br>• பொருளனுப்பல் சேவை வசதிகள்<br>• ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாபம் அல்லது ஓய்வூதிய நிதியம் மற்றும் சேவை முடிவுறுத்தல் நிதியம்<br>• அறக்கொடை நிறுவனங்கள் | 14% |
| நியம விகிதம் | • வங்கிகள், நிதியியல் மற்றும் காப்புறுதி நிறுவனங்கள்<br>• உற்பத்தியாளர்கள்<br>• விற்பனையாளர்கள்<br>• இங்கு குறிப்பீடு செய்யப்படாத ஏனைய துறைகள் | 28% |
| உயர் விகிதம் | • மதுசாரம்<br>• புகையிலை<br>• பந்தயம் மற்றும் சூதாட்டம் | 40% |

#### ஆ) நிறுவன வரி விலக்களிப்புக்கள்

- மைய செயற்பாடுகள் (இறக்கியேற்றும் வியாபாரம், சர்வதேச வழங்கல் சேவை, பன்னாட்டு கூட்டிணைப்பு முதலியன)
- தகவல் தொழில்நுட்பம் / வணிகச் செய்முறை புறச் செய்விப்பு IT/ BOP சேவை ஏற்றுமதி
- தங்கம், இரத்தினக்கற்கள், ஆபரண ஏற்றுமதி
- சர்வதேச தலைமைக் காரியாலயங்களை மீண்டும் தாபித்தல்
- சர்வதேச வர்த்தக தளத்திலிருந்தான சம்பாத்தியம்
- சேதனப் பசளை தயாரித்தல்
- திண்மக்கழிவு முகாமை
- தனிநபர் சேவைகள் ஏற்றுமதி
- வேளாண்மை/ கோழிவளர்ப்பு/ பாற்பண்ணை
- நடுத்தர வருமான வீடமைப்பு(வீட்டு அலகு ஒன்றின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு மேற்படாதிருத்தல்)

#### (இ) தனி நபர் வருமான வரி

| வகை | வரியற்ற முதல் நிலை | வரி விகிதம் |
|---|---|---|
| தனி நபர் வருமான வரி | வருடமொன்றுக்கு ரூபா 500,000- | வருடமொன்றுக்கு,<br>முதல் ரூபா 600,000 = 04%<br>அடுத்து ரூபா 600,000 = 08%<br>அடுத்து ரூபா 600,000 = 12%<br>அடுத்து ரூபா 600,000 = 16%<br>அடுத்து ரூபா 600,000 = 20%<br>மிதி = 24% |
| உழைக்கும் போது செலுத்தும் வரி | வருடமொன்றுக்கு ரூபா 1,200,000- உ.செ.வ. செலுத்துவோருக்கான வரி செலுத்துவதற்கு தகைமை பெறுகின்ற வருமானம் வருடமொன்றுக்கு ரூபா 7000,000- | |
| | இரண்டாம் நிலை ஊழிய வருமானம் | மாதமொன்றுக்கு<br>முதல் ரூபா 500,000/- = 10%<br>மிதி = 20% |

#### ஈ) நிறுத்தி வைத்தல் வரி

| வகை | | வரி விகிதம் |
|---|---|---|
| வங்கி வைப்பிலிருந்தான வட்டி வருமானம் | சிரேஷ்ட பிரஜை | வருடமொன்றுக்கு ரூபா 1.5 மில் வரை விலக்களிப்பு |
| வங்கி வைப்பிலிருந்தான வட்டி வருமானம் | ஏனைய நபர்கள் | 05% |
| | கம்பனிகள் | 14% |
| வாடகை | 10% | |
| ரூபா 50,000- இற்கு மேற்படுகின்ற விசேட சேவைக் கட்டணம் | 05% | |
| ஏனைய அனைத்து கொடுப்பனவுகள் | 14% | |
| கருத்தியல் வரிக் கடன் (NTC) | நீக்கப்பட்டுள்ளது | |

#### உ) மூலதன ஈட்டுவரி = 10% (நிலம், கட்டடம் மற்றும் பட்டியலிடப்பட்ட பங்குகள் நீங்கலாக ஏனைய முதலீடுகள் மீது ஏற்புடையதாகும்)

#### ஊ) பங்குடைமை வியாபாரம் = 10%

### 2) முதலீடுகளுக்கான வரிச் சலுகைத்திட்டம்

முதலீட்டு நிதியானது தொழில் உருவாக்கம் மற்றும் புவியில் ரீதியிலான அமைவிடம் என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டு, தேய்வுப் பெறுமதி கொடுப்பனவிற்கு உரித்துடைய சொத்துகளுக்காக முதலீட்டாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்படுகின்ற செலவீனம் அதிகரிக்கப்பட்ட பெறுமானத் தேய்வு என கழிக்கப்பட முடியுமான வகையில், புதிய முதலீடுகளுக்காக சலுகைத் திட்டமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதலீட்டினை அடிப்படையாகக் கொண்டு உரித்துடைய சலுகை தொடர்பான சுருக்கம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

#### அ) ஐ.அ.டொ.03 மில்லியனுக்கு குறைந்த முதலீடு

| முதலீட்டு நிதி | முதலீடு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள கால எல்லை | பிரதேசம் | பெறுமானத் தேவுக் கொடுப்பனவு விகிதம் |
|---|---|---|---|
| ஐ.அ.டொ.03 மில்லியனுக்கு மேற்படாவிடின் | 03 வருடங்கள் | வட மாகாணம் | 200% |
| | | ஏனைய மாகாணங்கள் | 100% |

#### ஆ) தொழில் உருவாக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டு சலுகைகள்

| முதலீட்டு நிதி | புதிய தொழில் உருவாக்கம் | பிரதேசம் | பெறுமானத் தேய்வுக் கொடுப்பனவு விகிதம் |
|---|---|---|---|
| ஐ.அ.டொ. 03-05 மில்லியன் | 250 இற்கு மேற்படாத | வட மாகாணம் | 200% |
| | | ஏனைய மாகாணங்கள் | 100% |
| ஐ.அ.டொ. 05-50 மில்லியன் | 350இற்கு மேற்படாத | வட மாகாணம் | 200% |
| | | ஏனைய மாகாணங்கள் | 100% |

#### இ) பாரியளவிலான முதலீடுகளுக்கான கொடுப்பனவு

| முதலீட்டு நிதி | பிரதேசம் | பெறுமானத் தேய்வுக் கொடுப்பனவு விகிதம் | தீர்த்து வைக்கப்படாத வியாபார நட்டங்களை முன்கொண்டு செல்வதற்கு முடியுமான கால எல்லை |
|---|---|---|---|
| ஐ.அ.டொ. 50-100 மில்லியன் | நாடு முழுவதும் | 100% | 10 வருடங்கள் |
| ஐ.அ.டொ. 100 -2,000 மில்லியன் | நாடு முழுவதும் | 150% | 10 வருடங்கள் |
| ஐ.அ.டொ. 2,000 மில்லியனுக்கு மேற்பட்ட | நாடு முழுவதும் | 150% | 25 வருடங்கள் |

#### ஈ) துறைமுக அபிவிருத்திக்கான முதலீடுகள்

| முதலீட்டு நிதி | பிரதேசம் | பெறுமானத் தேய்வுக் கொடுப்பனவு விகிதம் | தீர்த்து வைக்கப்படாத வியாபார நட்டங்களை முன்கொண்டு செல்வதற்கு முடியுமான கால எல்லை | நிறுவன வரி |
|---|---|---|---|---|
| ஐ.அ.டொ. 2,000 மில்லியனுக்கு மேற்படாவிடின் | நாடு முழுவதும் | 100% | 25 வருடங்கள் | முதலீட்டுக் கொடுப்பனவு பூரணமாக பயன்படுத்தப்படுகின்ற கால எல்லை வரை = 0%<br>அடுத்து வரும் 15 வருடங்கள் = 07% |

#### உ) நிறுத்தி வைத்தல் வரி தொடர்பான விலக்களிப்பு

| முதலீட்டு நிதி | பிரதேசம் | நிறுத்தி வைத்தல் வரி விலக்களிப்பு ஏற்புடையதான கால எல்லை | விலக்களிப்பு வகை |
|---|---|---|---|
| ஐ.அ.டொ. 2,000 மில்லியனுக்கு மேற்படாவிடின் | நாடு முழுவதும் | முதலீட்டுக்கான பெறுமானத் தேய்வு கொடுப்பனவு ஏற்புடையதான கால எல்லை | வதிவிடமல்லாத கம்பனிகளுக்கான பங்கிலாப கொடுப்பனவுகள்<br>வெளிநாட்டு சேவை பணியாளர்களுக்கு அதிக பட்சம் 20 வரையில் உ.போ.செ. வ |

# கூட்டுறவு அடிப்படையில் தையல் பயிற்சி நிலையங்கள்





நாடு முழுவதிலும் 180 தையல் பயிற்சி நிலையங்களை உருவாக்கி கூட்டுறவின் அடிப்படையில் 6மாதங்களின் பின்னர் அவற்றை தொழில் நிறுவனங்களாக மாற்றும் திட்டமொன்றை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு முன்னெடுத்து வருவதாக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

கற்பிட்டியில் அல் - அக்ஸா தையல் தொழிற்பயிற்சி நிலையத்தை திறந்து வைத்த பின்னர் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, தனது அமைச்சின் கீழான இலங்கை புடைவைகள் மற்றும் ஆடைகளுக்கான நிறுவனம் (சிலிட்டா) கடந்த காலங்களில் இவ்வாறான நிலையங்களை உருவாக்கிய போதும் பயனாளிகளுக்கும் நிறுவனத்திற்குமிடையிலான தொடர்புகள் இல்லாமல் போனதனால் உரிய பயனை ஈட்டமுடியாத நிலை ஏற்பட்டது. எனவே தான் புதிய திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இனமத பேதமின்றி நாடளாவிய ரீதியில் இந்த பயிற்சி நிலையங்களை உருவாக்கி வருகின்றோம். ஆரம்பத்தில் 3000பேருக்கு பயிற்சி வழங்குவோம். ஒவ்வொரு நிலையத்திற்கும் பெறுமதியான ஜூக்கி மெஷின்கள் வழங்கப்படுகின்றன. ஒரு நிலையத்தில் 20யுவதிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். இவர்களை பயிற்றுவிக்க போதனாசிரியர் ஒருவர் பணிக்கு அமர்த்தப்பட்டு வார நாட்களில் அமைச்சினால் சம்பளத்துடன் கூடிய மேலதிக பயிற்சி வகுப்புகளும் அவருக்கு வழங்கப்படுகின்றது.

இந்த ஆறு மாத தையல் பயிற்சி நெறியில் பங்கேற்கும் யுவதிகளுக்கு 80சதவீதம் வரவு இருக்க வேண்டும். அப்போதுதான் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்படும் தையல் இயந்திரங்கள் குறித்த நிலையத்தில் பயிற்சியை முடித்தவர்களுக்கு உரிமையாக்கப்படுவதுடன், இவர்கள் நிரந்தரமாக கூட்டுறவு அடிப்படையில் தமது தொழிலை தொடர்ந்து மேற்கொள்ள அமைச்சினால் நிதி உதவி வழங்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புத்தளம் மாவட்டத்தில் 10தையல் பயிற்சி நிலையங்களை உருவாக்கவுள்ளோம். இதன் மூலம் வருமானம் குறைந்த பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். இந்த நிகழ்வில் புத்தளப் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நவவி, மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்களான அலிசப்ரி, வஹ்யா,முஸம்மில் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஆசான்களுக்கு ஒரு மணிமகுடம் கௌரவிப்பு விழா

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

எங்கள் ஆசான்களுக்கு ஒரு மணிமகுடம் எனும் நிகழ்வின் கீழ் மட்டக்களப்பு மத்திய கல்வி வலய ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரியில் 2000ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வு வைஎம்கே ஸ்டார் அமைப்பின் செயற்குழுத் தலைவர் எம். ஐ. முபாறக் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 24 ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இந்நிகழ்வில் மட்டக்களப்பு மத்திய வலய கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். இஸ்ஸதீன், அலிகார் தேசியக் கல்லூரி அதிபர் எம்.ஏ. நஜீப் உட்பட முன்னாள் கல்வி அதிகாரிகளும், அதிபர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

உலகச் செய்திகள்

வடகொரிய ஏவுகணை விவகாரம்:

# ஐ.நா. பாதுகாப்பு சபையை அவசரமாக கூட்ட அமெரிக்கா – ஜப்பான் கோரிக்கை



வடகொரியா சமீபத்தில் நடத்திய ஏவுகணை பரிசோதனையால் ஆத்திரமடைந்துள்ள அமெரிக்கா மற்றும் ஜப்பான், ஐ.நா. பாதுகாப்பு சபையை அவசரமாக கூட்டி இவ்விவகாரத்தை விவாதிக்க கோரிக்கை விடுத்துள்ளது.

வடகொரியா தொடர்ந்து அணு குண்டு சோதனை, ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. தென்கொரியா, அமெரிக்கா மற்றும் ஐ.நா.சபை கடும் எச்சரிக்கை மற்றும் பொருளாதார தடை விதித்தும் கண்டு கொள்ளவில்லை.

இதனால் கொரிய தீப கற்பகத்தில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே தென் கொரியாவில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. புதிய ஜனாதிபதியாக மூன் ஜெ-இன் பதவியேற்றார். தகுந்த நேரம் வரும்போது வட கொரியா சென்று அதன் தலைவர் கிம் ஜோங்-உன்னை சந்திப்பேன் என்று அறிவித்தார். இதன்



மூலம் இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றம் குறையும் என எதிர்பார்க்கப்பட்டது. அதை பொய்யாக்கும் விதத்தில் வட கொரியா நேற்றுமுன்தினம் வட மேற்கு பியாங்யாங்கிலுள்ள குசாங் பகுதியில் மீண்டும் புதிய ஏவுகணை சோதனை நடத்தியது.

வட கொரியா பரிசோதித்த ஏவுகணை எவ்வளவு தூரம் சென்று இலக்கை தாக்கும் என கணிக்கமுடியாதது என பாதுகாப்பு துறை வல்லுநர்கள் கருத்து தெரிவித்திருந்தனர். மேலும், சர்வதேச நாடுகளின் கண்டனங்களை காதில் போட்டுக் கொள்ளாமல் வட கொரியா நடத்தியுள்ள இந்த ஏவுகணை பரிசோதனை அமெரிக்காவை ஆத்திரத்தின் உச்சிக்கே கொண்டு சென்றுள்ளது.

இந்நிலையில், ஐ.நா பாதுகாப்பு சபையை உடனே கூட்டி இவ்விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன. மேலும், வடகொரியாவின் ஏவுகணை குறித்து கருத்து தெரிவித்துள்ள ஐ.நாவுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹாலே, வடகொரியாவின் செயல் நியாயப்படுத்த முடியாதது. அந்த ஏவுகணையால் சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுக்கும் பாதிப்பு எனத் தெரிவித்துள்ளார்.

வட கொரியாவின் நடவடிக்கைக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்தனதையடுத்து, இன்று அல்லது நாளை பாதுகாப்புசபை கூடி வட கொரிய விவகாரம் குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# யெமனை வாட்டும் கொலரா: 115 பேர் பலி; 8,500 பேர் பாதிப்பு

சமாளிக்க முடியாமல் வைத்தியசாலைகள் திண்டாட்டம்



யெமனில் கொலரா நோய் பரவி வருவதையடுத்து சுமார் 115 பேர் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 8,500 பேர் இந்நோய் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

உள்ளே வரும் நோயாளிகளை கவனிக்க முடியாமல் வைத்தியசாலைகள் திணறி வருகின்றன என்று செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.


ஏப்ரல் 27ஆம் திகதி முதல் இதுவரை 115 பேர் கொலராவால் பலியாகியுள்ளனர்.

யெமனில் ஓராண்டுக்குள் இரண்டாவது முறையாக கொலரா நோய் பரவியுள்ளது. யெமனில் சவூதி ஆதரவு அரசுக்கும் ஈரான் ஆதரவு ஹூதி போராளிகளுக்குமிடையே கடும் மோதல் நடைபெற்று வருவதால் வைத்தியசாலைகள் முழுதும் இயங்க முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் கொலரா நோயாளிகள் வரவு நெரிசலாகியுள்ளது. ஒரே படுக்கையில் 4 கொலரா நோயாளிகளை வைத்துப் பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தென் சூடான், நைஜீரியா, சிரியா, நைஜீரியா ஆகிய நாடுகளுடன் மனிதார்த்த நெருக்கடி மிகுந்த பட்டியலில் உலகச் சுகாதார அமைப்பு யெமனையும் சேர்த்துள்ளது.

# பிரான்ஸின் மிக இளம் ஜனாதிபதியாக பதவியேற்றார் இமானுவெல் மக்ரோன்



பிரான்ஸின் புதிய ஜனாதிபதியாக இமானுவெல் மக்ரோன் (39) நேற்றுமுன்தினம் பதவியேற்றுக் கொண்டார். அந்நாட்டின் வரலாற்றில் மிகக்குறைந்த வயதில் ஜனாதிபதியாக இவர் பொறுப்பேற்றது சிறப்புக்குரியதாகும்.

பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கோயிஸ் ஹோலண்டேவின் பதவிக்காலம் முடிவதை தொடர்ந்து புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க கடந்த மாதம் 23ஆம் திகதி தேர்தல் நடந்தது. பிரான்கோயிஸ் ஹோலண்டே மக்கள் செல்வாக்கை இழந்ததால் இந்த தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்து விட்டார்.

இத் தேர்தலில் கன்சர் வேடிங் கட்சியை சேர்ந்த பிரான்கோயிஸ் பில்லன், வலதுசாரி தலைவர் மரின் லீ பென், லிபரல் சென்டிரிஸ்ட் கட்சியை சேர்ந்த இமானுவல் மக்ரான், மற்றும் இடது சாரிகள் சார்பில் ஜீன்-லக் மெலன்சான் ஆகிய 4 பேர் போட்டியிட்டனர். இரண்டு கட்டங்களாக நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் கடந்த வாரம் வெளியானது.

இதில் மக்ரோன் 65 சதவீத வாக்குகளுடன் தன்னை எதிர்த்து போட்டியிட்ட லீ பென்னை வீழ்த்தினார். மக்ரோனுக்கு கடும் போட்டியாக இருந்த லீ பென் தனது தோல்வியை ஏற்று கொண்டார். மக்ரோனை தொலைபேசி வழியே தொடர்பு கொண்டு பேசிய அவர், வலிமையான எதிர்க்கட்சியாக செயற்படுவோம் என தெரிவித்திருந்தார்.

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மக்ரோனுக்கு உலக தலைவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர். இந்நிலையில், மக்ரோன் ஜனாதிபதியாக பதவியேற்கும் நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. விழா அரங்கிற்கு வந்த மக்ரோன் மற்றும் அவரது மனைவிக்கு துப்பாக்கி குண்டுகள் முழங்க சிகப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

மக்ரோங் பதவியேற்பின்போது ஆற்றிய ஏற்புரையில்,

நாட்டின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை மீட்டெடுக்கப் போவதாக தெரிவித்த அவர், ''நமது சமூகத்திலுள்ள பிளவுகளும், பிரிவினைகளும் முடிவடைய வேண்டும். சுதந்திரம் மற்றும் ஒற்றுமையை உரக்க ஒலிக்கின்ற முன்னைய பிரான்ஸை விட, வலுவான பிரான்ஸ் உலகத்திற்கும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் அவசியமாகிறது. பிரான்ஸின் அதிகாரம் குறைந்து கொண்டிருக்கிறது என்பதல்ல, மிகப் பெரியதொரு மறுமலர்ச்சியின் விளிம்பில் இருக்கிறோம் என்று மெய்ப்பித்து மக்களை நம்ப வைப்பேன்'' என்றுதெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதியாக பதவியேற்கும் முன்னதாக முன்னாள் ஜனாதிபதி ஹோலண்டேவை சந்தித்த மக்ரோன், அணு ஆயுதங்கள் சம்பந்தமான குறியீடுகளை பெற்றுக் கொண்டார். மேலும், பதவியேற்றவுடன் முதல் அயல்நாட்டு பயணமாக இந்த வாரம் மக்ரோன் ஜெர்மன் சென்று அந்நாட்டு அதிபர் ஏஞ்சலா மார்கெல்லை சந்தித்து பேச உள்ளார்.

# நடுக்கடலில் தத்தளித்த 484 அகதிகள் மீட்பு



நடுக்கடலில் தத்தளித்த 484 பேரை இத்தாலி கடலோர காவல்படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.

இதுகுறித்து அதிகாரிகள் தெரிவித்ததாவது:-

அந்த அகதிகள் வடக்கு ஆபிரிக்கா பகுதியிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அடைக்கலம் தேடி ஆபத்தான முறையில் படகுகளில் பயணம் செய்துள்ளனர். அவர்கள் சென்ற படகு சனிக்கிழமை மத்தியதரைக் கடல் பகுதியில் விபத்துக்குள்ளானது.

நடுக்கடலில் தத்தளித்த 484 அகதிகளை அப்பகுதியில் ரோந்து சென்ற இத்தாலி கடலோர காவல் படையினர் மீட்டனர். மேலும், கடலில் மூழ்கி உயிரிழந்தவர்களின் ஏழு பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நடப்பாண்டில் இதுவரையில் அகதிகளாகச் சென்று நடுக்கடலில் விபத்தில் சிக்கி உயிருக்குப் போராடிய 45,000இற்கும் மேற்பட்டோரை இத்தாலி கடற்படையினர் மீட்டுள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை 40 சதவீதம் அதிகம் என்று இத்தாலி உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# அமெ. கூட்டுப்படை தாக்குதல்; ஐ.எஸ். தீவிரவாதிகள் 20 பேர் பலி



ஐ.எஸ். பயங்கரவாதிகளின் சொர்க்கம் என கருதப்படக்கூடிய அன்னா நகரத்தில் அமெரிக்க கூட்டுப்படைகள் அதிரடியாக நடத்திய வான் தாக்குதலில் 20 ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளனர்.

ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ். பயங்கரவாதிகள் மீது உள்நாட்டுப் படைகளுடன், அமெரிக்க கூட்டுப்படைகளும் இணைந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

ஆனாலும் தொடர்ந்து பாதுகாப்பு படைகளை குறி வைத்து தாக்குதல்களை நடத்தி வருகிற ஐ.எஸ். பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் இந்தப் படைகள் திணறி வருகின்றன.

இந் நிலையில் அன்பார் மாகாணத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் சொர்க்கம் என கருதப்படக்கூடிய அன்னா நகரத்தில் அமெரிக்க கூட்டுப்படைகள் அதிரடியாக குண்டு மழை பொழிந்தன.

இந்த வான் தாக்குதலில் 20 ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிரிழந்தனர். இது தொடர்பாக ஈராக்கின் ஜசிரா செயற்பாடுகள் பிரிவின் தலைவர் காசிம் முகமதி தெரிவிக்கையில், ஐ.எஸ். தீவிரவாதிகளின் சொர்க்கமாக கருதப்படக்கூடிய அன்னா நகரத்தில் கூட்டுப்படைகள் நடத்திய குண்டுவீச்சில் 20 பேர் கொல்லப்பட்டனர். அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் மனித கேடயங்களாக நிறுத்தப்பட்டுள்ளனர். அதற்கு மத்தியில் இந்த குண்டுவீச்சு நடந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

ஜூலையில் முடிகிறது பிரணாப்பின் பதவிக்காலம்:

# ஜனாதிபதி வேட்பாளரை தேர்வு செய்வதில் பா.ஜனதா – எதிர்க்கட்சிகளும் தீவிரம்

(திருச்சி சாஹுல் ஹமீது)



இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை மாதம் முடிவடையவுள்ளநிலையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை தேர்வுசெய்வதில் பா.ஜனதாவும், எதிர்க்கட்சிகளும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

ஜனாதிபதியாக பிரணாப் முகர்ஜி பதவி ஏற்று வருகிற ஜூலை மாதம் 25ஆம் திகதியுடன் 5 ஆண்டுகள் நிறைவடைகிறது. இதையடுத்து புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை பரிசீலிக்கும் பணிகள் இப்போதே தொடங்கி விட்டன. பா.ஜனதாவில் பாராளுமன்ற சபாநாயகர் சுமித்ரா மகாஜன், மத்தியஅமைச்சர் வெங்கையா நாயுடு மற்றும் ஜார்கண்ட் மாநில ஆளுநர் திரௌபதி மர்மு போன்ற மூத்த தலைவர்களின் பெயர்கள் அடிபடுகின்றன.

இந்த மூவரில் ஒருவரை பிரதமர் மோடியும், பா.ஜனதா தலைவர் அமித்ஷாவும் கலந்து பேசி முடிவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸும், பா.ஜனதாவுக்கு எதிரான கட்சிகளை ஒன்று திரட்டி வலுவான வேட்பாளரை நிறுத்த முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமாருடன் பேச்சு நடத்தினார். மேலும், இடதுசாரி கட்சிகளின் முக்கிய தலைவர்களுடன் இது தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார்.

இதேபோல் மேற்கு வங்காள முதலமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பனர்ஜியை இந்த வாரத்தில் சோனியா காந்தி சந்தித்து பேசவுள்ளார். எதிர்க்கட்சிகள் சார்பில் மேற்கு வங்காள முன்னாள் ஆளுநர் கோபால கிருஷ்ண காந்தி நிறுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால், தேசிய ஜனநாயக கூட்டணி- காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர் என இரு முனை போட்டி மட்டுமே நிலவும்.

ஜனாதிபதி தேர்தலை பொறுத்தவரை ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. பாராளுமன்ற, டில்லி மேல்-சபை எம்.பி.க்கள் மற்றும் மாநில சட்டசபை எம்.எல்.ஏ.க்கள் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பார்கள். மாநில மக்கள் தொகையின் அடிப்படையில் எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்களின் வாக்குகளுக்கு மதிப்பு உண்டு.

அண்மையில் நடந்து முடிந்த 5 மாநில சட்டசபை தேர்தல்களில் உத்தரபிரதேசத்திலும், ஜார்கண்டிலும் பா.ஜனதாவுக்கு அமோக வெற்றி கிடைத்தது. இதனால் பா.ஜனதாவுக்கு ஜனாதிபதி தேர்தலில் அதிக மதிப்பு கொண்ட வாக்குகள் கிடைக்கும்.

தற்போது பாராளுமன்றத்தையும், டில்லி மேல்-சபையையும் சேர்த்து மொத்தம் 776 எம்.பி.க்களும், அனைத்து மாநில சட்டசபைகளிலும் 4,120 எம்.எல்.ஏ.க்களும் உள்ளனர். இவர்களின் மொத்த ஓட்டு மதிப்பு 10 இலட்சத்து 98 ஆயிரத்து 882 ஆகும். இதில் 5 இலட்சத்து 49 ஆயிரத்து 422 வாக்குகளை ஒரு வேட்பாளர் பெற்றுவிட்டாலே அவர் ஜனாதிபதி ஆகிவிடுவார். அதனடிப்படையில் பார்த்தால், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தற்போது 410 எம்.பி.க்கள் மற்றும் 1,691 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு மூலம் 5 இலட்சத்து 32 ஆயிரத்து 19 வாக்குகள் கிடைக்கும். எனவே கூடுதலாக 17 ஆயிரத்து 422 வாக்குகள் மட்டுமே தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளருக்கு தேவை.

# பாராளுமன்றில் தனது குழந்தையுடன் ஒளிந்து விளையாடிய கனடா பிரதமர்!



தனது 3 வயது குழந்தையுடன் அலுவலகம் வந்த கனடா நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ, புகழ்பெறுவது எப்படி என உலக தலைவர்களுக்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரதமர் என்பவருக்கு ஓயாமல் பணிகள் இருந்து கொண்டுதான் இருக்கும். அன்றைய நாளில் ஆதரவாளர்களுடனான கூட்டம், பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்புவது, பல்கலைக்கழக தலைவர்களுடன் சந்திப்பு என பல பணிகள் இருந்த போதும் தன் மகனுடன் ஒளிந்து கொள்ளும் விளையாட்டை விளையாடவும் அவருக்கு நேரம் கிடைத்துள்ளது.

மூன்று வயது அட்ரியாங் ட்ருடோ, பிரதமர் அலுவலகத்தின் மார்பில் பால்கனி உட்பட அனைத்து இடத்தையும் சுற்றி வந்த புகைப்படம் சமூக ஊடகத்தில் பகிரப்பட்டு பலரையும் கவர்ந்துள்ளது.

தந்தையும் மகனும் சேர்ந்து ஊடகத்தையும், அரசியல்வாதிகளையும் எதிர்கொள்ளும் புகைப்படமும் அதில் அடங்கும். ''மிகவும் அற்புதம், உங்களுடைய தந்தையின்(ட்ருடோவின் தந்தை முன்னாள் பிரதமர்) புகைப்படத்தையும், உங்களின் புகைப்படத்தையும் பார்த்த ஞாபகம் இருக்கிறது; அத்தனவிற்கு எனது வயதும் உள்ளது'' என முகநூலில் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

''இது விளம்பரத்திற்கான செயலோ இல்லையோ ட்ருடோவை ஒரு குடும்பஸ்தர் என்று கூறி கொள்ளலாம்'' என மற்றொரு கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

45 வயதாகும் ஜஸ்டின் ட்ருடோ அவ்வப்போது தனது செய்கையால் இணையத்தில் புகழ்பெறுவது வழக்கம். எனவே இது அவருக்கு முதல் முறையன்று.

லிபரல் கட்சியைச் சேர்ந்த ஜஸ்டின் ட்ருடோ சிரிய அகதிகளுக்கு ஆதரவு வழங்கிய போதும், ஓரினச் சேர்க்கையாளர்களுக்கான பேரணியில் கலந்து கொண்ட போதும், தான் ஒரு பெண்ணியவாதி என்று வெளிப்படையாக தெரிவித்த போதும், தனது ஆதரவாளர்கள் மத்தியில் பாராட்டுக்களை பெற்றார். கடந்த வாரம் சிரிய அகதி ஒருவர் தன் குழந்தைக்கு ஜஸ்டினின் பெயரை சூட்டினார். குவாண்டம் கம்பியூட்டிங் பற்றி அவர் சட்டென அளித்த பதிலும், ட்ரம்பின் கை குலுக்கலை லாவகமாக எதிர்கொண்ட போதும் அவர் பாராட்டுகளை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கொண்டுவந்ததைப் போல, அடுத்த வருட மே தினத்தில் காலிமுகத்திடலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சுதந்திரக் கட்சியோ மக்களைக் கொண்டுவர வேண்டும் என்றும் சவால் அவர் விடுத்தார்.

தமது கட்சித் தலைமையகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச வெசாக் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இவர், விசேட அதிதியாக இதில் கலந்து கொள்வாரே ஒழிய எவ்விதமான அரசியல் பேச்சுக்களிலும் ஈடுபடமாட்டார் என்றும் ஆரம்பத்தில் கூறப்பட்டது.

ஆனால், அவர் இலங்கையில் ஆற்றிய உரையானது 75சத வீத அரசியல் கருத்துக்களையே கொண்டிருந்தது. இந்தியா-இலங்கைக்கு இடையிலான வர்த்தக உடன்படிக்கையான எட்கா குறித்தும் இராமர் பாலம் குறித்தும் அவர் பிரதானமாக தெரிவித்திருந்தார்.

நோட்வூட்டில் ஆற்றிய உரையின்போது இந்திய நிதியுதவில் இயங்கும் அம்புலன்ஸ் சேவையை நாடளாவிய ரீதியாக விருத்தி செய்வேன், மலையக மக்களுக்காக 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பேன் என வாக்குறுதிகளையும் வழங்கியிருந்தார்.

இப்படியெல்லாம் இலங்கைக்குள் கருத்து வெளியிட இவருக்கு உள்ள அதிகாரம் தான் என்ன? அதாவது, இந் நாட்டை இந்தியாவின் ஒரு மாநிலமாகத் தான் அவர் கருதிக் கொண்டிருக்கிறார் என்பது அவரின் உரையிலேயே தெளிவாகத் தெரிந்துவிட்டது. இதன்போது ஜனாதிபதியும் பிரதமரும் கூட அவருக்கருகில் இருந்தனர்.

இது நாம் கண்ட கனவோ அல்லது கற்பனையோ அன்றி கடந்த சில நாட்களுக்கு முன்னர் இலங்கையில் நடந்த ஒரு சம்பவமாகும் என்பதால் நாட்டு மக்களும் இதுவிடயத்தில் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் தத்தமது மே தினக் கூட்டங்களுக்குத் தான் மக்கள் அதிகளவாக வருகை தந்தனர் எனக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், எதற்கு மக்கள் அதிகமாக வந்தனர் என்பது அனைவருக்கும் தெரியும்.

எனவே, இவ்விரு கட்சிகளுக்கும் நாம் ஒரு சவாலை விடுக்கிறோம். அதாவது, அடுத்த வருட மே தினத்தில் தனித்தனியாகவோ அல்லது இரு கட்சிகளும் இணைந்தோ நாம் கொண்டுவந்ததைப் போல மக்கள் கூட்டத்தை காலி முகத்திடலுக்கு கொண்டுவரவேண்டும் என்றார்.

## வேலை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முடியாது என்று பொது நிறுவன அபிவிருத்தி பிரதியமைச்சரான ஹெரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி பிரச்சினை தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கு கருத்து வெளியிட பூரண சுதந்திரம் இருக்கின்றது. இதுகுறித்து அவர்கள் அரசுடன் பேச்சு நடத்த முன்வருவார்களாயின் நாம் அதனை ஒருபோதும் தட்டிக்கழிக்க மாட்டோம்.

பேச்சுக்கள் மூலம் தான் இதற்கான தீர்வுகளையும் முன்வைக்க முடியும். எனினும், அதனை விடுத்து வேலை நிறுத்தப் போராட்டங்களை மேற்கொள்வது ஆரோக்கியமான விடயமல்ல.

அரச பாடசாலையில் கல்விகற்று, அரச பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி முடித்து பட்டம் பெற்று, அரச வைத்தியசாலைகளிலேயே வேலை செய்து சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு அரசுக்கு எதிராகவே இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

ஏனெனில், அரச வைத்திய சேவையை எதிர்பார்த்து பல இன்னல்களுக்கு மத்தியல் தான் பொதுமக்கள் அரச வைத்தியசாலையை நாடுகிறார்கள். அப்படியானவர்களுக்கு அச்சேவையை கொடுக்காமல் இருப்பது முறையான ஒன்றல்ல.

அத்தோடு, எந்த நாட்டிலும் இல்லாதவகையில் இலங்கையில் மட்டும்தான் அரச வைத்தியர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும் வேலை செய்ய முடியும் என்ற சலுகை வழங்கப்பட்டுள்ளது. எனவே, இவை குறித்தெல்லாம் இத்தரப்பினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் அனைத்து அரச வைத்தியர்களையும் குறைகூறவில்லை. மாறாக அரசைக் குழப்ப வேண்டும் என்று வேண்டுமென்றே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களைத் தான் சுட்டிக்காட்டுகிறோம்.

எந்தவொரு பிரச்சினைக்கும் கலந்துரையாடலில் தான் சிறந்த தீர்வொன்றை முன்வைக்க முடியும். அதற்கிணங்க, சைட்டம் பிரச்சினை தொடர்பில் சகல தரப்பினருடனும் பேச்சு நடத்தவும் நாம் தயாராகவே இருக்கிறோம் என்றார்.

# இனமதங்களிக்கிடையிலான கலந்துரையாடல்




(ஹஸ்பர் ஏ ஹலீம் )

பிரித்தானிய உயர்ஸ்தானிக தூதரகம் மற்றும் ஆசிய அமைப்பு ஆகியவற்றின் நிதியுதவியுடன் தேசிய சமாதான பேரவையினால் அனைத்து இன மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று (15) மாலை திருகோணமலை வாடி வீடு விடுதியில் இடம்பெற்றது. இன மதங்களுக்கிடையிலான நல்லிணக்கம் புரிந்துணர்வு சமாதானத்தை ஏற்படுத்துதல் போன்றவற்றினூடாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல் இது தொடர்பான நோக்கங்களை சக்தி நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி எம்.ஏ.சதுராணி தெளிவுபடுத்தினார்.

மேலும் இக் கலந்துரையாடலில் மூவினத்தையும் சேர்ந்த மதகுருக்கள் தங்களது மதங்கள் தொடர்பான ஒற்றுமைகளையும் மதங்களில் கூறப்பட்டுள்ள விடயங்களையும் தெளிவுபடுத்தினர். குறிப்பாக ஊடகவியலாளர்களும் இதில் பங்கேற்றதுடன் தங்களுடைய மத நல்லிணக்கம் தொடர்பான கேள்விகளையும் தொடுத்தனர். மதகுருக்கள் சக்தி நிறுவன தொண்டர் குழு ஊடகவியலாளர்கள் என பலரும் இதில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

## நல்லாட்சியை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அப்போது பொலன்நறுவையில் இடம்பெற்ற கூட்டத்துக்காக அத்தரப்பினர் பஸ்கள் மூலம் இலட்சக்கணக்கானோரைக் கொண்டுவந்தனர். நானோ அங்கு வெறும் 6 கூட்டங்களை மட்டும் தான் மிகவும் எளிய முறையில் நடத்தினேன். ஆனால், இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறு யாருக்கு சாதகமாக வந்தது?

அவ்வாறு மக்களின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு மட்டும் தேர்தலில் விழும் வாக்குகளை ஒருபோதும் எவராலும் கணிப்பிட முடியாது. மத பின்னணி, சமூக முறைமை, இனவிகிதாசாரம், கலாசார விழுமியங்கள், மக்களிடையே காணப்படும் பிரச்சினைகள் போன்றன தான் தேர்தலில் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கின்றன.

அந்தவகையில், காலி கூட்டத்துக்கு வருகை தந்தோரையெல்லாம் வைத்துக் கொண்டு எமது அரசை ஒருபோதும் கவிழ்த்துவிட முடியாது.

மேலும், கடந்த காலத்தில் இடம்பெற்ற அபிவிருத்திகளுக்குப் பின்னால் இருந்த பாரிய கடன்களை நிவர்த்தி செய்யும் செயற்பாட்டையும் நாம் தற்போது ஆரம்பித்துள்ளோம். இதற்காக வெளிநாட்டிலிருந்தும் எமக்கு உதவிகள் வந்து கொண்டிருக்கின்றன.

அதேநேரம், ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அழுத்தங்களுக்கு அஞ்சியே எம்மை விமர்சிக்கும் தரப்பினரால் இரண்டு வருடங்களுக்கு முன்னரே ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்பட்டது. நாம் பதவியேற்றபின்னர் அந்தப் பிரச்சினையையும் முற்றாக இல்லாது செய்துள்ளோம். இப்படி நாடு இன்று எவ்வித சிக்கலும் இன்றித் தான் பயணித்துக் கொண்டிருக்கின்றது என்றார்.

## சின்னவில்பட்டி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தேரர் தலைமையில் 55க்கு மேற்பட்ட பௌத்த இனவாதிகள் இங்கு அட்டகாசம் புரிந்துள்ளனர்.

ஞானசார தேரர் தலைமையிலான குழுவினர் நடத்திய தாக்குதலில் 4 மாட்டுப் பன்னைகள் முற்றாக சேதமடைந்ததில் 3 இலட்சங்கள் அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், மாடுகளின் கயிற்றை வெட்டிவிட்டதில் 22 மாடுகளை காணவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மகவலிகங்கை கரையோர பிரதேசங்களில் முஸ்லிம்கள் காலம் காலமாக வசித்து வருகின்றனர். இவர்களின் பிரதான வாழ்வாதாரமாக விவசாயமும் பன்னை வளர்ப்பும் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் முஸ்லிம்கள் 1927ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து வருவதற்கான காணி உறுதிகளும் அவர்களிடம் காணப்படுகின்றன. இவ்வாறிருக்கையிலே பௌத்த இனவாதிகள் வரலாற்று சிறப்பு மிக்க புனித பூமி என்ற போர்வையில் இங்கு அட்டகாசம் புரிந்துள்ளனர். சம்பவம் நடந்த இடத்துக்கு வருகை தந்த பொலிஸாரும் இவர்களின் தாக்குதலைத் தடுப்பதற்கான எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என்று பிரதேசவாசிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இங்கு உரையாற்றிய பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் முஸ்லிம்களின் இறைவனான அல்லாஹ்வை கடும் தூசண வார்த்தைகள் கொண்டு தூற்றியுள்ளார். முஸ்லிம்களை வெளியேற்றுவதற்கு சிங்கள இளைஞர்கள் ஒன்றுபட்ட பொலிஸ் அணியாக ஒன்றுதிரள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வடமத்திய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கொள்ளவில்லை என்று குறித்த உறுப்பினர்கள் தற்போது குற்றம் சுமத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அஸ்மினுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்டு வந்த நிலையில் யாழ் முஸ்லிம் பிரதிநிதிகள் சிலர் யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரையும் கொழும்பு தேர்தல் ஆணையகத்தையும் தொடர்பு கொண்டு விளக்கமொன்றினைக் கோரியிருந்தனர். அதன் பிரகாரம் அஸ்மின் அவர்கள் இராஜினாமா செய்யும் பட்சத்தில் அவருடைய இடத்திற்கு மற்றுமொரு உறுப்பினரை நியமிப்பதில் சட்டச் சிக்கல்கள் ஏற்படும் என்றும், இன்னுமொரு முஸ்லிம் உறுப்பினரை நியமிக்க முடியாது என்றும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல் ஆணையாளரின் கருத்துக்கு அமைவாக 1988ஆம் ஆண்டின் 2/61 ஏ சட்டத்தின் பிரகாரம் குறித்த ஒரு மாகாணத்தின் கீழ்வருகின்ற மாவட்டங்களில் குறித்த ஒரு கட்சிசார்பாக தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்று வெற்றியடையாத உறுப்பினர்களையே குறித்த கட்சிக்கு வழங்கப்படுகின்ற இரண்டு மேலதிக ஆசனங்களுக்கு நியமிக்க முடியும். அவ்வாறு நியமிப்பவர்கள் குறித்த பெயர் விபரங்களை வெற்றியீட்டிய கட்சியின் செயலாளர் தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் வழங்கிவைப்பார். என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் பிரகாரம் தேர்தலில் போட்டியிடாத ஒருவரை தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிக்க முடியாது என்பது வெளிப்படை.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் 5 மாவட்டங்களின் பட்டியலிலும் வேறு எந்த ஒரு முஸ்லிம் வேட்பாளரும் களமிறக்கப்படவில்லை என்பது நிதர்சனமாகும்.

தற்போதைய வடக்கு மாகாண வேட்பாளர் பட்டியலின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தில் 3 வேட்பாளர்களும், வவுனியா மாவட்டத்தில் 2 வேட்பாளர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 வேட்பாளர்களும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 வேட்பாளர்களும் இதுவரை மாகாணசபை உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளாத உறுப்பினர்களாகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு உறுப்பினர் ஒருவருடகால மாகாணசபை உறுப்பினர் பதவியை வகித்தாலும் தற்போது பதவியில் இல்லாத ஆனால் வேட்பாளர் பட்டியலில் அடுத்த நிலையில் இருக்கும் உறுப்பினராக இருக்கின்றார், எனவே வடக்கு மாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலும் நியமிப்பதற்குத் தகுதியுடைய உறுப்பினர்கள் இருக்கின்ற நிலையில் வெளியில் இருந்து ஒரு உறுப்பினரை உள்ளீர்ப்புச் செய்வதில் சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன.

அவ்வாறு ஒரு உறுப்பினரை வெளியில் இருந்து நியமிக்கின்றபோது இதுவரை நியமனம் பெறாத உறுப்பினர்களோ அல்லது நியமனம் பெற்ற உறுப்பினர்களோ நீதிமன்றத் தடையுத்தரவைக் கோரினால் அவ்வாறான ஒரு நியமனம் சிரமசாத்தியமானதாக அமையும் என சட்டத்தரணிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறு நோக்குகையில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் அவர்களுடைய இடத்திற்கு மற்றுமொரு முஸ்லிம் உறுப்பினரை நியமிக்க முடியாத சூழ்நிலையே தற்போது காணப்படுகின்றது என யாழ்ப்பாண முஸ்லிம் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# பொலன்னறுவையில் பிக்கு மீது தாக்குதல்

பொலன்னறுவை பிரதேசத்தை சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவரை இனந்தெரியாத கும்பல் ஒன்று தாக்கியுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை பிரதேசத்தில் உள்ள விகாரைக்கு நேற்று இரவு வந்த குழு அங்குள்ள தேரர்கள் தொடர்பில் வினவி விட்டு 14 வயது பிக்குவை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிக்கு பொலன்னறுவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலன்னறுவை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# விபச்சாரக் குற்றச்சாட்டின் பேரில் இலங்கையர் இருவர் குவைத்தில் கைது!

குவைத் நாட்டின் கைடான் பகுதியில் விபச்சாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இலங்கையைச் சேர்ந்த ஆண் மற்றும் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலில் அடிப்படையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போது இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இலங்கையர்கள் இருவரும் தாம் தங்கியிருந்த அடுக்குமாடிக்குடியிருப்பு வீட்டிலேயே இத்தொழிலை முன்னெடுத்துள்ளனர்.

அவர்கள் இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதாகவும், கட்டணமாக தலா 5 குவைத் தினாரினை வசூலித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 3 மாதங்களாக அவர்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

# வேகமாக பரவி வரும் கணனி வைரஸ்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

உலகில் முழுவதும் வேகமாகப் பரவி வரும் வன் ஏ க்ரை ரன் சம் வெயா வைரஸிலிருந்து கணினிகளைப் பாதுகாக்க விண்டோஸ் மென்பொருளைப் புதுப்பித்து வைத்துக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை கணினி அவசர செயல்பாட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது.

மிகவும் குறுகிய காலத்தில் உலகின் நூற்றுக்கணக்கான நாடுகளில் பரவிய இந்தக் கணனி வைரஸின் காரணமாக பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் கணனிப் பயன்பாடு பெரும் அசௌகரியத்துக்கு உள்ளானது. வேறு கணனி வைரஸ் போல் அல்லாது சைபர் தாக்குதலின் மூலம் கணனி பயன்படுத்துவோரிடமிருந்து கப்பம் கோரப்படுகிறது. இந்த வைரஸ் இலங்கையின் கணனிகளில் உட்புகுந்துள்ளதாக இதுவரை தகவல் வெளியாகவில்லையென கணினி அவசர செயல்பாட்டு ஒன்றியத்தின் பொறியலாளர் ரொஷான் சந்திர குப்த தெரிவிக்கின்றார்.

இந்த வைரஸிலிருந்து தப்புவதற்கு அறிமுகமற்ற மின்னஞ்சல் தகவல்களை பார்வையிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தொடர்ச்சியாக தமது கணனிகளின் வைரஸ் மென்பொருளை புதுப்பித்துக் கொள்வது பொருத்தமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது கணனியில் உள்ள தகவல்களையும் தரவுகளையும் புறம்பாக வெளியில் வேறு சாதனங்களில் சேமித்து வைக்குமாறு அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். அவ்வாறான கருவிகளை கணனி இணைப்பிலிருந்து தவிர்த்து வேறாக வைப்பதன் மூலம் இந்த வைரஸ் தாக்கத்தில் இருந்து தவிர்த்துக் கொள்ள முடியும். இந்த வைரஸ் உலகம் முழுவதும் விண்டோஸ் ரக செயல்பாட்டு கட்டமைப்பு உள்ள கணனிகளை மாத்திரம் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வைரஸிலிருந்து கணனிகளை மீட்பதற்காக மாற்று வைரஸ் மென்பொருள் நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

# மலேசிய எதிர்க்கட்சி குழுவினர் மு.கா.வுடன் தாருஸ்ஸலாமில் சந்திப்பு



(ஏ.ஆர்.எம்.பர்வீன்)

மலேசியாவிலிருந்து இலங்கை வந்துள்ள கூட்டு எதிர்க்கட்சியில் பிரதான பங்காளிக்கட்சியாக அங்கம் வகிக்கும் மலேசிய அமானா கட்சியின் தலைவர் முஹம்மது மத் சாபு தலைமையிலான குழுவினர் நேற்று (15) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்களை சிநேகபூர்வமாக சந்தித்தனர். இந்தச் சந்திப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான தாருஸ்ஸலாமில் மாலை 6.00 மணிக்கு நடைபெற்றது.

மலேசிய சார்பில் மலேசிய பாராளுமன்ற உறுப்பினர் ஹனிபா மைதீன், தொழிலதிபர் பஷீர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான அலிஸாஹிர் மௌலானா, எம்.எச்.எம். சல்மான், மேல்மாகாண சபை உறுப்பினர் அரசாத் நிஸாம்தீன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மாஹிர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மகளிர் அணி அமைப்பாளர் திருமதி சித்தி ரியாயா இப்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமகால அரசியல் நிலவரம், முஸ்லிம் சமூகம் சர்வதேசத்தில் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகள், இலங்கை, மலேசிய முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசார விடயங்கள் என்பன இந்தக்கலந்துரையாடலின் போது பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கான முன்னெடுப்புகள் பற்றியும் பேசப்பட்டன.

## அல்லாஹ்வை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சிங்கள புராதன இடங்களை முஸ்லிம்கள் ஆக்கிரமித்துள்ளதாகவும், வெகரகொடல்ல என்ற சிங்கள புராதன இடம் இன்றளவில் பள்ளியகொடல்லயாக மாற்றப்பட்டுள்ளதாகவும் கூறியே அல்லாஹ்வைத் தூற்றியுள்ளார்.

பௌத்தர்களும் வந்து முஸ்லிம்களின் இடங்களை பிடித்துக்கொள்ளவேண்டும். சட்டவிரோத சிங்கள இளைஞர் படையொன்று தாபிக்கப்பட வேண்டும். சிங்களவர்களுக்கு மாத்திரமே நாட்டின் சட்டம் என்ற நிலை மாறவேண்டும். முஸ்லிம்களை விரட்ட ஒன்றுபட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

55 பேரளவிலான இனவாத குழுவினர் பொலன்னறுவை தம்பாளை சின்னவில்பட்டி பகுதியில் முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமான பன்னைகளை சேதப்படுத்தியுள்ளதோடு, பட்டிகளில் இருந்த மாடுகளையும் கயிறறுத்து விட்டுள்ளனர்.

இதேநேரம் சிவில் சமூக செயற்பாட்டாளர் அன்வர் மனதுங்க, சிங்கலே அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சாலிய, சிங்கலே அமைப்பு மேற்கொண்ட அனைத்துவிதமான இனவாத செயல்களையும் ஆதாரபூர்வமாக குற்றப்புலனாய்வு பிரிவில் சமர்ப்பித்துள்ளார். மஹசோன், சிங்கள ஜாதிக பலமுளுவ அமைப்புக்கு எதிராகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளார்.

## எம்.பி ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை- சுவிஸ்லாந்து என இரட்டை பிராஜாவுரிமைக் கொண்டுள்ள கீதாவுக்கு அரசமைப்பின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினராக நீடிக்க முடியாது என்று மே 3 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவரது வெற்றிடத்துக்கு முன்னாள் அமைச்சரான பியசேன கமகே நியமிக்கப்படுவார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் அறிவிக்கப்பட்டதையடுத்து, கீதாவால் மேற்படி தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே இதுதொடர்பில் நேற்று இடம்பெற்ற விசாரணையின் போது கீதாவுக்கான தீர்ப்பானது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



# வரலாற்று டெஸ்ட் வெற்றியுடன் விடைபெற்ற மிஸ்பா – யூனிஸ்

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி 2-1 எனக் கைப்பற்றி, மேற்கிந்திய மண்ணில் முதன்முறையாக டெஸ்ட் தொடரை வென்று வரலாறு படைத்தது. போட்டியில் 6 பந்துகள் மீதமிருந்த நிலையில் பாகிஸ்தான் அணி 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றதுடன், பாகிஸ்தான் அணிக்காக சுமார் 2 தசாப்தங்களாக விளையாடி வந்த கிரிக்கெட் ஜாம்பவான்களாக யூனிஸ் கான் மற்றும் மிஸ்பா உல் ஹக் ஆகியோர் வெற்றியுடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து விடைபெற்றனர்.



பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் நடைபெற்ற முதலிரண்டு போட்டிகளின் முடிவில் தொடர் 1-1 என சமநிலையில் இருந்தது. மூன்றாவது டெஸ்ட் டொமினிகாவில் நடைபெற்றது.

இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 376 ஓட்டங்களையும், மேற்கிந்திய தீவுகள் 247 ஓட்டங்களையும் எடுத்தன. இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி, 8 விக்கெட்டுக்கு 174 ஓட்டங்களை எடுத்து, டிக்ளேயார் செய்தது. பின், 304 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 4ஆம் நாள் முடிவில் ஒரு விக்கெட்டுக்கு 7 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில், ஐந்தாம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பொறுப்பாக விளையாடிய ரொஸ்டன் செஸ்லி, சதமடித்தார். எனினும், போட்டியின் கடைசி 7 பந்தில் மேற்கிந்திய தீவுகள் அணியின் வெற்றிக்கு ஒரு விக்கெட் மட்டும் கைவசமிருக்க, 102 ஓட்டங்கள் தேவைப்பட்டன. யாசிர் ஷா சுழலில் கேப்ரியல் (4) போல்டானார். ஆறு பந்துகள் மீதமிருந்த நிலையில், 2ஆவது இன்னிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி 202 ஓட்டங்களுக்கு சுருண்டது.

**சாதனை நாயகன் யூனிஸ்**

இதன்மூலம் பாகிஸ்தான் அணி 2-1 என, முதன்முறையாக மேற்கிந்திய தீவுகள் மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்றியது. ஆட்டநாயகன் விருதை மேற்கிந்திய தீவுகளின் ரொஸ்டன் செஸ்லி வென்றார். தொடர் நாயகன் விருதை பாகிஸ்தானின் யாசிர் ஷா கைப்பற்றினார். இதுதவிர, பாகிஸ்தான் அணியின் நட்சத்திர ஜாம்பவான்களாகிய 39 வயதான யூனிஸ் கான், 42 வயதான மிஸ்பா, டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றனர்.



யூனிஸ் கான், அண்மையில் டெஸ்ட் அரங்கில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற புதிய சாதனையையும் படைத்தார். 2000ஆம் ஆண்டு இலங்கை அணிக்கெதிராக சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான யூனிஸ், இதுவரை 118 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 34 சதம், 33 அரைச்சதம் என 10,099 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அத்துடன், பாகிஸ்தான் சார்பாக அதிக சதங்களை குவித்த வீரராகவும், டெஸ்ட் விளையாடுகின்ற அனைத்து நாடுகளுக்கு எதிராக சதம் விளாசிய ஒரேயொரு வீரராகவும் வரலாறு படைத்தார். தனது கிரிக்கெட் வரலாற்றில் மோசமான துடுப்பாட்டம் காரணமாக பல தடவைகள் அணியிலிருந்து வெளியேற்றப்பட்ட அவர், 2005ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணியின் தலைவராகவும் செயற்பட்டார். எனினும் கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட யூனிஸ், 2009ஆம் ஆண்டு தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். 2015 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் பிறகு ஒருநாள் அரங்கிலிருந்து ஓய்வு பெற்ற யூனிஸ் கான், தனது டெஸ்ட் வாழ்க்கைக்கு வெற்றியுடன் முற்றுப்புள்ளி வைத்தார்.

**வெற்றி தலைவர் மிஸ்பா**

பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியில் 2001ஆம் ஆண்டு தனது 25 வயதில் நியூசிலாந்துக்கு எதிராக அறிமுகமான மிஸ்பா, இதுவரை 75 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 10 சதம், 39 அரைச்சதம் என 5222 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற கிரிக்கெட் சூதாட்டத்தினையடுத்து பாகிஸ்தான் அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட மிஸ்பா, இதுவரை 56 டெஸ்ட் போட்டிகளுக்கு தலைவராக செயற்பட்டு, கடந்த 6 வருடங்களில் 26 வெற்றி, 11 டிரா, 19 தோல்வியை பெற்றுத் தந்துள்ளார். ஆசிய நாட்டு தலைவர்களில் வெளிநாட்டு மண்ணில் அதிக டெஸ்ட் வெற்றியைப் பெற்ற முதல் வீரராகவும் மிஸ்பா மாறினார். இதற்கு முன் இந்தியாவின் சௌரவ் கங்குலி 9 வெற்றிகளைப் பெற்றிருந்தார். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் அதிக வெற்றி தேடித்தந்த பாகிஸ்தான் தலைவர் என்ற பெருமை பெற்ற மிஸ்பா, மேற்கிந்திய தீவுகளில் டெஸ்ட் தொடரை கைப்பற்றிய முதல் பாகிஸ்தான் தலைவர் என்ற சாதனையையும் படைத்தார். அத்துடன், 40 வயதிற்குப்பிறகு டெஸ்ட் அரங்கில் இரண்டாயிரம் ஓட்டங்களைக் கடந்த 2ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்ற அவர், இந்நிலையில், டெஸ்ட் தரப்படுத்தலில் பாகிஸ்தான் அணியை முதலிடத்துக்கு இட்டுச் சென்ற தலைவராகவும் மிஸ்பா வரலாற்றில் இடம்பெற்றார்.




# இந்திய – பாகிஸ்தான் தொடர் இலங்கையில் நடத்த ஏற்பாடு

## மோடியிடம் திலங்க கோரிக்கை



பீ.எப்.எம் றிஷாட்

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் தடைப்பட்டுள்ள கிரிக்கெட் தொடரை மீண்டும் நடத்துவதற்கு அனுமதி அளிக்குமாறும், குறித்த போட்டித் தொடரை இலங்கையில் நடத்துவதற்கு கவனம் செலுத்துமாறும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரை இந்தியா பல்வேறு காரணங்கள் காட்டி தொடர்ந்து புறக்கணித்துவருகின்ற நிலையில், இலங்கையில் நடைபெற்ற ஐ.நா.வின் வெசாக் தின நிகழ்வில் கலந்துகொள்ள இலங்கை வருகை தந்த இந்திய பிரதமர் மோடியிடம், கடந்த 12ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஆரம்ப நாள் நிகழ்வின் போதே திலங்க சுமதிபால இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதுதொடர்பில் திலங்க சுமதிபால கருத்து தெரிவிக்கையில், நான் இந்திய பிரதமர் மோடியை கொழும்பில் வைத்து சந்தித்த போது இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியை நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுத்தேன். இதில் குறிப்பாக இவ்விரு நாடுகளுக்குமிடையில் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறாமை இருநாட்டு கிரிக்கெட்டுக்கும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தி வருகின்றது. எனவே குறித்த போட்டித் தொடரை இலங்கையில் அல்லது டுபாயில் நடத்துவதற்கு கவனம் செலுத்துமாறும் இதன்போது நான் இந்திய பிரதமரிடம் கேட்டுக்கொண்டேன்.

இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையே 2015ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை சுமார் 6 கிரிக்கெட் போட்டி தொடர்களை நடத்த இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் முடிவு செய்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

எனினும் பாகிஸ்தான் இராணுவம் எல்லையில் அத்துமீறி தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்ததால் கிரிக்கெட் போட்டி தொடருக்கு இந்திய அரசு அனுமதி வழங்கவில்லை. அத்தோடு பாகிஸ்தானில் தீவிரவாத அச்சுறுத்தல் காணப்படுவதாலும் இந்தியா, பாகிஸ்தான் சென்று விளையாட மறுப்பு தெரிவித்துவருகின்ற நிலையில், எந்தவொரு கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடுவதற்கும் இந்திய அரசு மறுப்பு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்தியாவில் விளையாடுவதற்கு தயாராக இருக்கின்றோம் என்று பாகிஸ்தான் அறிவித்துள்ளமையானது, இந்தியாவின் தொடர் புறக்கணிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையாக அமைந்துள்ளது. இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷஹாரியார் கான் கூறுகையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தங்களது அணியை இந்தியா சென்று விளையாடுவதற்கு தயாராக இருந்த போதிலும், துரதிருஷ்டவசமாக இந்தியாவில் உள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக, இந்திய கிரிக்கெட் சபை எங்களுடன் விளையாடுவதற்கு தயாராக இல்லை. பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்த போதிலும் நாங்கள் இந்தியா சென்று விளையாட தயாராக இருக்கிறோம் என கூறினார்.

# ஆசிய றக்பி சம்பியன்ஷிப் தொடர் இலங்கை அணிக்கு முதல் வெற்றி



பீ.எப்.எம் றிஷாட்

மலேஷியாவின் இப்போ படாங் விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் ஆசிய றக்பி சம்பியன்ஷிப் தொடரின் முதலாம் பிரிவு போட்டிகளின் ஆரம்பப் போட்டியில் இலங்கை அணி முதல் வெற்றியைப் பதிவு செய்தது. பிலிப்பைன்ஸுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் 24 - 13 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலங்கை வெற்றிபெற்றது.

இடைவேளையின்போது இலங்கை 11 - 0 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இலங்கை 2 ட்ரைகள், ஒரு கொன்வேர்ஷன், 4 பெனல்டிகள் வாயிலாகவும் பிலிப்பைன்ஸ் 2 ட்ரைகள், ஒரு பெனல்டி வாயிலாகவும் புள்ளிகளைப் பெற்றன.

இலங்கை சார்பாக தனுஷ்க ரஞ்சன் (16 நி.), ரிச்சர்ட் தர்மபால (65 நி.) ஆகிய இருவரும் தலா ஒரு ட்ரை வைத்தனர்.

ஒரு ட்ரைக்கான மேலதிகப் புள்ளிகளை நிலின விஜேசிங்க (66 நி.) பெற்றுக்கொடுத்ததுடன் 3 (4 நி., 40 நி., 62 நி., 68 நி.) பெனல்டிகளையும் இலக்கு தவறாமல் உதைத்தார்.

இலங்கை தனது இரண்டாவது போட்டியில் ஐக்கிய அரபு இராச்சியத்தை நாளை சந்திக்கவுள்ளதுடன், கடைசிப் போட்டியில் மலேஷியாவை எதிர்வரும் சனிக்கிழமை சந்திக்கவுள்ளது.

இதேவேளை ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிராக நடைபெற்ற போட்டியில் 36 - 22 என்ற புள்ளிகள் அடிப்படையில் மலேஷியா வெற்றிபெற்று அணிகள் நிலையில் நிகர புள்ளிகள் அடிப்படையில் முதலாம் இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெய்மர் ஹெட்ரிக்: பார்சிலோனா வெற்றி

லா லிகா கால்பந்து லீக் போட்டியில், நெய்மர் ஹெட்ரிக் கோல் அடித்து கைகொடுக்க, பார்சிலோனா அணி 4-1 என லாஸ் பால்மாஸ் அணியை வீழ்த்தியது.

ஸ்பெயினில், உள்ளூர் கிளப் அணிகள் பங்கேற்கும் லா லிகா கால்பந்து தொடர் நடக்கிறது. இதில் நடப்பு சம்பியன் பார்சிலோனா, ரியல் மெட்ரிட் உள்ளிட்ட 20 அணிகள் பங்கேற்கின்றன. லாஸ் பால்மாஸ் நகரில் நடந்த லீக் போட்டியில் பார்சிலோனா, லாஸ் பால்மாஸ் அணிகள் மோதின. போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணிக்கு நெய்மர் (25ஆவது நிமிடம்), லூயிஸ் சுவாரஸ் (27ஆவது) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். முதல் பாதி முடிவில் பார்சிலோனா 2-0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பால்மாஸ் அணிக்கு 63ஆவது நிமிடத்தில் பெட்ரோ பிகால், ஒரு கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய நெய்மர், 67, 71ஆவது நிமிடத்தில் தலா ஒரு கோலடித்து, ஹெட்ரிக் சாதனை படைத்தார்.



ஆட்டநேர முடிவில் பார்சிலோனா அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதனையடுத்து 87 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

## சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடர்:

# இலங்கை வீரர்கள் பங்கேற்ற பயிற்சி வெற்றிகரமாக நிறைவு

பீ.எப்.எம் றிஷாட்

இங்கிலாந்தில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடருக்காக இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் கடந்த 9ஆம் திகதி முதல் கண்டி - பல்லேகலை மைதானத்தில் மேற்கொண்ட பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்து கொழும்புக்கு திரும்பியுள்ளனர்.



கடந்த 6 நாட்களாக இடம்பெற்ற இவ் விசேட பயிற்சிகளில் சம்பியன் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் இலங்கை வீரர்களுக்கு களத்தடுப்பு, துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன், சிறப்பு கருத்தரங்குகளும் வழங்கப்பட்டன. அத்துடன், இந்த தொடருக்காக இலங்கை அணிக்கு வேகப்பந்துவீச்சு ஆலோசகராக நியமிக்கப்பட்ட தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரர் அலன் டொனால்ட்டினால் விசேட வேகப்பந்துவீச்சுப் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இந்நிலையில், பயிற்சிகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பியுள்ள இலங்கை வீரர்களுக்கு 3 நாட்கள் ஓய்வு வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் வியாழக்கிழமை இங்கிலாந்து நோக்கி பயணமாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ரொனால்டோவின் 400ஆவது கோல்



லா லிகா போட்டித் தொடரின் மெட்ரிட் நகரில் நடந்த மற்றொரு போட்டியில் ரியல் மெட்ரிட், செவில்லா அணிகள் நேற்றுமுன்தினம் மோதின. இப்போட்டியில் அபாரமாக விளையாடிய கிறிஸ்டியானோ ரொனால்டோ 2 கோல் அடித்து கைகொடுக்க, ரியல் மெட்ரிட் அணி 4-1 என வெற்றி பெற்றது.

இதன்படி கடந்த 2012ஆம் ஆண்டுக்குப் பிறகு ரியல் மெட்ரிட் அணி லா லிகா கிண்ணத்தை வெல்லும் முனைப்பில் உள்ளது.

இந்நிலையில், கழக மட்டப் போட்டிகளில் 400ஆவது கோலையும் அவர் பெற்றுக்கொண்டு புதிய சாதனை படைத்தார்.

# 100 போட்டிகளில் மும்பைக்கு வெற்றி

டி20 கிரிக்கெட் போட்டிகளில் இதுவரை 100 போட்டிகளில் வென்ற ஓரே அணி என்ற பெருமையை ஐபிஎல் தொடரின் இடம்பெற்றுள்ள மும்பை இந்தியன்ஸ் அணி பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் வென்ற அந்த அணி புதிய சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளது. மும்பை அணியின் இவ்வெற்றி டி20 போட்டிகளில் அந்த அணி பெற்ற 100ஆவது வெற்றியாகும். அந்த அணி மொத்தம் 176 போட்டிகளில் விளையாடியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக தடைக்கு உட்பட்டு விளையாடாத சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 156 போட்டிகளில் 94 போட்டிகளில் வென்று இரண்டாவது இடத்தில் உள்ளது. ஐபிஎல் தொடரில் ஆடும் மற்றொரு அணியான கொல்கத்தா அணி இந்த பட்டியலில் 85 வெற்றிகளுடன் 5வது இடத்தில் உள்ளது.

# சங்காவின் அதிரடி சதம் சர்ரே அணிக்கு வெற்றி



இங்கிலாந்தின் லண்டனில் நடைபெற்றுவரும் ரோயல் லண்டன் ஒருநாள் கிண்ணத் தொடரின் நேற்றுமுன்தினம் ஹம்சையர் அணிக்கெதிரான போட்டியில் இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர வீரருமான குமார் சங்கக்கார மீண்டும் சதம் விளாசி அசத்தியுள்ளார்.

இந்த போட்டியில் 238 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு சர்ரே அணி துடுப்பெடுத்தாடிய போதே சங்கக்கார சதம் விளாசினார். இவர் ஆட்டமிழக்காமல் 121 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள் மற்றும் 13 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 124 ஓட்டங்களை குவித்து சர்ரே அணிக்கு வெற்றியை பெற்றுக்கொடுத்தார். இதன்படி அவ்வணி புள்ளிப்பட்டியலின் 3ஆவது இடத்துக்கு முன்னேறியது. அத்துடன் முதற்தர ஒருநாள் போட்டிகளில் 38ஆவது சதத்தைப் பூர்த்தி செய்து 19 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரராக வரலாற்றில் இடம்பெற்றுள்ள சங்கக்கார, அம்மைல்கல்லை எட்டிய உலகின் 4ஆவது வீரராகவும் மாறினார்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 16TH MAY 2017